Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24
ஜன. 22 - 28, 2009
ரூபா 30.00
பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 798

## கிளிநொச்சி – காஸா
## கொழும்பு – புதுடில்லி
ஒரே பார்வையில்





## தலவாக்கலையில் எரியும் அரசியல் தீ!

## வன்னிச் சமரின் இறுதிப் பொறி!

மூன்றாவது கண்

## சட்டமும் சந்தர்ப்பவாதமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் தரும் சோதி

"**அருள்** வேண்டி நிற்கின்றேன்" என்று சிலர் கூறுவதைக் கேட்டிருக்கிறோம், இதற்கு இரண்டு பொருள்கள் கொள்ளலாம். "இறைவனின் அருளை வேண்டி நிற்கின்றேன்" என்பது ஒன்று. அருள் பொருந்திய மனத்தை எனக்குத்தா என்பது மற்றுமொன்று. இதில் உண்மையிலேயே வேண்டத்தகுந்தது என்ன? அருள் மிகுந்த உள்ளத்தைப் பெற்றுவிட்டால் மண்ணுலக உயிர்களுக்கெல்லாம் நன்மை செய்யத் தகுதி பெற்றுவிட முடியும். இந்த அருள் நிறைந்த உள்ளத்தை ஞானியரும் பெற்றதில்லையே என்பதை விளக்க வந்த திருமூலர்.

**"உற்று நின்றாரொடும் அத்தரு சோதியைச்**
**சித்தர்கள் என்றுந் தெரிந்தறிவார் இல்லை**
**பத்திமையாலே பணிந்தடியார் தொழ**
**முத்தி கொடுத்தவர் முன்பு நின்றானே".**

இறைவனை வேண்டி நின்றாலும் சித்தர்கள் கூட சோதியாய் விளங்குகின்ற இறைவனை அறிந்தாரில்லை. இறைவனைத் தொழுது நிற்கின்ற அடியவர்களுக்கே அவன் கருணை செய்பவனாயுள்ளான் என்பதாம்.

**என்.எஸ்.ராஜா, தம்பலகமம்.**

# ஆன்மீகம்



## நம்மை நினைக்கிறவர்

**நம்முடைய** தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது. சங்136;23

சகோதரனே!சகோதரியே! நீ தாழ்மைப்பட்டுப் போனாயா? மற்றவர்களால் அலட்சியமாக எண்ணப்படுகிறாயா? கர்த்தர் உன்னை நினைத்திருக்கிறார். அவர் உன்னை உயர்த்துகிற தேவனாக இருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலே உபத்திரவப்பட்டார்கள். அடிமையாக இருந்தார்கள். வேதம் சொல்லுகிறது 'தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டுத்தாம் ஆபிரஹாமோடும், ஈசாக்கோடும், யாக்கோப்போடும் செய்த உடன்படிக்கையை நினைவு கூர்ந்தார். யாத்2:24

அன்றைய தினம் இஸ்ரவேல் ஜனங்களின் பெருமூச்சைக் கேட்ட தேவன் உன்னுடைய பெரு மூச்சையும் கேளாதிருப்பாரோ? உன்னுடைய உள்ளத்தின் குமுறலின் சத்தத்தையும் கட்டாயமாகச் செவிமடுப்பார். வெளியே சொல்லமுடியாமல் உள்ளத்திலே துயரங்களை அடக்கிக்கொண்டிருக்கலாம். எல்லாவற்றையும் ஆண்டவராகிய இயேசுவிடம் கொடுத்துவிடு. அவரால் உன்னை உயர்த்தவும், உன் இருதயத்திலே சந்தோஷத்தைக் கொடுக்கவும் ஆகும். "நீ என் பார்வைக்கு அருமையானபடியால் கனம் பெற்றாய்;" ஏசாயா43:4 ஆம் நீ தேவனுடைய பார்வையிலே அருமையானவன்(ள்). யார் வெறுத்தாலும் உன்னை ஒருவர் நேசிக்கிறார். அவரையே பற்றிப் பிடித்துக்கொள். அவர் உன்னை உயர்த்துவார். ஆமேன்.

**-போல் ஜோன், தெல்தெனிய.**

## உத்தம நபியின் உபதேசம்

**ஒரு நாள்** "உம்பி" நபியிடம் ஒரு மனிதர் வந்து தமக்கு ஏதேனும் தருமாறு கேட்டார். இதைக் கேட்ட இறை தூதர் அவர்கள் அம்மனிதரிடம் உங்களுடைய வீட்டில் ஏதாவது இருக்கிறதா எனக் கேட்டார்கள்.

அதற்கு அவர் ஆம் எனது வீட்டில் ஒரு போர்வையும் ஒரு பாத்திரமும் இருக்கிறது எனக் கூறினார். அண்ணல் நபி(ஸல்) அவர்கள் அவ்விரண்டையும் கொண்டு வருமாறு அவரைப் பணித்தார்கள்.

போர்வையும்,பாத்திரமும் அவரால் அங்கு கொண்டு வரப்பட்டன. இவ்விரண்டையும் இறை தூதர் அவர்கள் ஏலத்தில் விற்றார்கள். இதற்கு இரண்டு திர்ஹம்கள் கிடைத்தன. அவ்விரண்டு திர்ஹம்களையும் அம்மனிதரிடம் கொடுத்த அண்ணல் நபி(ஸல்) அவர்கள் அவற்றில் ஒரு திர்ஹத்துக்கு உணவு வாங்கி அவரது குடும்பத்துக்குக் கொடுக்கும்படியும் மற்றத் திர்ஹத்துக்கு ஒரு கோடரித் வாங்கி விறகு வெட்டி விற்பனை செய்யும்படியும் கூறினார்கள்.

இறை தூதரின் இவ் உபதேசம் கேட்ட அம்மனிதர் அவ்வாறு செய்ய, அவருக்கு வருமானம் கிடைத்தது. இரந்துண்டு வாழ்வதற்கும் இவர் முற்றுப்புள்ளி வைத்தார். ஒவ்வொரு மனிதனும் உழைத்து வாழ வேண்டும். இதுவே உத்தம நபியின் உபதேசம்.

**-எம். சீ. கலீல், கல்முனை -05.**

---

### கவிதைப் போட்டி இல.795



பாராட்டுக்குரியது

## தன்னம்பிக்கை

'உறவுகளை' இழந்தாலும்
'உணர்வுகள்' இழக்கவில்லை
'தன்னம்பிக்கை' உள்ளவரை
தளராது எங்கள் மனம்!
தூக்குகின்றோம்
செங்கற்களை
எங்கள் வறுமையை விரட்ட
யாரிடமும் கையேந்த
நாங்கள் தயாரில்லை.

-பாலா,
மட்டக்களப்பு.

# கவிதைப் போட்டி இல.798



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி. 27.01.2009

**கவிதைப் போட்டி இல. 798**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல. 1772, கொழும்பு.**

### போராட்ட வழி

காலையில்
கல்விக்காய் நூல்களையும்
மாலையில்
தொழிலுக்காய் கல்லையும்
சுமக்கிறோம்
நாளை
வேலையில்லாப் பட்டதாரிகள்
என்பதை
வேரோடழிப்போம்.

-அ.கா.மு.றிஸ்வின்,
மூதூர்-01.

### புதிய தலைமுறை

வெறும் அடையாளங்களால்
முரண்பட்டு
ஆத்மாவைத் தொலைத்து
தமக்குள் போரிட்டு மடியும்
இன்றைய தலைமுறையினரின்
மூளைகளை
சூளைகளிலிட்டு
செங்கற்களாக வடித்து
சுமந்து வருகிறது
புதிய தலைமுறை.

-உயிர்ப்பித்தன்,
கொழும்பு.

### கடைசிக் கல்

வயிற்றில் உங்களைச்
சுமந்தபோது பெற்றவள்
சொன்னதில்லை சுமையென்று
பாடசாலை சென்றபோது
கடத்தி
வந்து கொத்தடிமையாக்கிய
பாவிகள். பால் வடியும்
உங்கள்
முகம் கண்டும் கலங்காத
அந்தக் கல்நெஞ்சக்காரரின்
கல்லறைக்கு இடப்போகும்
கடைசிக் கற்களைத்தான்
மௌனமாகச் சுமந்து
நிற்கின்றார்கள் இந்தப்
பிஞ்சுகள்.

-செ.ஜெயசோதி,
வெள்ளவத்தை.

### தலைவிதி

கல்வியைத்
தேடிக் கற்கும்
வயதுள்ள - நம்
தலைகள்...
கற்களை
நாடிச் சுமக்கும்
விதிக்கு
விலை போய்விட்டனவா?

-அபூ சஊத்,
கொச்சிக்கடை.

### சீவிப்பதற்காக

மண்ணைப்
பொன்னாக்கும்
மகிமை எமக்
கில்லை...

மண்ணைக் கல்லாக்கிச்
சுமக்கிறோம்
நாங்களும்
வாழவேண்டும் என்பதற்காய்!

-ஜிந்து,
கிண்ணியா - 05.

### நாங்களா?

பட்டப்படிப்பை முடித்து
செங்கம்பளம் விரித்து அதன் மீது
நடந்து செல்ல வேண்டிய நாம்
வெயிலில் செங்கல் சுமக்கிறோம்.
ஏன் எங்களை நாளைய
சமுதாயம் என்கிறார்கள்?

-ச.சசிகரன், வெள்ளவத்தை.

### கஞ்சி

நாங்கள் உயர முடியாத காரணம்
எம்மேல் சுமத்தப்பட்ட பளுக்கள்தான்
கல்லையும், மண்ணையும்
காய்ச்சிக்குடிக்க
கடவுள் எமக்குக் கற்றுத் தராதபடியால்
கல் சுமந்த வருவாயில் கஞ்சி காய்ச்சிக்
குடிக்கின்றோம்.

-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### சுமை

யுத்தம் உண்டாக்கிய வறுமையா
இயற்கையின் கோபம் ஏற்படுத்திய
நிலைமையா
கல்வி கற்க புத்தகச் சுமை
தூக்க வேண்டிய வயதில்
கற்களின் சுமையா...?

-ரகுமான் தம்பி, புத்தளம்.




# உங்கள் பக்கம்

## பொருட்களின் விலைப்பட்டியலை பார்வைக்கு வைக்குமாறு வேண்டுகோள்

**வர்த்தக** நிலையங்களில் பொருட்களின் விலைப்பட்டியலை, நுகர்வோர் பார்வைக்கு வர்த்தகர்கள் வைப்பதில்லையென பொதுவாக பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். பொதுவாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள மொத்த விற்பனை நிலையங்களிலும் சில்லரை பலசரக்குக் கடைகளிலும் உணவுப் பண்டங்கள் தயாரிக்கும் பேக்கரி மற்றும் ஹோட்டல்களிலும் விலைப்பட்டியல் போடப்படுவதில்லை. இதன் காரணமாக நுகர்வோர்கள் பெரும் அசௌகரியத்திற்குள்ளாகின்றனர். தற்போதைய பொருட்களின் விலையேற்றம் காரணமாக மக்கள் பெரும் கஷ்டத்திற்கு மத்தியில் தங்களின் வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. ஆனால் சில வர்த்தகர்கள் தங்களின் போக்கில் மனிதாபிமானமற்ற நிலையில் பாவனையாளர்களிடம் குறிப்பிட்ட கட்டுப்பாட்டு விலையை விடவும் கூடுதலான விலைக்குப் பொருட்களை விற்றுப் பணம் சம்பாதிக்க முற்படுகின்றனர். பல அத்தியாவசியப் பொருட்களுக்கு அரசாங்கம் கட்டுப்பாட்டு விலையை நடைமுறைப் படுத்தியபோதும் அதனைச் சில வர்த்தகர்கள் பொருட்படுத்தாது மனித நேயமற்ற முறையில் பாவனையாளர்களிடம் நடந்துகொள்வது மிகவும் வருந்தத்தக்க செயலாகும். அதிகமானோர்களுக்குத் தற்போதைய பொருட்களின் உரிய விலைகள் உட்பட கிலோகிராம் என்னவென்று தெரியாமல் உள்ளனர். ஆகவே வணிகத்துறையில் ஈடுபடுவோர் தங்களின் வியாபாரத்தில் நீதி, நேர்மையுடன் நடந்துகொள்வது கட்டாயக் கடப்பாடாகும். ஆகவே தயவு செய்து பொருட்களின் விலைப்பட்டியலை நுகர்வோர் பார்வைக்கு வைக்குமாறு 'தினமுரசு' உங்கள் பக்கம் வாயிலாக வேண்டி நிற்கின்றேன்.

**-சே.தா.ம. பஹிமா,**
**மாளிகைக்காடு - 01.**

# வாசகர் சாலை

## பொங்கும் பானை முரசு

முரசே!... நீ
மனந்திறந்த மலர் வாயில்

வானவில் பௌர்ணமி
பசுமைக் கம்பளம்
கலந்த விளக்கு நீ

அகிலம் பார்க்கும்
வானமும் நீ
அகிலம் பார்த்த
வானமும் நீ

பொங்கி வழியும்
பானையும் நீ
எனக்குப் பிடித்த
பாணியும் நீ
வாசகர்கள் அழைக்கும்
தேனீயும் நீ.

**அ.கா.மு.றிஸ்வின். மூதூர்.**

## பொலிவுடன் திகழ புதுவருட வாழ்த்துக்கள்

முரசின் முன்னேற்றத்திற்காக அதன் ஆசிரியர் குழாம் எத்தனை இடர்களுக்கும் மத்தியில் எழுத்துச் சுதந்திரம் மூலம் எடுத்துக் கூறும் விடயங்கள் இதயத்தைத் தொடுகின்றன. கடந்த பதினைந்து வருடங்களாக முரசின் சேவை தங்கு தடையின்றி தரணி எங்கும் சென்றடைந்து உண்மைகளை உலகறியச் செய்கிறது. இதனால் இதற்கு வாசகர் வட்டம் வையகம் எங்கும். ஊடகங்களில் உச்ச நிலையடைந்துள்ள முரசுக்கு, பிறந்த புத்தாண்டு 2009 பொலிவுடன் திகழ புதுவருட வாழ்த்துக்கள்.

**எம்.சீ.கலீல் கல்முனை-05**

## முத்தமிழ் பொழியும் முரசுக்கு!

**முரசே** முதல் வணக்கம். வியாழன்தோறும் விடியலிலே உன்மேல் விழிவைக்கக் காத்திருப்பேன். எத்துறை சார்ந்தோருக்கும் களமாய் விளங்கும் எம் இனிய நண்பனே. கவிதைகள், கருத்துக்கள், செய்திகள் எனச் சுவாரஸ்யமான கலவைகளைத் தந்து களிப்பூட்டுகின்றவனே மக்களுக்காக மகத்தான சேவை நாட்டுபவனே- உன் சேவை தொடரட்டும். உன் ஓசை ஓங்கி ஒலிக்கட்டும். ஒளி பிறக்கட்டும்.

**வி.திவாகரன்,**
**மல்லாகம்.**

## தினமுரசு குடும்பத்திற்கே...

**சூப்பர்** பத்திரிகை எது என்று கேட்டால் பிஞ்சுக் குழந்தைகள் கூடச் சொல்லும் தினமுரசு வாரமலர் என்றுதான். ஓ முரசே! எப்படித்தான் முடிகிறது அனைத்து உள்ளங்களையும் ஒரே வகையில் கவர்ந்திழுப்பதற்கு? எங்கள் வீட்டுப் பிள்ளைகள் கூட உன்னைக் கண்டவுடன் அதனைத் தன்னிடம் தரும்படி அடம்பிடிக்கிறது. வாரம் ஒருமுறை உன்னைக் காணும் என் கண்கள் தினமும் உன்னைக் காணத் துடிக்கிறது. வரம் தருவாயோ முரசே...

**-எஸ்.எச்.ஐ.ஹிமாயா, கொழும்பு - 14.**

## தொடரட்டும் பணி!

காலத்துக்குக்காலம் புதுமைகளைப் புகுத்தி, பத்திரிகை உலகிற்குப் புது வழிசமைக்கும் முரசின் சமீபத்திய கட்டுரையான மேச்சல் வெளி பிரமாதம்! நாசுக்காகப் பல விடயங்களைப் போட்டு உடைக்கின்றார் எமது சுல்தான். சபாஷ் சுல்தான் தொடரட்டும் உங்கள் பணி...!

**-எச்.முபாரக், கிண்ணியா.**

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772,கொழும்பு.
தொலைபேசி: -011 --2360903
தொலை நகல் (Fax):-011 - 2360920
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk
murasu@live.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைக் கடற்பரப்பில் தீவிர கண்காணிப்பு

இன்னமும் புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் முல்லைத் தீவிலுள்ள இருபது கிலோமீற்றர் நீளமான கடற்பகுதியை அண்டிய வலய கடற்பரப்பில் கடற்படையினர் கண்காணிப்பு நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர். முல்லைத்தீவில் சுமார் 500 அல்லது 600 சதுர கிலோமீற்றர்கள் கொண்ட நிலப் பரப்புக்குள்ளேயே புலிகள் முடக் கப்பட்டிருக்கின்றனர் என்று படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த இருபது கிலோமீற்றர் நீளமான கடல் வலயத்துக்கூடாகப் புலி முக்கியஸ்தர்கள் தப்பிச் செல்வதைத் தடுப்பதற்காகவே பாதுகாப்புப் பலப் படுத்தப்பட்டிருப்பதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அந்தப் பகுதியில் சுமார் 25 கடல் மைல் எல்லைக்குள் நான்கு வலயங்களாகக் கடற்படையினரின் விசைப் படகுகள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

24 மணி நேரமும் கண்காணிப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தாக்குதல் படகுகள், விசைப் படகுகள், ராடார் ஆகியவை எந்த நேரமும் இயங்கிக்கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பிரபாகரன் தப்பிச் சென்றிருக்கலாமெனச் சில களநிலை ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்த போதிலும், புலி முக்கியஸ்தர்கள் எவரும் தப்பிச் செல்லாமல் தடுப்பதற்காகவே முல்லைத்தீவை அண்டிய கடற்பரப்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாக சிரேஷ்ட கடற்படை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

### இலங்கைத் தமிழர் பிரச்சினையை அரசியல் இலாபத்துக்குப் பயன்படுத்த வேண்டாம்!

# தொல் திருமாவளவனுக்கு தமிழக முதல்வர் எச்சரிக்கை




கூடலூரிலும் விழுப்புரத்திலும் எரிக்கப்பட்ட பஸ்கள்

சென்னை, ஜன.21

'இலங்கையின் தேசியக் கொடியை எரித்துக் கைகளை சுட்டுக் கொள்ள வேண்டாம்'' என்று விடு. சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல் திருமாவளவனுக்குத் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி எச்சரிக்கை விடுத்துள்ளார். சில தமிழகக் கட்சிகள் இலங்கைப் பிரச்சினையைத் தமது அரசியல் முன்னேற்றத்துக்குப் பயன்படுத்துகின்றன என்றும் கலைஞர் கண்டனம் தெரிவித்தார்.

தொல் திருமாவளவனையும், பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர் ராமதாஸையும் குறிவைத்தே கலைஞர் இந்தக் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். ''தமிழ் நாட்டில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகள் இப்போது காங்கிரஸ் கட்சிக்கு எதிராக வசைமாரிகள் பொழியப் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கையில் தமிழர்களுக்கிடையிலான உட்பூசல்கள் அவர்களின் உரிமைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தியதைப்போன்று தமிழகத்தில் அரசியல்வாதிகள் மத்தியில் நிலவும் அபிப்பிராய வித்தியாசங்கள் எமது ஐக்கியத்தைச் சிதைத்துவிடும்'' என்றும் கலைஞர் தெரிவித்தார். தன்னைத் தமிழக முதல்வர் பதவியிலிருந்து அப்புறப்படுத்துவதற்குச் சிலர் முயற்சி செய்கிறார்களென்றும் கலைஞர் கண்டனம் தெரிவித்தார். எதற்காகத் திருமாவளவன் அடுத்தடுத்து எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறார் என்பதைத் தன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை எனத் தெரிவித்த கலைஞர், அவர் சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பதற்கு முதல் நாள் கூடத் தன்னை வந்து சந்தித்தாரென்றும், ஆனால் தனது உண்ணாவிரதம் பற்றித் தனக்கு எதுவுமே தெரிவிக்கவில்லையென்றும் குற்றஞ்சாட்டினார்.(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## கண்ட இடத்தில் சுடுமாறு பொலிஸாருக்கு உத்தரவு

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவளிப்பதாகக் கூறிக்கொண்டு பஸ்களைக் கொளுத்தி, அரச சொத்துக்களைச் சேதப்படுத்தியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று தமிழகப் பொலிஸ் பணிப்பாளர் நாயகம் கே.பி.ஜெயின் தெரிவித்தார். வன்செயல்களில் ஈடுபடுவோரைக் கண்ட இடத்தில் சுடுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


தமிழகத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற எதிர்ப்பு



கலைஞர் கருணாநிதி

நடவடிக்கைகளின்போது 54 பஸ்கள் எரித்து நாசமாக்கப்பட்டன. இதனால் பல இடங்களுக்கான பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன. வன்செயல்களில் ஈடுபட்டார்களென்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் 180 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் பொலிஸ் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

## வடக்கின் அபிவிருத்திப் பணிகளில் முன்னேற்றப் பாய்ச்சல்!
## ஏ-9 வீதியைத் திறப்பதற்கான முன்னோடிப் பணிகள் ஆரம்பம்




அதிகாரிகளுடன் அமைச்சர் தேவானந்தா சந்தித்துப் பேசியபோது..

யாழ்ப்பாணம் உட்பட வடக்குக்கும் நாட்டின் பெருநிலப் பரப்புக்கும் இடையிலான தரைவழிப் பாதையான ஏ-9 வீதியை மக்கள் பாவனைக்குத் திறந்து விடுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. வடமாகாண விஷேட செயலணிக் குழுவின் தலைவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடமும், பெருந்தெருக்கள் அமைச்சர் ரி.பி.எக்கநாயக்காவிடமும் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க ஏ-9 வீதியைப் புனரமைப்பதற்கான மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மதவாச்சிக்கும் - யாழ்ப்பாணத்துக்குமிடையிலான 110 கிலோமீற்றர்கள் நீளமான பாதையில் செப்பனிடும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படுமென அமைச்சர் எக்கநாயக்கா முரசுக்குத் தெரிவித்தார். மதிப்பீட்டுப் பணிகள் முடிந்ததுமே திருத்த வேலைகள் மற்றும் கண்ணிவெடிகள் அகற்றும் வேலைகள் ஆகியன ஆரம்பிக்கப்படுமென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். இது தொடர்பாகச் சர்வதேசக் கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களுடனும் ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடனும் அமைச்சர் ஏற்கனவே கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

பாதை திறக்கப்பட்டதும் உடனடியாக இ.போ.ச. பஸ் சேவைகளை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதற்கட்டமாக ஐந்து இ.போ.ச. பஸ்கள் பரீட்சார்த்த சேவையில் ஈடுபடுத்தப்படுமெனவும் தெரியவருகிறது. இதனையடுத்து நாளாந்தம் பத்து எக்ஸ்பிரஸ் பஸ் சேவைகளைக் கொழும்புக்கும் - யாழ்ப்பாணத்துக்குமிடையில் மேற்கொள்வதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்துக்கு முன்னதாக இந்தப் பாதை திறக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## புலிகளுக்கு எதிராகவும் போராடுவோம்
## கம்யூனிஸ்ட் பாண்டியன் கருத்து



தா.பாண்டியன்

புலிகள் வன்னியில் தமிழ் மக்களை மனிதக் கேடயங்களாகப் பிடித்து வைத்திருந்தால் நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம். அவ்வாறு நிலைமை இருந்தால் நாங்கள் புலிகளை எதிர்த்துப் போராட்டங்களை நடத்தவும் தயாராகவே இருக்கின்றோம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழக மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் தெரிவித்தார். நிருபர்களின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

சிவ்சங்கர் மேனனின் இலங்கை விஜயம் தொடர்பாகக் கருத்துக்கூறிய தா.பாண்டியன், ''அவர் இலங்கை அரசிடம் போர் நிறுத்தத்தை வலியுறுத்தவில்லையென்பது ஏமாற்றமாகவே இருக்கிறது'' என்றார். அப்போது ''இலங்கையில் தமிழ் மக்களைப் புலிகள் மனிதக் கேடயங்களாகப் பிடித்து வைத்துள்ளனரெனக் கூறப்படுகிறதே'' என்று கேட்டதற்குப் பதிலளித்த தா.பாண்டியன், ''இலங்கையின் உண்மை நிலையை அறிந்துகொள்ள நடுநிலையான நான்கு தமிழர்களை அங்கு அனுப்ப வேண்டும். அவர்கள் கிளிநொச்சிக்கும். முல்லைத்தீவுக்கும் சென்று நிலைமைகளைக் கண்டுவர வேண்டும். அவர்கள் புலிகள்தான் தமிழ் மக்களை கேடயமாகத் தடுத்து வைத்திருப்பதாகச் சொன்னால், நாங்கள் புலிகளுக்கு எதிராகப் போராடவும் தயாராக இருக்கின்றோம்'' என்றார்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## பிரபாகரன் தப்பிச் சென்று விட்டாரா? இல்லையா? இராணுவத் தளபதி என்ன சொல்கிறார்?

''பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் இறுதிக் கட்டத்தை எட்டியிருப்பதால், புலி இயக்கத் தலைவர் பிரபாகரன் முல்லைத்தீவுப் பகுதியை விட்டுத் தப்பிச் சென்றிருப்பார்'' - இவ்வாறு இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை மேற்கோள்காட்டி 'ஆசியன் ட்ரிபியூன்' இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. மேற்படி செய்தி நிறுவனத்தின் இந்தியச் செய்தியாளரான எம்.ராமராவ் கடந்த 19 ஆம் திகதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். ''மலேசியாவின் பினாங் மாகாணத்திலுள்ள ஏதாவது கரையோர மறைவிடத்துக்குப் பிரபா-கரன் தப்பிச் சென்றிருக்கலாமென ஊகங்கள் தெரிவிக்கப்படுகிறதே'' என்று இராணுவத் தளபதியிடம் கேட்டபோது, அவர் அதற்குப் பதிலளிக்கவில்லையென்றும் இந்தியச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

பிரபாகரன் சொகுசு வாழ்க்கையை நேசிப்பவரென்றும், இதனால் இராணுவம் அவரது மறைவிடத்தை நெருங்கும் வரை அவர் அங்கிருக்கமாட்டாரென்று தான் கருதுவதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்தாரென்றும் 'ஆசியன் ட்ரிபியூன்' செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 18 மைல்கள் நீளமும் 9 மைல்கள் அகலமுள்ள சிறிய துண்டுக் காட்டுப் பகுதிக்குள் சிக்கிய பிரபாகரன் ஒன்றில் கடல் மார்க்கமாகத் தப்பிச் சென்றிருக்க வேண்டும் அல்லது சயனைட்டையே தஞ்சமாகக் கொண்டிருக்க வேண்டுமென்று புன்சிரிப்போடு இராணு-வத் தளபதி கூறினாரென்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. முல்லைத்தீவுக்குள் முடக்கப்பட்டுள்ள பிரபாகரன் தப்பிச் செல்வதற்கு இருக்கக்கூடிய ஒரே வழி கடல் மார்க்கம்தான். ஈராக்கின் முன்னாள்



இராணுவத் தளபதி சரத் பொன்சேகா

ஜனாதிபதி சதாம் ஹுசைனைப் போல அவர் உயிருடன் பிடிபடுவதற்கான சாத்தியங்கள் இல்லையென்றும் கூறப்படுகிறது.

''பிரபாகரனால் எப்படித் தப்பிச் சென்று வெளிநாடொன்றில் வாழ முடியும்?'' என்ற கேள்விக்குப் பதிலளித்த இராணுவத் தளபதி, ''எவரிடமாவது பத்து இலட்சம் அமெரிக்க டொலர்கள் இருக்குமென்றால், உலகில் வேறெங்காவது சொகுசாக வாழ விரும்பும் எவருக்கும் உதவுவதற்குப் பல்வேறு சட்ட விரோத ஸ்தாபனங்களும், ஊழல் நிறைந்த இராணுவ ஜெனரல்களும் இருக்கின்றனர்'' என்று சொன்னாராம். மலேசியா, பர்மா, கம்போடியா, தாய்லாந்து போன்ற சில நாடுகளில் பிரபாகரனால் மறைந்து வாழமுடியுமென்றும் இராணுவத் தளபதி தெரிவித்தாராம்.

ஆபிரிக்க நாடான எரிற்றியாவுக்குப் பிரபாகரன் தப்பிச் சென்றிருக்கக் கூடிய சாத்தியங்கள் நிறையவே இருப்பதாக வேறு சில களநிலை ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பொருளா-தார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் எதியோப்பியாவிலிருந்து பிரிந்ததே எரிற்றியாவாகும். பிரிவினை கோரிப் போராடிய அமைப்பொன்றே இன்று எரிற்றியாவில் ஆட்சி புரிகின்றது. பிரபாகரனுக்கும் எரிற்றிய நாட்டுத் தலைவருக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்தனவென்றும் இந்தக் களநிலை ஆய்வாளர்கள் கூறுகின்றனர். 2005 ஆம் ஆண்டு ஆயுத வர்த்தகம் தொடர்பாகப் பிரபாகரன் எரிற்றிய பிரிவினைவாத இயக்கத் தலைவருக்குக் கடிதம் எழுதியிருந்தாரென்றும் இந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆனால் பிரபாகரன் இன்னமும் முல்லைத்தீவுக்குள்ளேயே இருப்பதாகவும், இராணுவம் அவ[illegible] மறைவிடத்தை நெருங்கு[illegible] அவர் வெளியே வ[illegible] தான் நம்புவதாக[illegible] தளபதி தெரி[illegible] ஒப்சேவர்[illegible] போ[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 2-360903
தொலை நகல் (Fax):-011 2-360920
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk
murasu@live.com

## முரசம்

### நினைத்தது ஒன்று நடந்தது வேறொன்று

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் இலங்கைக்கான விஜயத்தின் முன்னோடியாகவே வெளிவிவகாரச் செயலாளர் சிவ்சங்கர் மேனனின் இலங்கை விஜயம் பார்க்கப்படுகின்றது. எனினும் மேனன் இலங்கை வந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட பல முக்கியஸ்தர்களைச் சந்தித்து இலங்கை நிலைவரம் தொடர்பாகவும், இந்திய நிலைப்பாடு தொடர்பாகவும் முக்கியமான பல கலந்துரையாடல்களை நடத்திச் சென்றுள்ளார்.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை (மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவதனூடாக) இலங்கை இன முரண்பாட்டிற்குத் தீர்வு காண்பது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய முறையில் சரியானவைகளைக் கிடைக்கச் செய்வது, வடக்கின் அபிவிருத்திக்கு இந்தியா வழங்கக்கூடிய பங்களிப்புகள் தொடர்பாகவே பேச்சுவார்த்தைகளில் பெரிதும் பிரஸ்தாபித்துள்ளார்.

மேனனின் விஜயம் இலங்கை அரசைப் பொறுத்தவரை வரவேற்பிற்குரியதாகவே அமைந்திருந்தது. இதேபோல் முகர்ஜி வருகை தந்தாலும் அதுவும் சுமுகமானதாகவே இருக்குமென்பது இலங்கை அரசின் நம்பிக்கையாகும்.

இராணுவ வெற்றிகளைப் பெற்றுவரும் இலங்கை அரசானது, தமது வெற்றியை அங்கீகரிக்கும் முகமாக இராஜதந்திரிகள் விஜயம் செய்வதை விரும்புகின்றது. அதேபோல் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் இலங்கை அரசின் வெற்றியை சர்வதேசத்துக்கு எடுத்துச் சென்று பரப்புரை செய்யவும் அதனூடாக அனுகூலங்களைப் பெறவும் முயற்சிக்கின்றது.

புலிகளைப் பொறுத்தவரை தற்போதைய படை நடவடிக்கைகளுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றனர். அவர்களின் ஆளுமைக்குட்பட்ட நிலப்பகுதிகளை இழந்து வந்ததுபோல் எஞ்சியிருக்கும் நில ஆளுமைப் பகுதிகளையும் இழக்கும் கட்டாயத்துக்குள்ளும் இருக்கின்றனர். எனினும் தமது தலையெழுத்தைத் தற்போதைய சண்டையிலேயே முடித்துக்கொள்ளாமல் முடியுமானவரை தம்மைப் பாதுகாத்துக்கொள்ளவும் முயற்சிக்கின்றனர். நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான வாய்ப்பும் அரிதாகிவருவதால் தென் இலங்கைக் காடுகளுக்குள் நுழைவதற்கான திட்டத்தையும் மேற்கொண்டு வருகின்றனர். தவிரவும் படையினரின் சுற்றிவளைப்பை உடைக்கும் விதமான வலிந்த தாக்குதல் ஒன்றைச் செய்ய முயற்சித்து வருகின்றனர். புலிகளுக்கு இது கட்டாயமும் கூட.

எதிர்காலத்தில் புலிகள் நடத்தப்போகும் எந்தவொரு தாக்குதலும் நிலப்பரப்புகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் தாக்குதல்களாக அமையாது. அவ்வாறானதொரு ஆளுமைப் பலத்தைப் புலிகள் இழந்துவிட்டதாகவே கருதலாம்.

இந்த வேளையிலும் தமிழகத்தில் பேசுபொருளாக இருக்கும், ஈழத் தமிழர் ஆதரவுப் போராட்டங்கள் முக்கியமான பெரிய கட்சிகளின் நேரடிப் பங்களிப்போடு தவிர்க்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. ஏனைய சிறிய புலி ஆதரவுக் கட்சிகள் நடத்தும் போராட்டங்களுக்கு வாய்மொழி மூலமான ஆதரவையே தெரிவித்து வருகின்றன.


உதாரணமாகத் திருமாவளவனின் உண்ணாவிரதம் நான்கு நாட்களில் கைவிடப்பட்டது. இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டும் என்ற திருமாவளவனின் கோரிக்கையைச் சில கட்சிகள் ஆதரித்தபோதும் வெளிப்படையாகத் தம்மை இணைத்துக்கொள்ளவில்லை. மறுபக்கத்தில் திருமாவளவனின் ஆதரவாளர்கள் பஸ் எரிப்பு, கடையுடைப்பு என வன்முறைகளில் ஈடுபட்டு வருவது தமிழகத்தில் சட்டம், ஒழுங்குப் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது. ஆகையால் பஸ்ஸை எரிப்பவர்களைச் சுடவும், பொது அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவர்களைக் கைது செய்யவும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தின் இந்த நிலையானது "ஈழத் தமிழருக்கான ஆதரவு என்பது இறுதியில் புலிகள் ஆதரவாகவே மாறிவிடுகிறது... அது தமிழகத்தில் வன்முறையைத் தோற்றுவித்து விடுகிறது" என்று துக்ளக் சஞ்சிகையின் ஆசிரியர் "சோ" கூறியதை நிதர்சனமாக்கி விடுகின்றது.

புலிகள் விடயத்தில் இந்திய மத்திய அரசின் உறுதியான நிலைப்பாடானது புலிகளைப் பாதுகாக்க முற்படும் தமிழக அரசியல் சக்திகளுக்கு ஏமாற்றமாக இருந்த போதும் தத்தளிக்கும் புலிகளுக்கு ஒரு மிதவையாகப் புலிகளால் பார்க்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட தமிழக எழுச்சி தம்மைப் பாதுகாக்கவில்லையென்பது பெருத்த ஏமாற்றமாகும்.

■■

...டும் மறுமடலில்
கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



ஜனாதிபதியுடன் சிவ்சங்கர் மேனன்

# கிளிநொச்சி- -காஸா கொழும்பு- -புதுடில்லி ஒரே பார்வையில்

புலிகளின் நிர்வாகத் தலைநகரெனக் கூறப்பட்ட கிளிநொச்சியிலும், ஹமாஸ் அமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்கும் காஸாப் பள்ளத்தாக்கிலும் ஏறக்குறைய ஏக காலத்தில் உக்கிரமான தாக்குதல்கள் இடம்பெற்றன. கடந்த வருட இறுதியிலேயே இந்த இரு வேறு பிரதேசங்களிலும் தாக்குதல்கள் உச்சம் பெற்றிருந்தன. கிளிநொச்சி இலங்கை அரசாங்கத் துருப்புகளால் கைப்பற்றப்பட்ட செய்தி, கடந்த இரண்டாம் திகதி அறிவிக்கப்பட்டது. கடந்த வருடம் டிசம்பர் 27 ஆம் திகதி காஸாப் பள்ளத்தாக்கின் மீதான விமானத் தாக்குதல்களை இஸ்ரேல் ஆரம்பித்தது. அமெரிக்கா உட்பட பிரிட்டன் போன்ற மேற்கத்தைய நாடுகளால் புலிகள் இயக்கத்தின் மீதும் ஹமாஸ் அமைப்பின் மீதும் பயங்கரவாத முத்திரைகள் குத்தப் பட்டிருக்கின்றன.

வன்னியில் அரசாங்கத் துருப்புக்களிடம் தமது பல கட்டுப்பாட்டுப் பகுதிகளைப் புலிகள் பறிகொடுப்பதற்கு முன்னதாகச் சுமார் இரண்டரை இலட்சம் அப்பாவித் தமிழ் மக்களை மனிதக் கேடயங்களாகத் தடுத்து வைத்திருப்பதாகச் செய்திகள் வெளியாகின. நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டியங்கும் 'மனித உரிமைகள் காப்பகம்' என்ற அமைப்பு டிசம்பர் 15 ஆம் திகதி வன்னி தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் புலிகளின் அடாவடித்தனங்களை விலாவாரியாக விளக்கியிருந்தது. வயது குறைந்த பிள்ளைகளை யுத்தப் பயிற்சிக்கெனப் புலிகள் பலாத்காரமாகக் கொண்டு செல்வதாகவும், வயதானவர்கள் கூட வலுக்கட்டாயமாக யுத்த முனைக்கு அனுப்பப்படுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. புலிகள் இயக்கம் நாட்டைப் பிரித்துத் தனித் தமிழீழ இராஜ்யமொன்றினை நிறுவுவதற்காகப் போராடுவதாகத் திட்டவட்டமாக அறிவித்திருந்தனர். தமது இலக்குக்கு எதிரானவர்களென அவர்களால் கருதப்பட்ட தமிழ்த் தலைவர்கள், மக்கள் உட்படப் பெருந்தொகையினரைக் கொன்றொழித்த இயக்கம் அது. அமெரிக்கா, பிரிட்டன் உட்பட 31 நாடுகள் அதனைத் தடை செய்திருந்தாலும், பெரும்பாலும் அந்த நாடுகளிலேயே புலிகளின் நிதி சேகரிப்பு, ஆயுதக் கொள்வனவு மற்றும் பிரசார நடவடிக்கைகள் தங்குதடையின்றி முன்னெடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இலங்கையில் தமிழ் மக்கள் பாதிக்கப்படுகிறார்களென்ற போர்வையில், புலிகளை வீழ்ச்சியிலிருந்து பாதுகாப்பதற்கான திட்டமிட்ட நடவடிக்கைகள் இப்போதும் கூடத் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சர்வதேச ரீதியில் பார்த்தாலும் இலங்கையைப் பொறுத்தவரையிலான கேந்திர முக்கியத்துவம் மிக்க உறவுகள், வேறெந்த நாட்டினையும்விட, அயல் நாடான இந்தியாவுக்கே அதிகம். இலங்கையின் வடக்கு - கிழக்கு வாழ் தமிழர்களுக்கும், தமிழகத்திலுள்ள சுமார் ஆறரைக் கோடி தமிழர்களுக்குமிடையிலான அரசியல், கலாசார, பூகோள, பாரம்பரியத் தொடர்புகள் காலங் கடந்தவை. ஏன்? மலையகத் தமிழ் மக்கள் கூடத் தமிழக மக்களின் தொப்புள் கொடி உறவுகள்தான். எனவேதான் சரியாகவோ அன்றிப் பிழையாகவோ கூட இலங்கைப் பிரச்சினையின் எதிரொலிப்புகள், அவ்வப்போது தமிழகத்திலும் அதிர்கின்றன. தமிழகத்தின் அதிர்வுகள் புதுடில்லியிலும் எதிரொலிக்கின்றன.

அமெரிக்கா மற்றும் சோவியத் சோஷலிசக் குடியரசு ஆகிய இரண்டு மேலாதிக்க நாடுகளும் மோதிக்கொண்ட 1990களுக்கு முந்திய கால கட்டம் இன்றில்லை. அன்று உலக நாடுகள், இந்த இரண்டு மேலாதிக்க வல்லரசுகளின் செல்வாக்குப் பிராந்தியங்களாகக் கூறு போடப்பட்டிருந்தன. மேற்கு ஐரோப்பிய நாடுகள் பெரும்பாலும் அமெரிக்க வல்லரசின் தொங்கு சதைகளாகத் திகழ்ந்தன. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோவியத் ரஷ்யாவின் சார்பு நாடுகளாகத் திகழ்ந்தன.

சோவியத் ரஷ்யாவின் மிக நெருங்கிய நட்பு நாடாக இந்தியா இருந்தது. இந்தியாவின் வைரியான பாகிஸ்தான் அமெரிக்காவின் செல்வாக்குப் பிராந்தியமாகத் திகழ்ந்தது. இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுமே தாம் சார்ந்து நின்ற வல்லரசு நாடுகளுடன் இராணுவ மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்களைக் கூடக் கொண்டிருந்தன.

சோவியத் ரஷ்யாவின் சிதைவுக்கு முந்திய உடனடியான காலப் பகுதியில், இலங்கையில் 'யங்கி டிக்கி' என வர்ணிக்கப்பட்ட ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் அதிகாரமே இருந்தது. அது அமெரிக்க மற்றும் மேற்கத்திய நாடுகளின் கைப்பொம்மையாகவே திகழ்ந்தது. அமெரிக்காவுடனும் அதன் செல்லப் பிள்ளையான இஸ்ரேலுடனும் கூட இராணுவத் தொடர்புகள் உள்ளிட்ட பல நெருங்கிய உறவுகளையும் அன்று இலங்கை கொண்டிருந்தது. இந்த வல்லரசுப் போட்டா போட்டியின் ஓர் நேர் விளைவுதான் 1971 இல் பங்களாதேஷ் என்ற ஒரு தனி நாட்டின் உதயத்துக்கும் பங்களித்தது. இலங்கையில் அமெரிக்க சார்பு தாசர்களின் அதிகாரம், இந்தியாவின் இறையாண்மைக்கும் பிரதேச ஒருமைப்பாட்டுக்கும் சவால் விடக்கூடிய ஆபத்தான நிலைமையே அன்று இருந்தது. எனவேதான் இலங்கைப் பிரச்சினையில் புதுடில்லி அதிக ஈடுபாடு காட்ட வேண்டிய ஒரு புற நிலை அன்று இருந்தது.

அன்றைய கொழும்பு அரசாங்கத்தின் அனுசரணையோடும், ஆதரவோடும் மேற்கொள்ளப்பட்ட 1983 இன் தமிழ் இனச் சங்காரம், தமிழகத்தில் வாழ்ந்த எமது தொப்புள் கொடி உறவுகளைக் கெம்பி எழ வைத்தது. அன்றைய இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் இலங்கையில் தமிழீழக் கோஷம் எழுவதற்குக் காரணமாகவும் இருந்தன. இந்த அடக்குமுறை நடவடிக்கைகளே தமிழகத்தினதும், புதுடில்லியினதும் ஆதரவைத் தமிழ் இளைஞர்களுக்குப் பெற்றுத் தந்த அடிக் காரணிகளாகவும் அமைந்தன. பங்களாதேஷின் உதயம், அன்றைய இலங்கை ஆட்சியாளர்களின் இன ரீதியான ஒடுக்குமுறைகள் எல்லாம் இலங்கைத் தமிழ் போராட்ட சக்திகளின் பின்தளமாகத் தமிழகத்தைத் திகழ வைத்தது. இவையே அன்றைய தமிழீழப் போராட்டத்தோடு தமிழகத்தையும், புதுடில்லியையும், கொழும்பையும் சம்பந்தப்படுத்திய அக, புற நிலைக் காரணிகள். அன்றைய காலகட்டத்து தேசிய, சர்வதேச சூழ்நிலைகள் எல்லாம் இன்று போலில்லை. அமெரிக்காவுக்கும், சோவியத் யூனியனுக்குமிடையில் நிலவிய பனிப்போரின் மிச்சசொச்சங்கள் மட்டுமே இன்றிருக்கின்றன. ஒரு தனி வல்லரசாக அமெரிக்கா இன்று திகழ்கிறது. ஐக்கிய நாடுகள் சபையையே ஆட்டிப்படைக்கக்கூடிய சர்வதேச பொலிஸ்காரனாகவும் அமெரிக்கா இன்று திகழ்கின்றது.

இலங்கையில் தமிழ் இளைஞர்கள் ஏந்திய ஆயுதங்கள்தான், கொழும்பின் இன்றைய இனரீதியான பாராபட்ச ஆட்சியாளர்களின் பின் வழித்தோன்றல்களை வழிக்குக் கொண்டு வந்தன. ஜே.ஆர். - ராஜீவ் காந்தி செய்துகொண்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் பிரச்சினைத் தீர்வுக்கு ஒரு முத்தாய்ப்பாய் அமைந்தது. அதற்குப் பின்வந்த ஆட்சியாளர்கள் அனைவருமே ஏதோவொரு வகையில் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சித்திருக்கிறார்கள். பிரபாகரனின் ஆதிக்க வெறியும், தமிழ் மக்களைத் தானாகவே ஏகபோகக் குத்தகைக்கு எடுத்துக்கொண்ட தன்மையும், அரசியல் ஞானமின்றி வெறும் ஆயுத வக்கிரத்தைப் பயன்படுத்தியமையும் தமிழ் மக்களை இன்று மிகவும் மோசமான நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது. ராஜீவ் காந்தியைக் கொன்றதன் மூலம் ஒட்டுமொத்த இந்திய மக்களின் எதிர்ப்பையும் புலிகள் சம்பாதித்துக் கொண்டனர். பிரபாகரனின் தமிழ்த் தேசியம் தமிழ்ப் பாசிஸமாக உருவெடுத்தது. பிரபாகரனின் ஆதிக்க வெறி, இன்றுவரை இலங்கைத் தமிழர் பிரச்சினைத் தீர்வு இழுபறிப்படுவதற்கு ஓர் முக்கிய காரணியாகவும் அமைந்தது. இவை கிளிநொச்சி, கொழும்பு, புதுடில்லி ஆகியவற்றின் இன்றைய உறவு நிலைகளைச் சுருக்கமாக விளக்கும் அம்சங்கள்.

''முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு இலங்கை - இந்திய உறவுகள் மிகவும் ஆழமாகவும் நெருக்கமாகவும் வளர்ச்சி பெற்றிருக்கின்றன'' என்று கொழும்புக்கு வந்து திரும்பிய புதுடில்லியின் வெறியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனன் கூறியிருக்கிறார். எனவே கொழும்பு - இராணுவ ரீதியில்

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

எடுக்கும், எடுக்கப்போகும் எந்த நடவடிக்கைகளையும் புதுடில்லி குழப்பப் போவதில்லை என்பது தெளிவாகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் கலைஞர் கருணாநிதி தலைமையிலான தமிழக சர்வகட்சி அரசியல் பிரதிநிதிகள், பிரதமர் மன்மோகன் சிங்கை இலங்கைப் பிரச்சினை தொடர்பாகச் சந்தித்துப் பேசியிருந்தனர். (தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

## ஊரிலிருந்து....



நடிகர் வடிவேலு ஒரு படத்தில சொல்லுவார். ''இப்பிடி உசுப்பேத்தி உசுப்பேத்தியே ரணகளமாக்கிட்டாங்கப்பா'' எண்டு. இப்ப அதே வசனத்தை பு.பு.தலைவரும் (புதுக்குடியிருப்பு புலித் தலைவர்) சொல்லுறாராம். ஆரைப்பாத்துத் தெரியுமோ, வேற ஆர் தமிழ் ஊடகவியலாளர்கள் எண்டு சொல்லுற சிலபேரைப் பாத்துத்தான். ஆமி இடத்தைப் பிடிச்சால் புலிகள் தந்திரமாகப் பின்வாங்கி விட்டினம் எண்டும், உள்ளுக்குள்ள விட்டுத் தலைவர் அடிக்கப்போறார் எண்டும் எத்தினை உசுப்பேத்தல்கள். இப்ப சாயம் வெளிச்சுப் போச்சு. இனியெண்டாலும் வன்னிச் சனத்தை வெளிக்கிட விடச்சொல்லி எழுதுங்கோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிச் சமரின் இறுதிப் பொறி!

**புலிகள்** தங்களைப் பற்றி கடந்த காலத்தில் செய்துவந்த மிகைப்படுத்தப்பட்ட பிரசாரங்களின் தாக்கம் இன்னும் இருக்கத்தான் செய்கிறது. ஏனென்றால், வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து நாளுக்கு நாள் புலிகளின் ஆளுகைக்கு உட்பட்ட நிலங்கள் பறிபோய்க்கொண்டிருக்கின்றன. தற்சமயம் புலிகளின் இருப்பு 500 சதுர கிலோமீற்றருக்குள் சுருக்கமடைந்து, புலிகளின் எதிர்த்தாக்குதல் பலம் என்பது கேள்விக்குள்ளாகியுள்ள நிலையிலும் "பெடியள் விடாயினம்" என்று இன்னும் சிலர் நம்பிக்கொண்டிருப்பதுதான் வேடிக்கையானது. மறுபக்கத்தில் புலிகள் எப்படியெல்லாம் தாக்குவார்கள் என்ற அநாமதேயக் கற்பனைத் திட்டங்களும் சமகாலப் போர்க்களத்தில் பெரும் பொய்மையாகிப் போயிருக்கிறது. ஒருவேளை ஊடக விற்பன்னர்கள் புலிகளின் தந்திரோபாயங்களென்று கூறியவைகளெல்லாம் உண்மையில் அவையாகவே இருந்திருக்கக்கூடும். ஏனென்றால் அடுத்தடுத்த சமர்களில் புலிகள் பயன்படுத்த இருந்த தந்திரோபாயங்கள் வெளிப்பட்டு விட்டனவே என்பதற்காக அவர்கள் அதை கைவிட்டிருக்கக் கூடுமோ என்ற சந்தேகங்களும் உண்டு. இப்படி எழுதுவதற்குக் காரணம் பத்தி எழுத்தாளர்களை நம்பிய வாசகர்களை ஏமாற்றக்கூடாது என்பதற்காகத்தான். இல்லாவிடின் பத்தி எழுத்தாளர்களைப் புலிகள் ஏமாற்றிவிட்டார்கள் என்பதே நிதர்சனம் என்றாகி இருக்கும்.

எனவே, புலிகள் இனிமேல் என்ன செய்யப் போகிறார்கள் என்பது பற்றி அதீத கற்பனையில் நின்றுகொண்டு எவரும் கதை சொல்ல முன்வரக்கூடாது என்பதே தற்போதைய நிலைப்பாடு. புலிகள் இனியும் சண்டை பிடிப்பார்களா? என்பது பற்றி எழுதுவதற்கு முன்னர் பிரபாகரன் தப்பிச் சென்றிருக்கக் கூடும். அதேபோல் தளபதிகள் உட்பட்ட பல முக்கியஸ்தர்களும் தப்பிச் சென்றிருக்கக் கூடும் என்ற விவாதங்கள் ஊடக எழுத்தாளர்கள் மத்தியில் பரவலாக இருக்கின்றது. தமிழ் நாட்டிலும் நாகலாந்துப் பிரதேசத்திலும் புலிகள் பதுங்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. புலிகளின் விமானங்களுக்கு என்ன நடந்தது? அவற்றை துண்டுகளாகக் கழற்றி எங்காவது புதைத்திருக்கக் கூடும். அதேபோல் அவர்களிடமிருந்த கனரக ஆயுதங்கள், தளபாடங்கள் என்பனவும் புதைக்கப்பட்டிருக்கக்கூடும். ஏனெனில், தப்பியோடும் முயற்சியில் கூடவே இவ்வாறானவற்றை எடுத்துச் செல்வதற்கான வாய்ப்பு இருப்பதில்லை. எங்காவது ஒரு தேசத்தில் சில காலங்கள் பதுங்கியிருந்து மீண்டும் நாடு திரும்பக் கிடைத்தால் புதைக்கப்பட்ட ஆயுதங்களை எடுத்துக் கொள்ள முடியும் என்பது போராட்டம் பற்றித் தெரிந்தவர்களுக்குத் தெரியும். உதாரணமாகக் கிழக்கிலிருந்து புலிகள் பின்வாங்கியோடியபோதும் இவ்வாறே செய்தனர்.



புதுக்குடியிருப்பில் கைப்பற்றப்பட்ட புலிகளின் கப்பல் கட்டும் தளத்தின் ஓர் பகுதி.

புதுக்குடியிருப்புக்கு இராணுவம் வருகின்றபோது புலிகள் கடும் தாக்குதலைத் தொடுப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நாளுக்கு நாள் புதுக்குடியிருப்பின் மையப்பகுதியை நெருங்கும் படைகளின் முன்னேற்றம் நடந்து கொண்டே இருக்கின்றது. படைகளின் இம்முயற்சிக்குப் பலனாக அண்மையில் வீழ்ச்சி கண்ட புளியம்பொக்கணை, உடையார்கட்டுக்குளம், கண்டாவளை, தர்மபுரம், இராமநாதபுரம், புதுக்குடியிருப்பு கிழக்கு போன்ற பகுதிகளில் புலிகளின் பலத்த எதிர்ப்பு ஒன்றும் இருக்கவில்லை.

ஆனால், தர்மபுரத்தில் நடந்த சண்டையில் புலிகள் படையினரிடமிருந்து கைப்பற்றிய பழைய கவச வாகனமொன்றைப் பயன்படுத்தியிருந்தனர். அதைப் பயன்படுத்தியவர்கள் மிகவும் வயதானவர்களாகக் காணப்பட்டதும், ஒரு உளவு இயந்திரத்தைப்போல் அதைச் செலுத்திய விதமும், எரிபொருளுக்காக மண்ணெண்ணெயைப் பயன்படுத்தியிருக்க வேண்டும் ஏனெனில், அந்த வாகனம் வெளிப்படுத்திய புகையும் படையினருக்கு நகைச்சுவைக் காட்சியாக இருந்ததாக அறிய முடிகின்றது. ஏற்கனவே புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட உளவு இயந்திரத்துக்குக் கனமான இரும்புத் தகடுகள் பொருத்தப்பட்டிருந்தது. அதே போல், பார ஊர்தியொன்றுக்குக் கனமான இரும்புத் தகடு பொருத்தப்பட்டிருந்தது. இவற்றையே தமது யுத்த வாகனங்களாகப் புலிகள் வன்னி மக்களுக்குக் காட்டியிருந்தனர். அப்போது கவச வாகனம் தம்மிடம் இருப்பதாகவும் அதைக் கடைசி யுத்தத்தில் பாவிப்பதாகக் கூறியிருந்தனர். இறுதி யுத்தத்தில் புலிகள் விமானங்கள், கவச வாகனம், கொமாண்டோப் படையணி, கரும்புலிகள் அணி எனப் தாக்குதலில் பல ரகங்களைப் பயன்படுத்துவார்கள் என்ற எதிர்பார்ப்பு புலிகளின் பரப்புரை ஏற்படுத்தியிருந்தது. அந்த எதிர்பார்ப்பைப் புலிகள் நிவர்த்தி செய்ய வேண்டிய காலம் இதுதான். இதுவும் தந்திரோபாயமாகப் பயன்படுத்தப்படாமல் இருந்தால் புலிகளின் எல்லா மாயையும் உடைக்கப்பட்டுவிடும். அதன் பின்னர் புலிகள் பேசுவதற்கும், மக்கள் கேட்பதற்கும் எதுவும் இருக்கப்போவதில்லை.



வன்னியில் புலிகள் வித்தை காட்டிய கவச வண்டி

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அவர்கள் கடந்த வாரம் ஊடகவியலாளர்கள் மத்தியில் குறிப்பிட்ட கருத்துக்களானது கவனத்துக்குரியதாகின்றது. அதாவது, எதிர்வரும் சிங்களத் தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியுமெனத் தான் நம்புவதாகக் குறிப்பிட்டிருந்தார். இதற்கு வலுச் சேர்க்கும் விதமாகப் பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தப் போரை இன்னொரு இராணுவத் தளபதியிடம் தான் கையளிக்கப் போவதில்லை என்பதையும் அவர் மீண்டும் உறுதியாகத் தெரிவித்தார். இராணுவத் தளபதியின் இக்கருத்து அச்சேறுவதற்கு முன்னரே புலிகளின் இறுதிப் பதுங்குதளமாகக் கருதப்படுகின்ற புதுக்குடியிருப்பின் தெற்கு வாசல், படையினரால் தகர்க்கப்பட்டிருக்கின்றது என்ற செய்தி நாடெங்கும் பரவியிருந்தது. ஆகவே இராணுவத் தளபதி வெற்றியில் உறுதியாக இருக்கின்றார் என்பது புரிகின்றது. உலகத்தில் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நாடுகளில் இலங்கை முதலாம் இடத்தில் இருப்பதான கணிப்பீடுகள் வெளியாகி இருக்கின்றன.

படையினரின் விரைந்த முன்னேற்றத்தை எதிர்கொள்வதில் புலிகள் எதிர்பாராத நெருக்கடிகளைச் சந்தித்து வரும் காலம் இதுவாக இருக்கிறது. அலை யலையாக அணிகளை அனுப்பிச் சண்டையிட்ட காலம் போய் மண் அணைகளை அவசரமாக அமைத்து அவற்றை நம்பிச் சண்டையிடும் காலம் இதுவாக இருக்கின்றது. நாச்சிக்குடா மண் அணை, கிளிநொச்சி மண் அணை, பரந்தன் மண் அணை ஆகியன படையினரின் முன்னேற்றத்தைச் சிறிது தாமதப்படுத்திய போதும் அதைத் தகர்த்து படையினர் முன்னேறினர், இப்போது விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு நகரம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கி அவசரமாக மண் அணைகளைப் புலிகள் அமைத்துள்ளனர். அதேபோல், தார் வீதிகள் தவிர்ந்த நிலப்பரப்பில் பொறி வெடிகளைப் பரவலாக விதைத்துள்ளனர். இருந்தபோதும் தலைமையேற்று வழி நடத்துவதற்கு முக்கியமானவர்கள் இல்லாத நிலையில் தப்பிச் செல்ல அனுமதிக்கப்படாத

அலசுவது
மதியூகி

புலிகள் மாத்திரம் கட்டாயச் சண்டையை நடத்தி வருகின்றனர். இதற்கு ஒரு உதாரணம் ஏனைய தமிழ் இயக்கங்களைப் புலிகள் தடை செய்து அழித்தபோது தமது கீழ் மட்ட உறுப்பினர்களுக்குத் தெரியாமல் தலைமைகளும் முக்கியமானவர்களும் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றனர். அப்போது செய்வதறியாது ஊருக்குள் இருந்த மாற்று இயக்க உறுப்பினர்களைப் புலிகள் கொலை செய்தனர். அதே கட்டத்தில் இப்போது புலிகளும் இருக்கின்றனர். தப்பிச் செல்ல வழியில்லாமலும், வழி நடத்தத் தலைமையில்லாமலும் எதிரியின் நம்பிக்கையை வெல்ல முடியாத கட்டத்தில் மரணத்தை எதிர்கொண்ட நிலையிலேயே எஞ்சியிருக்கும் புலிகள் இருக்கின்றனர். நுளம்புக்கு வலை விரிப்பது போல் தங்களுக்கே இறுதிப் பொறி வைத்துக்கொண்ட நிலையிலேயே புலிகள் இருக்கின்றனர்.

## அதிரடி அய்யாத்துரை



**இலங்கைப்** பிரச்சினைக்குப் போர் நிறுத்தம் வரும் வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாகத் திருமா சொன்னது வெறும் பொலிற்றிக்ஸ் தான் எண்டது இப்ப அம்பலமாயிற்றுதுங்கோ. வேலிக்கு ஓணான் சாட்சியெண்டுமாப்போலை வைத்தியர் ராமதாஸ் கூல் ரிங்ஸ் குடுத்துத் திருமாவின்ர போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்திட்டார். ஏன்டா அப்பா போர் நிறுத்தம் அறிவிச்சிட்டாங்களோ எண்டு கேட்டால், இல்லை இல்லை திருமாவின்ர உடல் நிலை இயக்க நிறுத்தத்திற்கு வரப்பாக்குது அதாலை எல்லாக் கட்சிகளும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க திருமா கூல் ரிங்ஸ் குடிக்கிறார் எண்டு வைத்தியர் சொன்னாராம். திருமாவிற்குக் கிடைக்கயிருந்த மாமனிதர் பட்டத்தையும் வைத்தியர் தடுத்துப்போட்டார். திருமா ஆடினது ஒரு நாடகம். அதையும் ஓவர்ரைக் பண்ணி வைத்தியர் காட்டினது மெகா நாடகமுங்கோ. எதிர்பார்த்த முடிவு தான் எண்டதாலை திருமாவின்ர சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் சலசலப்பில்லாமல் போட்டுதுங்கோ.

**காதலர்** தினத்தன்று மாகாண சபைத் தேர்தல் எண்டதாலை இந்த முறை வாக்களிப்பெல்லாம் யாம் யாம் எண்டு இருக்குமெண்டு சொல்லினமுங்கோ. உதை மெய்ப்பிக்குமாப்போலை மத்திய மாகாணத்தில பச்சைக் கட்சி ஆதரவாளர்கள் பல்லாயிரம் பேர் நீலக்கட்சியில சேர்ந்திருக்கினமுங்கோ. பரம்பரை பரம்பரையா மத்திய மாகாணத்தில பச்சைக் கட்சிக்குத்தானே செல்வாக்கு இருந்தது. இப்ப என்னாச்சிது எண்டு கேட்டதுக்கு, யானைச் சவாரி செய்த உறுப்பினர் ஒருவரே நீலக்கட்சியின்ர செல்வாக்கு உயர்ந்த கதையை நீட்டி நிறுத்திச் சொல்லுறாருங்கோ. உந்த லட்சணத்தில ஜனாதிபதியே வந்து நிண்டாலும் தோற்கடிச்சுக் காட்டுவோம் எண்டு பச்சைக் கட்சிப் பேச்சாளர்கள் முழங்கிறதெல்லாம் செல்வாக்குக் கெட்ட நேரத்திலை சொல்வாக்குக்கும் மூக்குடைக்கிற வேலைதான் எண்டு அவரே சொல்லுறாருங்கோ. போர்க்கள வெற்றிகள் ஏதோ ஒரு வடிவத்தில நீலக்கட்சிக்கு ஒரு வகைக் கவர்ச்சியைக் கொடுத்திருக்குது எண்டால் அது மிகையாகாதுங்கோ. உந்த ரெண்டு மாகாண சபைகளையும் வெற்றிகரமாகக் கைப்பற்றிச்சினமெண்டால் பொதுத் தேர்தல் சங்கு வெகுவிரைவில ஒலிக்கவும் வாய்ப்பிருக்குது எண்டு அலரிமாளிகைக் குருவி சொல்லுதுங்கோ. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டுமென்பது எல்லாருக்கும் தெரிந்த தந்திரோபாயம் தானுங்கோ...


**போனவாரம்** நாய்த் திருட்டுச் செய்தி படித்து வயிறு வலிக்கச் சிரித்ததில அதுக்கு முந்தின காலம் இருந்த நோய் எல்லாம் மறந்து போய்ட்டுதுங்கோ. களுவாஞ்சிக்குடிப் பிரதேச சபைத் தலைவரும் மேலும் நாலு பேரும் அவையின்ர அலுவலக வாகனத்திலேயே போய் நாய்க்குட்டி ஒண்டைத் திருடிச்சினமெண்டு அதுக்காக அவையளைப் பொலிஸார் கைது செய்திருக்கினமெண்டும் அந்தச் செய்தியில இருந்ததுங்கோ. ஜேனலிசம் படிச்சவருக்கு நியூஸ் எண்டால் என்ன எண்ட கேள்விக்கு அதிகமான தடவை சொல்லப்படுகின்ற ஒரு சின்னக் கதையொண்டுதான் ஞாபகத்துக்கு வருகுதுங்கோ. அதாவது, நாய் ஒண்டு மனிசனைக் கடிச்சால் அது செய்தியில்லையாம், கடிச்ச நாயை மனுஷன் திருப்பிக் கடிச்சால் அதுதான் செய்தி எண்டுவினம். அப்பிடிப் போலை சாதாரண ஒருவன் நாய்க்குட்டியைத் திருடியிருந்தால் அது செய்தியாக இருக்காது; இது பிரதேச சபைத் தலைவரே தன்ர வாகனத்திலேயே போய் நாய்க்குட்டியைத் திருடினது தான் செய்தியாகிப் போட்டுதுங்கோ. செய்தியைப் படிக்கேக்க சிரிப்பு வந்தாலும் பொலிற்றிக்ஸ் வேலைத் திட்டத்துக்குள்ள இது எந்த செக்ஸன் எண்டதைச் சிந்திக்கேக்குள்ளதான் சனம் எங்கேயோ தவறு விட்டுப் போட்டுதுகள் எண்டு தோணுதுங்கோ...

**அண்டை** நாட்டின்ர வெளிவிவகாரச் செயலாளர் மேனன் ஐயா வாரார்.. பராக்.. பராக்.. பராக்.. எண்டு அரச காலத்தில வருகை அறிவிக்குமாப் போலை நேரடி வருணனை செய்து கொண்டிருந்திச்சினம். போர் நிறுத்தம் வரப்போகுது எண்டும் அரசாங்கத்துக்கு அழுத்தம் குடுக்கப்போறார் எண்டும் சொல்லிச்சினம். ஆர் என்ன சொன்னாலும் தன்ர அஜந்தாவில இருந்து ஒரு அங்குலமும் நகரப் போவதில்லை எண்டதில மேனன் ஐயா ரொம்ப உறுதியா இருந்தாருங்கோ. சனங்கள் பாதிக்கப்படக் கூடாது, பொலிற்றிக்ஸ் தீர்வை முதன்மைப்படுத்த வேணும் எண்ட விசயங்கள் ஐயாவின்ர அஜந்தாவில பிரதானமானதுங்கோ. செக்கன்ட் பாட்டிலதான் நிவாரண விநியோகம், தமிழ் நாட்டுக் குழப்பம், மத்திய கவலைகள் போன்ற விஷயங்கள் உள்ளடங்கியிருந்ததாமுங்கோ. முகர்ஜி வருவாரென்று முன்னறிவித்தல் கொடுத்தாலும் மேனன் ஐயா வந்ததே ரெண்டெழுத்தார் விஷயத்தில அண்டை நாடும் ஒரு முடிவோடைதான் இருக்கெண்டதை விளக்கியிருக்குதாமுங்கோ. உதையும் புரிஞ்சு கொள்ளாமல் குய்யோ முறையோ எண்டு அண்டை நாட்டு அரசு அப்பிடிச் செய்ய வேணும் இப்பிடிச் செய்ய வேணும் எண்டு ஆரும் சொல்லிச்சினமெண்டால் அவை பொலிற்றிக்ஸ் பித்துகள் எண்டு தான் அர்த்தமாகுமாமுங்கோ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் இராசி பலன்கள் - 2009



**இந்த ஆண்டு குரு பகவான் 20.12.2009 முடிய மகர ராசியில் சஞ்சாரம் செய்கிறார். மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் 1.5.2008 முதல் 30.7.2009 வரை அதி சாரமாகக் கும்ப இராசிக்குச் செல்கிறார். சிம்ம இராசியில் சஞ்சாரம் செய்யும் சனி பகவான் 09.09.2009 இல் கன்னி இராசிக்கு மாறுதல் ஆகிறார். மகரத்தில் சஞ்சரிக்கும் ராகு கடகத்தில் சஞ்சரிக்கும் கேது 17.11.2009இல் மாறுதலாகி தனுசிற்கு ராகுவும், மிதுனத்திற்கு கேதுவும் செல்கின்றனர். கிரக நிலைகளின் அடிப்படையில் பலன்களை விளக்கி வாசகர்கள் பயன்பெறும் வகையில் இந்தப் புத்தாண்டு இராசி பலன்களை எழுதியுள்ளேன். வாசகர்கள் இதனைப் படித்துப் பரிகாரங்களைப் பயன்படுத்தி விதியை மதியால் வென்று நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.**

(ஜோதிட மாமணி முருகுபாலமுருகன் B.com., B.L)

(கடகம் தொடர்ச்சி)

**மனைவி** மற்றும் பிள்ளைகள் வழியில் இருந்த மருத்துவச் செலவுகள் குறையும். பயணங்கள் அனுகூலம் மிகுந்த பலன்கள் உண்டாகும். புத்திர வழியில் பூரிப்புத் தரக்கூடிய சம்பவங்கள் நடைபெற்று மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

குடும்ப குழந்தை: குடும்ப வாழ்வில் நிலவிய குழப்பமான நிலை மறையும். கணவன்-மனைவி யிடையே அந்நியோந்நியம் உண்டாகும். தாராள தன வரவுகள் மகிழ்ச்சி அளிக்கும். குடும்பத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகிப் பழைய கடன்களும் குறையும். சுப காரியங்கள் சிறப்பாக நிறைவேறும். வீடு மனை வாங்கும். முயற்சிகளில் சாதகமான பலன்கள் உண்டாகும். பூர்வீகச் சொத்துக்களால் இலாபம் அமையும்.

உத்தியோக நிலை: உத்தியோக நிலையில் இருந்த கடந்த காலச் சோதனைகள் விலகும். அதிகாரிகளின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் ஆளாகுவீர்கள். எதிர்பார்த்த இடமாற்றங்களால் குடும்பத்தோடு சேரக்கூடிய அமைப்பு உண்டாகும். தேவையற்ற அலைச்சல், டென்ஷன் குறையும். கௌரவமான பதவிகளும் கிடைக்கும். எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிக்கக் கூடிய ஆற்றல் உண்டாகும்.

தொழில் வியாபாரம்: தொழில் வியாபாரத்தில் நல்ல உயர்வுகளும் முன்னேற்றங்களும் உண்டாகும். வேலையாட்கள் மற்றும் கூட்டாளிகளின்

ஆதரவால் தொழிலை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கம் நிறைவேறும். கமிஷன், ஏஜென்ஸி, காண்டிராக்ட் துறைகளில் நல்ல அனுகூலம் கிடைக்கும். அரசு வழியிலும் எதிர்பார்த்த உதவிகள் அமையும். வெளியூர் வெளிநாட்டுத் தொடர்புடையவைகள் மூலம் எதிர்பாராத இலாபம் அமையும்.

பெண்களுக்கு: உடல்நிலை சிறப்பாக அமையும். கொடுக்கல் வாங்கல்களில் அனுகூலம் உண்டாகும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

தாய் வழியில் ஆதரவு அமையும். கணவன்-மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது உத்தமம். சுபகாரிய முயற்சிகளில் அனுகூலம் உண்டாகும். பணியில் இருப்பவர்களுக்கு எதிர்பாராத உயர்வுகள் உண்டாகும்.

மாணவர்களுக்கு: மாணவர்களுக்குக் கல்வியில் மேன்மை உண்டாகும். தேவையற்ற நண்பர்களின் சகவாசத்தைத் தவிர்ப்பதால் வீண் பிரச்சினைகள் குறையும். மேற்கல்வி பயிலுபவர்களுக்கும் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். பெற்றோர்களின் ஆதரவும், ஆசிரியர்களின் உதவியுடன் உங்களுக்கு மேலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும். எதிர்பார்த்த மதிப்பெண்கள் கிடைக்கும்.

கலைஞர்களுக்கு: தொழில் ரீதியாக இருந்த தடைகள் விலகும். புதிய வாய்ப்புக்கள் சிறப்பாகக் கிடைக்கப் பெறும். தடைப்பட்ட பணவரவுகளும் தாராளமாகக் கிடைக்கும். பெரிய மனிதர்களின் ஆதரவுகள் அமையும். வெளியூர் வெளிநாடு செல்லும் வாய்ப்புகளும் அதன் மூலம் அனுகூலமும் ஏற்படும்.

விவசாயிகளுக்கு: விவசாயத்தில் முன்னேற்றமான பலன்கள் அமையும். கடந்த கால நஷ்டங்களை ஈடுசெய்யும் அளவிற்கு நல்ல மகசூல் உண்டாகும். வங்கிக்கடன்கள் குறையும்.

பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு: பொது வாழ்வில் கௌரவமான பதவிகள் கிடைக்கும். பெயர், புகழ் உயரும். மக்களின் ஆதரவு சிறப்பாக அமையும். எடுக்கும் முயற்சிகள் வெற்றி தரும். உடன் இருப்பவர்களால் அனுகூலம் உண்டாகும்.



## சிம்மம்

(மகம் பூரம்,உத்திரம்1)

எதிலும் தனித்து நின்று போராடி விடாமுயற்சியுடன் பல சாதனைகள் செய்யும் ஆற்றல் கொண்ட உங்களுக்கு 2009ஆம் ஆண்டில் சனி பகவான் 9.9.2009 முடிய ஜென்ம ராசியிலும் அதன் பிறகு குடும்ப ஸ்தானமான 2ஆம் வீட்டிலும் சஞ்சாரம் செய்ய உள்ளார். ஏழரைச் சனி நடைபெறுவது மட்டுமன்றி ஆண்டு கோளான குரு பகவான் 9.12.2008 முதல் 20.12.2009 முடிய ருண, ரோக ஸ்தானமான 6ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்வதால் உங்களுக்குத் தொழில் ரீதியாகப் பல்வேறு நெருக்கடிகள் ஏற்படும். உங்களுக்கு மறைமுக எதிர்ப்புக்கள் அதிகரிக்கும். பொருளாதார ரீதியாக வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படும். அதுமட்டுமன்றி கடுமையான பொருளாதார நெருக்கடியால் கடன் வாங்கக்கூடிய சூழ்நிலையும் உண்டாகும். சிலருக்கு நெருங்கியவர்களை இழக்கக் கூடிய அனுகூலமற்ற சூழ்நிலை ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குத் தேவையற்ற நெருக்கடிகள் ஏற்பட்டு மன அமைதி குறையும். சிலர் வீண் பழிச் சொல்லுக்கு ஆளாகக் கூடிய சூழ்நிலைகளும் உண்டாகும். நீங்கள் எந்த ஒரு செயல் செய்வது என்றாலும் சிந்தித்து செயல்படுவது உத்தமம். சர்ப கிரகமான ராகு பகவான் 6ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்வது மட்டுமே உங்களுக்கு ஒருவகையில் சாதகமான அமைப்பு எனலாம்.

**உடல்நிலை:**

உடல்நிலையில் கவனம் செலுத்த வேண்டியிருக்கும். தேவையற்ற கோபம், எரிச்சல், மன நிம்மதியற்ற நிலை உண்டாகும். குடும்பத்தில் ஏற்படும் வீண் குழப்பங்களால் மன நிம்மதி குறையும். புத்திரர்களாலும் மருத்துவச் செலவுகள் உண்டாகும். நெருங்கியவர்களுக்கும் உடல்நிலை பாதிப்புக்கள் ஏற்படுவதால் அலைச்சல் அதிகரிக்கும். மனக் குழப்பமான நிலையே உண்டாகும்.

**குடும்பம், குழந்தை:**

குடும்பத்தில் பொருளாதார நிலையில் கடுமையான நெருக்கடிகள் உண்டாகும். வீண் செலவுகளும் அதிகரிப்பதால் கடன்கள் அதிகரிக்கும். பிற்பாதியில் ஓரளவு முன்னேற்ற நிலை இருப்பதால் கடன்கள் குறை யும். கணவன்-மனைவியிடையே வீண் குழப்பங்களும் பிரச்சினைகளும் அதிகரிக்கும். அசையாச் சொத்துக்களால் வீண் விரயம் உண்டாகும். எடுக்கும் முயற்சிகளில் தடைகள் ஏற்படும்.

**உத்தியோக நிலை:**

உத்தியோகத்தில் எதிர்பாராத இடமாற்றங்களால் அலைச்சல் அதிகரிக்கும். உடல் நிலை சோர்வடைவதால் அடிக்கடி விடுப்பு எடுக்கக்கூடிய சூழ்நிலைகள் உண்டாகும். உயரதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். வேலைப்பளு அதிகரிப்பதால் அதிக நேரம் உழைக்க வேண்டியேற்படும். புதிய வேலைவாய்ப்பு எதிர்பார்த்தபடி கிடைக்காது.

**தொழில், வியாபாரம்:-**

தொழில், வியாபாரத்தில் இலாபமற்ற நிலைகள் உண்டாகும். அபிவிருத்தி குறையும். தொழிலாளர்களிடம் ஒற்றுமை குறையும். பொருளாதார நிலையிலும் வீண் சிக்கல் உண்டாகும். கமிசன் ஏஜென்சி காண்டிராக்ட் போன்றவற்றால் வீண் விரயம் உண்டாகும். கூட்டாளிகளிடம் கருத்து வேறுபாடு தோன்றும்.

**பெண்களுக்கு:-**

தேவையற்ற மனக் குழப்பங்களும், குடும்பத்தில் ஒற்றுமையற்ற சூழ்நிலைகளும் உண்டாகும். உற்றார் உறவினர்களின் ஆதரவு குறையும். புத்திரவழியில் வீண் செலவுகளும், பிரச்சினைகளும் உண்டாகும். கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாது. பிறரிடம் எந்தப் பொருளையும் இரவல் வாங்கக் கூடாது.

**மாணவர்களுக்கு:-**

மாணவர்களுக்குக் கல்வியில் மந்தமான நிலை உண்டாகும். எதிலும் முழுமையாகக் கவனம் செலுத்த முடியாதபடி வீண் குழப்பங்கள் உண்டாகும். தேவையற்ற பொழுது போக்குகளில் மனம் ஈடுபடும். விளையாட்டுத் துறைகளில் ஈடுபடும்போது தேவையற்ற பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும். எதிலும் கவனமாகச் செயற்படுவது நல்லது.

**கலைஞர்களுக்கு:-**

தொழில் ரீதியாக உங்களுக்கு ஏற்படும் போட்டிகளால் அலைச்சல், டென்சன் அதிகரிக்கும். கிடைக்கும் வாய்ப்புக்களையும் சரி வர பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலை உண்டாகும். பண வரவுகளும் தாமதப்படும். பயணங்களால் அனுகூலம் இருக்காது.

**விவசாயிகளுக்கு:-**

மகசூலில் பாதிப்பு உண்டாகும். புதிய முயற்சிகளில் வீண் விரயம் ஏற்படும். வாங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்க இயலாது. புழு பூச்சிகளால் பயிர்கள் நாசமாகும். அரசாங்க வழியிலும் அனுகூலமற்ற பலன்கள் உண்டாகும்.

**பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு:-**

அரசியல்வாதிகளுக்குக் கெடுபிடியான காலமாகும். தங்கள் பதவிகளைத் தக்க வைத்துக் கொள்ள கடின முயற்சிகளை மேற்கொள்ள நேரிடும். மேடைப் பேச்சுக்களில் மிகவும் கவமாக இருக்கவும். வெளியூர், வெளிநாட்டுப் பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும்.



## கன்னி

(உத்திரம் 2,3,4, அஸ்தம்,சித்திரை1,2)

பேச்சிலும், செயலிலும் பிறரைப் புண்படுத்தாமல் சூழ்நிலைக்குத்தக்கவாறு நடந்து கொள்ளும் திறன் கொண்ட உங்களுக்கு, சுக ஸ்தானமான 4ஆம் வீட்டிற்கும் கேந்திர ஸ்தானமான 7ஆம் வீட்டிற்கும் அதிபதியான குரு பகவான் 9.12.2008 முதல் 20.12.2009 முடிய பஞ்சம ஸ்தானமான 5ஆம் வீட்டில் சாதகமாக சஞ்சாரம் செய்வதால் நீங்கள் எடுக்கும் முயற்சியில் அனுகூலங்கள் உண்டாகும். (தொடரும்)

# நெத்தியடி

**இந்திய** வெளியுறவுத்துறைச் செயலாளர் சிவசங்கர் மேனன், வன்னி மக்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

-சர்வதேச மன்னிப்புச் சபை.

**சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட, சண்டைக்காரன் காலில் விழுவது மேல் என்பார்கள். அங்கு சொன்னதை இங்கேயே சொல்லியிருக்கலாமே...!**

**மக்கள்.**

ஈழத்தில் இனவெறிப் போர் நிறுத்தப்பட்டு, பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

-திருமாவளவன்.

**இதை ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் புலிகளிடம் சொல்லி அவர்களை ஒரு வழிக்குக் கொண்டு வந்திருந்தால் இன்றைக்கு உண்ணாவிரதம் இருக்கும் அளவிற்கு நிலைமை மோசமடைந்திருக்காது அல்லவா? கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரமா?**

**மக்கள்.**

இலங்கையில் அவசரமாக யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

-பிரிட்டன் பிரதமர் கோர்டன் பிரவுண்.

**இராஜதந்திரிகள் அதிகபட்சமாக உள்நாட்டு விடயத்தில் மூக்கை நுழைக்கிறார்கள் என்ற ஆவேசமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்ற போது, நீங்களும் இப்படி மொட்டையாக சொல்கிறீரகளே அவர்கள் தப்பாக நினைக்க மாட்டார்களா?**

**மக்கள்.**

ஈழத் தமிழர்களும், பிரபாகரனும் நல்ல முறையில் பாதுகாப்பாக இருக்க இறைவனை வேண்டிக் கொள்வோம்.

-வைகோ

**'ஆடியடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா' என்ற காலம் கடந்த ஞானம் உங்களுக்குப் பிறந்திருக்கிறது. உசுப்பேத்திப் பார்த்தீர்கள் எவரும் அசையவில்லை. இறுதியில் இறைவனிடம் சரணடைந்துவிட்டீர்கள்.**

**மக்கள்.**

லசந்த கொலை, எம்.ரீ.வி. தாக்குதல் என்பன யுத்த வெற்றியை மறைக்க முயற்சி.

தேசிய சுதந்திர முன்னணித் தலைவர் விமல் வீரதிஸாநாயக்க.

**நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். இது தொடர்பான சந்தேகத்தில் கைது செய்யப்படுபவர்கள் அல்லது தேடப்படுபவர்கள் உங்கள் கூடாரத்திற்குள்ளேயே இருப்பதாக எல்லோ பேச்சு அடிபடுகிறது. ஒருவராவது உண்மையைப் பேசுங்களேன்...**

**மக்கள்.**

நிலப்பரப்பை வெற்றிகொள்வதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

-புதிய ஜனநாயகக் கட்சி.

**ரொம்பப் பழசாப் போன கருத்தை எல்லோ இப்ப சொல்லுறியள். தெரியாமத்தான் கேட்கிறம். உங்களின்ர கோல் எந்த போஸ்டுக்குள்ள விழப்போகுது.**

வன்னியில் இடம்பெறும் தாக்குதல்கள் தொடர்பாகச் சர்வதேசம் மௌனம் காப்பது கவலையை அளிக்கிறது.

துரைரட்ணசிங்கம் எம்.பி.

**முதலில் உங்கட கவலைகள் எல்லாமல் யாரும் கணக்கில் எடுக்கப்படாதவை என்பதை முதலில் புரிஞ்சு கொள்ளுங்கோ. ஐயா, ராசா, தம்பி எண்டு சர்வதேச சமூகம் சொல்லேக்க போக்குக்காட்டித் திரிஞ்சவையள், இப்ப மௌனமா இருக்கிறதப் பற்றி கவலைப்படுறதில அர்த்தம் இல்ல....**


**மக்கள்.**

மலையகத்தின் மாற்றத்திற்கு கொழும்பு வாழ் மலையக மக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

மனோகணேசன் எம்.பி.

**உப்பிடிச் சொல்லுறம் எண்டு கோவிக்காதீங்கோ. எடுத்ததுக்கெல்லாம் மலையகத்தில் மாற்றம் எண்டு சொல்லுறது ஒரு பெஷன் ஆகிட்டுது. அதனால நீங்களும் அரைச்ச மாவை அரைக்கிற மாதிரித் தெரியுது.**

**மக்கள்.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிளி/நாகேந்திரா வித்தியாலயம்



இரணைமடுக்குளம்




# அமெரிக்க ஜனரஞ்சகப் பத்திரிகையொன்றின் பார்வையில் புலிகளின் தோல்வியும் இராணுவ வெற்றியும்

"பயங்கரவாதத்துக்கு இராணுவத் தீர்வில்லையென வாதிடும் அனைவருக்கும் சுட்டிக்காட்டுவதற்கு இரு வார்த்தைகள் எம்மிடம் உள்ளன. அவை சிறீ லங்கா" - இவ்வாறு அமெரிக்கப் பத்திரிகையான 'வோல் ஸ்ரீற் ஜேர்னல்' லில் கடந்த 16 ஆம் திகதி பிர-சுரமான ஒரு விடயதானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி பத்திரிகையின் அபிப்பிராயப் பகுதியில், "பயங்கரவாதத்தைத் தோற்கடித்தல்" என்ற தலைப்பில் இந்தக் கட்டுரை பிரசுரமாகியிருந்தது. அமெரிக்காவிலேயே அதிகம் விற்பனையாகும் பத்திரிகை இதுவெனக் கூறப்படுகிறது. சுமார் முப்பது இலட்சம் பிரதிகள் விற்பனையாவதாகக் கூறப்படுகிறது. ஆனால் புலிகள் இயக்கத்தின் பயங்கரவாதப் பிரச்சினையை இஸ்ரேலின் பிரச்சினையோடும், ஈராக்கில் அமெரிக்கா எதிர்கொள்ளும் பிரச்சினையோடும் கட்டுரையின் இறுதியில் சமப்படுத்தப்பட்டிருப்பது தவறானது.

**புலிகள்** இயக்கத்திடம் மிஞ்சியிருக்கும் சில வலுவிடங்களில் வடபகுதியிலுள்ள யாழ். குடாநாட்டுப் பகுதியும் ஒன்றாகும். யாழ்.குடாநாட்டில் புலிகள் வசமிருந்த கடைசித் துண்டினைக் கைப்பற்றியுள்ளதாக இலங்கை இராணுவம் இந்த வாரம் அறிவித்தது. இலங்கையின் ஜனாதிபதி ஒருவரும், இந்தியப் பிரதமரொருவரும் உட்படப் பல பத்தாயிரம் உயிர்களைக்- காவு கொண்ட 26 வருட கால சிவில் யுத்தத்தை நடத்திய புலிகள் இயக்கம், ஒரு பயங்கரவாத அமைப்பாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பெரும் பகுதியைப் புலிகள் இயக்கம் மூன்று வருடங்களுக்கு முன்னர் காத்திரமான முறையில் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. அத்துடன் நாட்டின் தலைநகரமான கொழும்பில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களையும் நடத்தி வந்தது. இந்த நிலையில் யாழ்.குடாநாட்டில் புலிகள் வசமிருந்த கடைசித் துண்டு நிலமும் கைப்பற்றப்பட்டமை பாரிய திருப்புமுனையாகும்.

புலிகளை ஒழித்துக் கட்டுவதற்கு முன்னுரிமை அளித்தவரும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கு வளங்களை ஈடுபடுத்தியவருமான மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கே இந்தப் பெருமை சென்றடைகிறது. தற்போதைய 2009 ஆம் ஆண்டுக்கான இராணுவச் செலவினம் 170 கோடி அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது. இது அண்ணளவாக மொத்தத் தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதமாகும். அத்துடன் அரசாங்க வரவு - செலவுத் திட்டத்தில் கிட்டத்தட்ட இருபது சதவீதமாகும்.

பல்முனைத் தாக்குதல்கள், புலிகளின் பகுதிகளுக்குப் பின்னால் திடீர்த் தாக்குதல்களை நடத்துவது போன்ற நவீன கிளர்ச்சி எதிர்ப்பு உபாயங்களைக் கைக்கொள்ளக் கூடியதாக இலங்கை இராணுவம் இப்போது வளர்ச்சி பெற்றுள்ளது. புலிகளின் வலுவிடமாகத் திகழ்ந்ததும், தமிழ் - முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதுமான கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றி, இலங்கை இராணுவம் 2007 ஆம் ஆண்டில் தனது முக்கியத்துவம் மிக்க முதலாவது வெற்றியை ஈட்டியது. கடந்த வருடம் அங்கு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. வடமாகாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் கடைசி மாவட்டமான முல்லைத்தீவு மாவட்டத்தை நோக்கி இராணு-வத் தாக்குதல் இப்போது திசை திரும்பியுள்ளது.

அரசியல் மூலங்கள் கொண்ட இந்த மோதலுக்கு, அரசியல் தீர்வு மட்டுமே உண்டு என்று நம்பியவர்களுக்குத் தொடர்ச்சியான இந்த வெற்றிகள் அதிர்ச்சியாக அமைந்துள்ளன. மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதே சிறந்த அரசியல் தீர்வென நீண்ட காலமாகவே உறுதியாக முன்வைக்கப்பட்டு வந்தது.

ஆனால் புலிகள் என்றுமே வேறு விதமான் எண்ணங்களையே கொண்டிருந்தனர். அதாவது தமிழர் தாயகப் பகுதியில், புலி-களைத் தலைமையாகக் கொண்டு, சுதந்திர இராஜ்யமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென்று அவர்கள் விரும்பினர். ஏனைய பயங்கரவாத அமைப்புக்களைப் போன்ற புலிகளும், ஏனைய குழுக்களுக்கும் தத்தமது மக்கள் என்று கூறப்படுபவர்கள் சார்பாகப் பேசுவதற்கு இருக்கும் சட்டபூர்வத் தன்மையை என்றுமே ஏற்றுக்கொண்டதில்லை. தமது சொந்த அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளாத எந்தவொரு பேச்சுவார்த்தை மூலமான தீர்வையும் ஏற்றுக்கொள்வதற்கு அவர்கள் தயாராக இருந்ததில்லை.

இதனால்தான் இலங்கையின் பயங்கரவாதப் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்னர் எடுக்கப்பட்ட முயற்சிகள் எல்லாம் தோல்வியடைந்தன. 1987 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜெயவர்த்தனா, ஒரு தனி இராஜ்யம் இல்லையென்ற போதிலும், பரந்த அதிகாரங்களை வழங்கக்கூடியதாக வடக்கு - கிழக்கில் ஒரு தாயகத்தைத் தமிழர்களுக்கு வழங்கினார். 1990 களில் மற்றுமொரு ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்க, மற்றொரு அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை வழங்கினார். இந்த இரண்டினையும் ஏற்றுக்கொள்ளப் புலிகள் மறுத்ததோடு அவர்களின் பயங்கரவாதமும் தொடர்ந்தது.

2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்தத்துக்கு வழிவகுத்த சமாதான ஒப்பந்தமொன்றினை நோர்வே ஏற்படுத்தியது. அந்தத் தடவை, தமிழ்ப் பகுதிகளில் ஒருவகையான பிராந்திய சுயாட்சிக்கான யோசனையொன்றினைப் புலிகள் தாங்களாகவே கண்டுபிடித்து முன்வைத்தனர். அரசாங்கம் அதனைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டது. எல்லாவற்றுக்கும் பின்னர் வன்செயல் தமக்குச் சிறப்பாகச் செயற்பட உதவுமென்ற நம்பிக்கையில் புலிகள் அர்த்தமற்ற தமது சொந்தக் கருத்துக்களை முன்வைத்தனர். அடுத்த நான்கு வருடங்களையும் யுத்த நிறுத்த மீறல்களோடு அவர்கள் கழித்தனர்.

தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளும் தீர்வொன்று ஏற்படுவதைக் கடினமாக்கியது. கொழும்புடன் உண்மையாகவே பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விரும்பிய மிதவாதத் தமிழ்த் தலைவர்களைப் புலிகள் மிகவும் சந்தோஷமாகக் கொன்றனர். சமாதான வழிமுறையை ஊக்குவிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம், புலிகளை அதிர வைக்கும் வகையில் அதனை ஒரு பயங்கரவாதக் குழுவாகப் பிரகடனப்படுத்தியது. புலிகளின் நிதி சேகரிப்பு முயற்சிகளுக்கு இடைஞ்சல் ஏற்படுத்துவதற்காகவும், கொலைகள் தொடர்வதைத் தடுப்பதற்காகவும் ஐரோப்பிய ஒன்றியம் இதனை மேற்கொண்டது.

இதற்கிடையில் பலாத்காரத்தின் மூலம் புலிகளை அடக்குவதற்கு அவ்வப்போது எடுக்கப்பட்டு வந்த முயற்சிகள், ஒன்றில் அரசியல் உறுதிப்பாடு இல்லாத காரணத்தினால் அல்லது வெளியார் தலையீட்டினால் தோல்வி கண்டன. 1987 இல் திரு.ஜெயவர்த்தனா வடக்கில் நிலைபெற்றார். இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி தீவிரவாதிகளுக்கு விமான மூலம் உணவு கொடுத்தார். தனது நாட்டிலுள்ள சொந்தத் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக அவர் இதனைச் செய்தார். இந்தச் செய்கை, ஜெயவர்த்தனா வடக்கில் நிலைபெற்றமைக்குக் குழி பறிப்பதாக அமைந்தது. பின்னர் இந்தியர்கள் தமது நிலையை மாற்றிக் கொண்டதோடு, 1987 இற்கும், 1989 இற்கும் இடைப்பட்ட ஒரு காலத்தில் புலிகளின் கிளர்ச்சியை இந்திய சமாதானப் படையால் அடக்க முடிந்தது. ஆனால் இந்தியா சேற்றுக்குள் காலை விட்டுவிட்டதாகச் சில இந்திய அரசியல்வாதிகள் அதனை ஏளனம் செய்தனர்.

இந்திய சமாதானப் படை உரிய காலத்துக்கு முன்னதாகவே 1990 இல் வாபஸ் பெறப்பட்டது. ம்றறொரு இலங்கை இராணுவ முயற்சி 1995 இல் ஆரம்பிக்கப்பட்டது. துருப்புக்களின் எண்ணிக்கை போதியளவுக்கு இல்லாததாலும், இராணுவத் தீர்மானம் மேற்கொள்வதில் அநாவசியமான அரசியல் தலையீடு இருந்த காரணத்தினாலும் 2000 ஆம் ஆண்டு அந்த முயற்சி வீழ்ச்சியுற்றது.

திரு. ராஜபக்ஷ இவையனைத்திலும் இருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டார் போலத் தோன்றுகின்றது. அதனால்தான் அரசியல் தீர்வொன்றினை அமுல்படுத்துவதற்கு முன்னர், இராணுவம் வெற்றி பெற வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார். இந்தத் தடவை இந்தியா வெளியே நிற்பதற்கும் - ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உட்பட ஏனைய நாடுகள் - இப்போது புலிகளின் நிதி சேகரிப்புகளைப் பிடிப்பதற்கும் அவற்றைப் புறந்தள்ளுவதற்கும் இது உதவுகிறது.

சமாதானம் இன்னமும் இலகுவில் அடையக் கூடியதாக இல்லை. அல்லது அண்மைய நல்ல செய்திக்கு மத்தியில், உடன-டியாகக் கிடைக்கக் கூடியதுமல்ல. புலிகள் இனிமேலும் பரந்தளவிலான அச்சுறுத்தலாக இருக்கப் போவதில்லை. என்ற போதிலும் இன்னமும் சில பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தக் கூடிய நிலையில் புலிகள் இருக்கின்றனர். அத்துடன் கொழும்பு, ஒரு நிரந்தர அரசியல் தீர்வு தொடர்பாகக் கொண்டிருக்கும் கடப்பாடுகள் குறித்தும் கேள்விகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கிறது. தமிழை ஓர் உத்தியோகபூர்வ மொழியாக்கும் 1987 ஆம் ஆண்டின் அரசியல் யாப்புச் சீர்த்திருத்தம் மற்றும் மேலும் அதிகாரப் பகிர்வுகளை வழங்குவதற்குச் சாதகமான சிபார்சுகளை முன்வைப்பதற்கு 2006 இல் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டியது போன்ற சில நடவடிக்கைகளைக் கொழும்பு அரசாங்கம் எடுத்துள்ளது. அதிகாரப் பகிர்வுக்கு வழிவகுக்கக்கூடிய ஏனைய அரசியல் யாப்புச் சீர்த்திருத்தங்களை அமுல்படுத்துவது தொடர்பாக அது இழுத்தடிப்புச் செய்து வருகிறது. ஆனால் ஓர் அரசியல் தீர்வு என்பது, புலிகள் அடக்கியொடுக்கப்பட்டதன் பின்னர் கலந்துரையாடப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஒரு சாதாரண விடயத்தை மேற்கொள்வதற்காக இறுதியில் இந்த வரலாற்றை நாம் மீட்டிப் பார்க்க வேண்டியுள்ளது. தமிழ்ப் பயங்கரவாதிகளுக்கு எதிரான கொழும்பின் தந்திரோபாயம் வெற்றி கண்டுள்ளது. பேச்சுவார்த்தைகள் செய்யாததை இது செய்துள்ளது. தனது சொந்தப் பயங்கரவாதப் பிரச்சினையை இஸ்ரேல் எதிர்கொள்ளும் நிலையிலும், ஈராக்கில் ஸ்திரத் தன்மையையும் அரசியல் முன்னேற்றத்தையும் ஏற்படுத்துவதற்கு அமெரிக்கா செயற்படும் நிலையிலும் இது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கியமான ஒன்றாகும். பராக் ஒபாமா இதனைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

நன்றி : 'வோல் ஸ்ரீற் ஜேர்னல்'
அமெரிக்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




83 ஆம் ஆண்டு இலங்கைத் தீவெங்கும் நடந்தது இனக்கலவரம். அதனைத் தொடர்ந்து இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் ஈழப்போராட்ட அமைப்புகளின் பயிற்சி முகாம்கள் வெளிப்படையாகவே செயற்படத்தொடங்கி விட்டன.

வடக்குக் கிழக்கில் இருந்து பெருமளவிலான இளைஞர் யுவதிகள் கடல் மார்க்கமாகத் தமிழகத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு பயிற்சி முகாம்களில் தங்கியிருந்து ஆயுதப்பயிற்சி பெற்று வந்தனர்.

குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ். புளொட், புலிகள் அமைப்பு, ரெலோ, ஈரோஸ் போன்ற பெரிய அமைப்புகளே தமிழ் நாட்டில் பயிற்சி முகாம்களை நடத்திக்கொண்டிருந்தன.

பயிற்சி பெற்ற இளைஞர் யுவதிகள் மீண்டும் வடக்கு, கிழக்கிற்குத் திரும்பி அரச படையினருக்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபட்டும் வந்தனர். இதனால் அரச கடற்படையினர் வடக்குக் கிழக்கு கடல் எல்லைகளைத் தீவிர கண்காணிப்பில் வைத்திருந்தனர்.

இலங்கையையும், இந்தியாவையும் பிரிக்கும் பாக்குநீரிணைக் கடலில் ஈழப் போராளிகள் பலரும் பிணமாக மிதந்தனர். இதனால் ஆயுதப்பயிற்சி எடுப்பதற்காக இந்தியா செல்ல விரும்புவோர் பலரும் வீணாகக் கடலில் ஏன் சாகவேண்டும் என அஞ்சினார்கள்.

இந்த இடத்தில் ஒரு ஞாபகம். ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தளபதிகளில் ஒருவராக இருந்தவர் திருமலைச் சின்னவன். அவரது குடும்பத்தினரும் அப்போது தமிழகத்திலேயே தங்கியிருந்தனர்.

காரைநகர் கடற்படை முகாம் தாக்குதலில் வீரமரணம் அடைந்தவர் சின்னவன்.

காரைநகர் கடற்படைத் தளத்தின் மீதான தாக்குதலுக்கு முன்பாகத் தமிழகத்தில் இருந்து யாழ்ப்பாணம் திரும்பினார் சின்னவன். தனது குடும்பத்தை விட்டுப் பிரியும் போது சின்னவன் தனது மனைவியிடம் கூறிவிட்டு வந்த இறுதி வார்த்தை இப்போதும் பலருக்கும் ஞாபகம்.

கடலிலே மாண்டால் கண்ணீர் சிந்து! களத்திலே மாண்டால் கலங்காதே!! இதுதான் அந்த வார்த்தை. அவர் சொன்னபடி காரைநகர் களத்திலேதான் அவர் மரணித்திருந்தார்.

ஈழப்போராட்ட அமைப்புக்களில் முதன் முதலில். ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் பிரதம தளபதியாக இருந்த டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருந்தார். தமிழகத்தில் மட்டுமல்ல வடக்குக் கிழக்கிலும் ஆயுதப்பயிற்சி முகாம்களை உருவாக்க வேண்டும் என அவர் கருதினார்.

இந்தியாவில் எமது போராளிகள் பயிற்சி எடுக்கின்ற சூழலும் நிலப்பரப்பும் எமது வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் இருந்து முழுவதும் மாறுபட்டதாக இருந்தது. வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரை வடலிகள், தென்னந்தோப்புகள், வயல்வெளிகளில்தான் அரச படையினரின் நடமாட்டங்கள் காணப்பட்டன. ஆகவே இதுபோன்ற ஒரு சூழலில் ஆயுதப்பயிற்சி முகாம்களை அமைப்பதன் மூலம் ஆயுதப்பயிற்சி முழுமையான ஒன்றாக இருக்கும் என டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நம்பினார்.

அப்போது எந்தவொரு விடுதலை அமைப்பினரும் சரி பலாத்காரமாக யாரையும் தமது இயக்கத்திற்கு அணிதிரட்டியிருக்கவில்லை. பெற்றோர்கள் தமது பிள்ளைகளைத் தாமாகவே முன்வந்து ஆயுதப்பயிற்சிக்கு அனுப்பியும் வைத்தனர். அந்தளவிற்கு இயக்கங்களை மக்கள் நேசித்தனர். போராட்டத்தை முழுமனத்தோடு விரும்பியிருந்தனர்.


ஈ.பி.ஆர்.எல்.எவ்.தலைவர் தோழர் பத்மநாபாவுடன் தோழர் டக்ளஸ் தேவானந்தா அமர்ந்திருப்பதைப் படத்தில் காண்கிறீர்கள்.

இதை விடவும் வடக்குக் கிழக்கில் பயிற்சி முகாம்களை நிறுவுவதன் மூலம் ஆயுதப்போராட்டத்தை மாபெரும் மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டமாக முன்நகர்த்திச் செல்ல முடியும் எனவும் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கருத்தை முன்வைத்தார்.

அவரது கருத்தின்படி முதன் முதலாக ஆயுதப்பயிற்சித் தளம் ஒன்று தென்மராட்சிப் பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பினரால் ஆரம்பிக்கப்பட்டது. அதுவரை வேறு எந்த அமைப்பினரும் அதுபோன்ற பயிற்சி முகாமை அமைத்துச் செயற்பட்டிருக்கவில்லை.

தென்மராட்சி பளைப் பகுதியை அண்டிய இடமொன்றில் அந்தப் பயிற்சி முகாம் இருந்தது. அதைத் தொடர்ந்து மானிப்பாயிலும் ஒரு பயிற்சி முகாம் அமைக்கப்பட்டது.

இதைவிட உடுவில் பகுதியில் பெண்களுக்கு எனப் பிரத்தியேகமாக இன்னொரு பயிற்சி முகாம் உருவாக்கப்பட்டது. அங்கு வைத்து ஈ.பி.ஆர்.எல் .எவ். அமைப்பின் பெண்கள் அணியினர் ஆயுதப் பயிற்சியில் ஈடுபட்டு வந்தனர்.

இதேவேளை உடுவில் பகுதியில் மருத்துவ முகாம் ஒன்றும் இருந்து வந்தது. டாக்டர் பெஞ்சமின் என்ற அந்த அமைப்பின் முக்கிய உறுப்பினர் ஒருவரால் இந்த மருத்துவ முகாம் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

## தேடனார்

அப்போது எந்தவொரு வீடுதலை அமைப்பினரும் சரி பலாத்காரமாக யாரையும் தமது இயக்கத்திற்கு அணிதிரட்டியிருக்கவில்லை. பெற்றோர்கள் தமது பிள்ளைகளைத் தாமாகவே முன்வந்து ஆயுதப்பயிற்சிக்கு அனுப்பியும் வைத்தனர்.

அந்தளவிற்கு இயக்கங்களை மக்கள் நேசித்தனர். போராட்டத்தை முழுமனத்தோடு விரும்பியிருந்தனர்.

(சாட்சிகள் தொடரும்)

---

**கியூபாவில்** கல்விப் புரட்சியே நிறைவேறிக் கொண்டிருந்தது. ஆறு ஆண்டுகளுக்குள்ளாக எல்லாக் குழந்தைகளும் பள்ளிகளுக்குச் சென்றனர்.

படித்துத் தேறிய முதியோரின் எண்ணிக்கையும் பெருகிற்று. இதை யுனெஸ்கோவே பாராட்டி ஒப்புக் கொண்டது. சுகாதாரத்துறையில் அதைவிட பெரும் புரட்சி நடந்தது. நூறு பேருக்கு ஒரு டாக்டர் என வளர்ந்துவிட்டது. இதனால்தான் பிற நாடுகளுக்கும் சேவை செய்ய டாக்டர்கள் படை படையாகப் புறப்பட முடிந்தது. ஏதோ எண்ணிக்கையில் மட்டும் பெருத்தது என்பது தவறு. உலகப் புகழ் பெற்ற மருத்துவர்கள் தோன்றினர் (கால் பந்தாட்ட வீரர் மாரடோனா, கியூபாவில்தான் சிகிச்சைக்குப் போனார்) அமெரிக்கர்கள் பலரும் அங்கே சிகிச்சைக்குப் போவது வளர்ந்து வந்தது. அவர்கள் வர அனுமதித்தார் பிடல். டாலரையும் ஒரு புழக்க நாணயமாகப் பிடல் அங்கீகரித்தார். இருந்தாலும் ஏகாதிபத்திய வரிப்புலியின் கோடுகளும்,புள்ளிகளும் மாறவே இல்லை... கியூபா தன்னம்பிக்கையுடன் முன்னேறிக்கொண்டு இருந்தது.

உலகக் கம்யூனிஸ்டு இயக்க மாநாடு மாஸ்கோவில் கூட்டப்பட்டது. அதில் சே கியூபாவின் பிரதிநிதியாகப்



பங்கேற்றார். சோவியத் ஆதரவாளராக இருந்தார். இந்த மாநாட்டின் போதே சீனாவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையிலான வேறுபாடு வெளிப்பட்டது. பிடலும், சேயும் சீன வெற்றி பற்றி பெருமிதம் கொண்டு இருந்தாலும், ரஷ்யாவின் முக்கியத்துவத்தைப் பாராட்டினர்... கருத்து மாறுபாட்டைக் கைவிட வேண்டினர். "எதிரிக்கு இடம் கொடுக்காதீர்கள்" என்பதுதான் அவர்களது முக்கியமான வாதம்... "வியட்னாமிற்கு ரஷ்யாவும், சீனாவும் சேர்ந்து உதவிட வேண்டும்" என்றும் வற்புறுத்தினார்.

சீனாவும் கியூபாவிற்கு சர்க்கரை வாங்கியும், பணம் வாங்காமல் ஆயுதம் கொடுத்தும் உதவியது. சில மாதங்களுக்குப் பிறகு, சோவியத் ஆதரவு நிலையில் கியூபா நிற்பதால், சீனா சகல தொடர்புகளையும் கைவிட்டது. சோவியத் உதவி அதிகரித்தது. வியட்னாமில் அமெரிக்கா பின் வாங்கிக்கொண்டு இருந்தது. இதைப்பார்த்தே சே, "உலகின் பல நாடுகளில் பத்து வியட்னாம்களை




உண்டாக்கிவிட்டால், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு முடிவு கட்டிவிடலாம்" என்பார். அவ்வாறு உருவாக்கும் நோக்குடன்தான் காங்கோவுக்கும், பொலிவியாவுக்கும் போனார்.

சே குவேரா விரும்பியபடி, சோவியத் நாட்டின் உதவியுடன் பல தொழிற்சாலைகள் கட்டி முடிக்கப்பட்டன. அவற்றைக் கொண்டு வருவதிலும், கட்டி முடிப்பதிலும் கால தாமதமானபோது, கடுமையாக விமர்சித்தார், சே...

இவற்றிற்கு சில ஆண்டுகளுக்குப் பின் "குருச்சேவின் ஆலோசனையின்படி, கியூபாவில் ரஷ்ய ஏவுகணைகளைக் கொண்டு வந்து நிறுவிட வேண்டும்" என்ற செய்தி பிடலிடம் கூறப்பட்டது. அதை சே குவேராவும் ராலும், பிற தோழர்களிடம் உற்சாகத்துடன் வரவேற்றனர். பிடல், பலவாறாக யோசித்தார்.

1.நாம் கேட்காமலே ரஷ்யர்கள் தாங்களாக இந்த முடிவை எடுக்க என்ன காரணம்?

2.நம்முடன் கலந்து போசாமல், ஒப்புதல் பெறாமல் இந்த யோசனை வந்தது ஏன்?

3.ரஷ்ய ஏவுகணை மட்டுமா வரும். அத்துடன் அதனை இயக்கப் பயிற்சி பெற்ற ரஷ்யர்களும் வர வேண்டி இருக்கும்.

4.இவற்றை கியூபா மக்களும், லத்தீன் அமெரிக்க நாடுகளும் எப்படிப் பார்ப்பார்கள்?

5.இதை அமெரிக்கா கண்டுகொள்ளாமல் இருக்குமா?

6.ரஷ்ய ஏவுகணை பற்றியும், ரஷ்ய வீரர்களின் நடமாட்டத்தையும் எத்தனை நாட்களுக்கு மூடி மறைக்க முடியும்? ஏனெனில் கியூபா மக்களின் உறவினர்கள் பலர் அமெரிக்காவில் குடியிருப்பதால், அவர்கள் மூலமாவது செய்தி பரவத்தானே செய்யும்.

7.இந்த ஏவுகணைகள் யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கும்? இயக்குவதற்கான கடைசிக் கட்டளையிடுகிறவர் யார்?

என்ற பல கேள்விகளையும் பிடல் எழுப்பி விடை காண முயன்றார்.... எனவே, உடனே ஒப்புதல் தெரிவிக்கவில்லை. அமெரிக்கத் தாக்குதல் நிச்சயம். அதைத்தடுக்க ஆயுதம் வேண்டும் என்பதில் மட்டும் உடன்பட்டார்.

சோவியத் நாட்டுத் தலைவர்கள் என்ன வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள் என்பதும், முதலில் தயங்கிய பிடல், பின்னர் ஏன் ஏற்றுக்கொண்டார் என்பதற்கான காரணங்கள் இதுவரை வெளிவரவில்லை.

வியட்னாமில் அமெரிக்கா பின் வாங்கிக்கொண்டு இருந்தது. இதைப்பார்த்தே சே, "உலகின் பல நாடுகளில் பத்து வியட்னாம்களை உண்டாக்கிவிட்டால், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு முடிவு கட்டிவிடலாம்" என்பார். அவ்வாறு உருவாக்கும் நோக்குடன்தான் காங்கோவுக்கும், பொலிவியாவுக்கும் போனார்.



ரஷ்ய- கியூபா ஏவுகணை விவகாரம் இருநாடுகளுக்கிடையே நம்பிக்கை, ஏமாற்றம், மகிழ்ச்சி, துயரம் என்ற உணர்ச்சிகள் ஏறி இறங்கிக் கொந்தளிக்கக் காரணமாகிவிட்டது. இனிப்பாகத் தொடங்கி கசப்பாக முடிந்த கதைதான் அது.

அமெரிக்காவின் கழுகுக் கண்ணிற்குத் தென்படாமல் சரக்கு மூட்டைகளுக்குள் ஏவுகணை கொண்டு வரப்பட்டு, கியூபாவில்

தருவது
தா.பாண்டியன்

தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த இடங்களில் நிறுவியும் முடித்துவிட்டார்கள். ரஷ்ய வீரர்கள் நடமாடியதைக் கண்ட பிறகுதான், விசாரித்தறிந்து, ஏவுகணை இருப்பதை தெரிந்துகொண்டனர். அமெரிக்கா அதிர்ச்சியில் அலறத் தொடங்கியது. 'மார்புக்கு நேராகத் துப்பாக்கி', 'அழிவின் விளிம்பில் உலகம்', 'நியூயோர்க்- வாஷிங்டன் எரியப் போகிறது' என்ற தலைப்பிட்ட செய்திகள் அமெரிக்க மக்களைக் கலங்க வைத்தது. உலகமே அதிர்ச்சிக்கு உள்ளானது என்பதுதான் உண்மை.

(அலசுதல் தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலையகத்து அவலம்

# தலவாக்கலையில் எரியும் அரசியல் தீ!

**மத்திய** மாகாண சபைக்கான வாக்களிப்பு தினம் நெருங்கி வருகிறது. அதனால் மலையகப் பகுதிகளிலும் தேர்தல் பிரசாரங்களும் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளன. வழமை போலவே வார்த்தை ஜாலங்களினால் மலையகக் கட்சிகள் ஒவ்வொன்றும் தங்கள் அருமை பெருமைகளையெல்லாம் மக்கள் முன் சமர்ப்பித்துக்கொண்டிருக்கின்றன. கடந்த காலங்களில் தாங்கள் மேற்கொண்ட அரசியல் நிலைப்பாடுகள் மலையகத்தின் வாக்காளர் ஒரு சாராரின் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதை உணர்ந்துகொண்டுள்ள சில கட்சிகள் அவற்றை நியாயப்படுத்தும் செயற்பாடுகளில் இறங்கியுள்ளதையும் அவதானிக்கக் கூடியதாகவே இருக்கின்றது. அத்துடன் மக்களிடம் சொல்லிக்கொள்ளும்படி தங்களின் கைகளிலும் எதையுமே வைத்திருக்காத சில கட்சிகளும், அதன் வேட்பாளர்களும் மற்றவர்களின் செயற்பாடுகளை விமர்சிப்பதையே தங்களின் வாக்கு வேட்டைக்கான அடித்தளமாக நம்புகின்றனர். தங்களுக்கு ஓர் சந்தர்ப்பம் தாருங்கள் என்று கேட்கின்றனர். ஆனால் அந்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டால் நடைமுறைப்படுத்துவதற்கு எவ்வாறான திட்டங்கள் வைத்திருக்கின்றோம் என்று கூடச் சொல்ல ஏதுமில்லை. இதனால் வேட்பாளர்களுக்கிடையிலேயும், மலையகக் கட்சிகளுக்கிடையிலுமான முறுகல் நிலையும் இந்தத் தேர்தலில் சற்று அதிகமாகவே இருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இந்த மாகாண சபைத் தேர்தலில் 16 ஆசனங்களைக் கைப்பற்றுவதற்காக மொத்தமாக 456 வேட்பாளர்கள் களம் இறக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 14 அரசியல் கட்சிகளின் சார்பிலும் 10 சுயேச்சை குழுக்களின் சார்பிலும் போட்டியிடுகின்றார்கள். இவற்றில் மலையகக் கட்சிகள் என்று சொல்லப்படுகின்ற தமிழ் கட்சிகளை எடுத்துக்கொண்டால், பெரும்பாலும் அனைத்துக் கட்சிகளும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் அல்லது ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்தே போட்டியிடுகின்றன. இவ்விரு தேசியக் கட்சிகளினாலும் இம்முறை அதிக வேட்பாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதாவது பெரும்பான்மை இன வேட்பாளர்களைவிடத் தமிழ் வேட்பாளர்கள் அதிகமானோர் களமிறக்கப்பட்டுள்ளனர். பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பாக 10 பேர் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக 10 பேர் தங்களுக்குள் முட்டி மோதிக்கொண்டு சிதறிப்போய் இருக்கும் மலையகக் கட்சிகள் ஒவ்வொன்றும் தனித்தனியாகச் சென்று கூட்டணி வைத்துக்கொண்டமையினால் ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு வழங்க வேண்டிய சங்கடத்தாலேயே தமிழ் வேட்பாளர்கள் அதிகமானோர் பட்டியலில் இடம்பெற்றுள்ளதாக வெளிப்படையாகக் கூறப்படுகின்றது. எனினும் ஓர் ஆசனத்தைப் பெறுவதற்கு குறைந்த பட்சம் 15,000 வாக்குகளைப் பெறவேண்டிய நிலையில் விருப்பு வாக்குகளைப் பிரித்துப் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவே மலையகத்தின் புத்திஜீவிகள் கருதுகின்றனர். இதனை மலையகக் கட்சிகளும் தற்போது உணர்ந்துள்ளதாகவே தெரிகின்றது. இதனாலேயே ஒவ்வொரு கட்சியுடன் தாங்கள் சார்ந்த அணியினருக்கு வாக்களிக்குமாறு மக்களிடம் கோரிக்கை வைக்கின்ற அதே சமயத்தில் தமது கட்சி சார்பானவர்களின் விருப்பு வாக்கு இலக்கங்களை வாக்காளப் பெருமக்களின் மனங்களில் திணிப்பதில் தீவிர அக்கறை செலுத்திவருகின்றனர். அத்தோடு, தமது அணியில் உள்ள ஏனைய கட்சி வேட்பாளர்களுக்கு மக்கள் மத்தியில் இருந்து வருகின்ற மக்கள் செல்வாக்கினை உடைத்தெறிவதிலும் கவனமாக இருந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

இதனாலேயே வேட்பு மனுத் தாக்கல் தினத்தன்றே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் ஒரே அணியில் போட்டியிடுகின்ற போதிலும் தங்களுக்குள் முட்டி மோதிக் கொண்டன. அவ்வப்போது அண்ணன், தம்பி உறவு கொண்டாடுகின்ற இக்கட்சிகளிடையே ஒரே சுற்றுவட்டத்தில் கொடிகளைப் பறக்க விடுகின்ற மனப் பக்குவம் இல்லாத நிலையே இந்த பிரச்சினைக்குக் காரணமாயிருந்தது. உயர்மட்டத்தினர் சிலர் இவ்வாறான பிற்போக்குத் தனங்களை அரங்கேற்ற வேண்டாம் என கடுமையான தொனியில் சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும், அதனால் அனைத்துத் தரப்பினரும் மௌனம் காத்து வருவதாகவும் எனினும், தலவாக்கலைச் சுற்றுவட்டத்தில் தொடங்கிய பிரச்சினை சுற்று வட்டாரங்களில் சிறு சிறு தீயாகப் பரவி-வருவதாகவே அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

> **இவற்றையெல்லாம் ஓர் ஏளனச் சிரிப்போடு அவதானித்துக்கொண்டிருக்கும் மலை யக மக்கள் எவர் என்னதான் சொன்னாலும் தங்களுடைய வாக்கு யாருக்கு என்பதில் தீர்மானமாக இருக்கின்றார்கள். மலை யக மக்கள் மத்தியில் அண்மைக்காலமாக ஏற்பட்டுவருகின்ற அரசியல் அறிவானது. அந்த மக்களுக்குத் தேர்தல் பற்றிய தெளிவை ஏற்படுத்தியுள்ளது.**

ஆனால் இவற்றையெல்லாம் ஓர் ஏளனச் சிரிப்போடு அவதானித்துக் கொண்டிருக்கும் மலையக மக்கள் எவர் என்னதான் சொன்னாலும் தங்களுடைய வாக்கு யாருக்கு என்பதில் தீர்மானமாக இருக்கின்றார்கள். மலையக மக்கள் மத்தியில் அண்மைக்காலமாக ஏற்பட்டுவருகின்ற அரசியல் அறிவானது.

**ராஜூ**

அந்த மக்களுக்குத் தேர்தல் பற்றிய தெளிவை ஏற்படுத்தியுள்ளது. இதனால் அவர்களின் தலைவர்களாக வருவதற்கு முயற்சிப்பவர்கள் கடந்த காலங்களைப் போன்று பசப்பு வார்த்தைகளை வீசிக் கொண்டிராது நடைமுறைச் சாத்தியமான வழிவகைகளைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பதே அந்த மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாகும்.


# நன்றி கூறுகின்றோம்



சமூக சேவைகள் மற்றும்
சமூக நலத்துறை
அமைச்சர்
டக்ளஸ் தேவானந்தா

பட்டதாரிகளாக இருந்த எம்மை ஆசிரிய சேவையில் உள்வாங்கத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டதோடு மட்டுமல்லாது, இடர் மிகுந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் ஏனைய வெளி மாவட்டங்களில் நியமனம் கிடைத்த வேளை அங்கு செல்ல முடியாமையை தங்களின் கவனத்திற்குக் கொண்டுவந்த பொழுது எமது கருத்தைச் சிரமேற்கொண்டு தற்காலிக இடமாற்றத்திற்கு உதவிய

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாண விஷேட செயலணிக் குழுத் தலைவருமாகிய
திரு. K.N. டக்ளஸ் தேவானந்தா
அவர்களுக்கும்

ஏனைய கட்சி அமைப்பாளர்கள், தோழர்களுக்கும் பாராட்டி நன்றி கூறுவதோடு தங்களின் சேவை மேலும் நாட்டு மக்களுக்குக் கிடைக்க இறையாசி வேண்டி நிற்கின்றோம்.
நன்றி.



2ஆம் கட்ட ஆசிரிய
நியமனம் பெற்ற
பட்டதாரிகள்.





**இதனால்** நம் உறவில் எவ்வித மாறுதலும் ஏற்படாது! கவலைப்படாதே!"

கவர்னர் இன்னும் நின்றுகொண்டேயிருந்தார். "ஒவ்வொரு வருஷமும் இந்தத் தீவுகளில் நடக்கும் கொலைகளின் எண்ணிக்கை நம்பவே முடியவில்லை. அங்கே தீபகற்பத்தில் இன்னும் அதிகம். இதற்கு என்ன காரணம் என்கிறாய், பட்டாம்பூச்சி?"

"இங்கேயிருந்து கைதிகள் யாரும் தப்பிச் செல்ல முடியாது சார். ஆகவே ஒரே கடுப்பும், வெறுப்புமாயிருக்கிறார்கள். வருஷக்கணக்காக ஒருவரோடு ஒருவர் ஒட்டிக்கொண்டு வாழ்வதால் அவர்களுடைய சிநேகிதமும் சரி, ரொம்ப ரொம்ப வலுவாயிருப்பது இயற்கைதான். அத்தோடு, கொலையை யார் செய்தார்கள் என்று நூற்றுக்கு ஐந்து கேஸில்கூடக் கண்டுபிடிப்பது கிடையாது. ஆகையால் எந்தக் கொலைகாரனும் ஜாலியாய்த் தப்ப முடியும் என்று நம்புகிறான்."

"ஓரளவு ஒப்புக்கொள்ளக் கூடிய விளக்கம்தான்" என்றார் கவர்னர். "எத்தனை காலமாய் நீ மீன் பிடித்து வருகிறாய்? மீன் பிடிக்க நேரம் கிடைக்கிற அளவுக்கு. என்ன வேலை பார்க்கிறாய்?" "மலத் தொட்டி எடுப்பது என் வேலை சார். காலை ஆறு மணிக்கு வேலையை முடித்துக்கொண்டு மீன் பிடிக்கப் புறப்பட்டு விடுகி-றேன்."

"நாள் பூராவுமா?" என்றாள் ஜூலியட்.

"இல்லை, நடுப்பகலுக்கு நான் முகாமுக்குத் திரும்பிவிட வேண்டும். பிறகு மறுபடி மூன்றிலிருந்து ஆறுவரை வெளியே போக அனுமதிப்பார்கள். அது ஒரு தொல்லைதான். ஏனென்றால், அலையோட்டம் மாறிவிடுவதால் சில சமயம் மீன் பிடிப்புக்குத் தோதான நேரம் தவறிவிடுகிறது."

ஜூலியட் தன் கணவனை நோக்கிக் கொஞ்சினாற் போல் சொன்னாள்: "என்னங்க, காலையில் ஆறுமணி முதல் சாயந்தரம் ஆறுமணி வரை வெளியே இருக்கின்ற மாதிரி, இவருக்கு ஒரு ஸ்பெஷல் பாஸ் கொடுங்களேன். இஷ்டமான நேரத்தில் மீன் பிடித்துக்கொள்ளட்டும்."

"ஆல் ரைட்," என்றார் அவர். நான் நடந்துகொண்ட முறைபற்றி என்னை நானே மெச்சியவனாக அந்த வீட்டைவிட்டுக் கிளம்பினேன். நடுப்பகுதியிலிருந்து பிற்பகல் மூன்று மணி வரை என்பது ரொம்ப ரொம்ப முக்கியமான நேரமாகும். அதுதான் பகல் நித்திரைவேளை. அநேகமாக எல்லா வார்டர்களும் தூக்கத்தில், ஆழ்ந்திருப்பார்கள். ஆகவே காவல் ஏற்பாடுகள் கட்டுத் தளர்ந்திருக்கும்.

என்னையும் என் மீன்பிடிப்பையும் மொத்தக் குத்தகையாக வாங்கிவிட்டாள் ஜூலியட். நான் எங்கே இருக்கிறேன் என்பதை அறிந்துகொண்டு அங்கேயே போய் நான் பிடித்த மீன்களை வாங்கிக்கொள்ளும்படி தனது வேலைக்காரப் பையனை அனுப்புவாள். அடிக்கடி அந்தப் பையன் வந்து, கவர்னரின் மனைவி அனுப்பினாங்க. விருந்தாளிங்க வர்றாங்களாம் பிடித்திருக்கிற மொத்த மீனையும் வாங்கிட்டு வரச் சொன்னாங்க, என்பான்.

சுருங்கச் சொன்னால் என் மீன்பிடிப்புக்கே அவள்தான் சொந்தக்காரியாக விளங்கினாள். இன்ன குறிப்பிட்ட மீனைப் பிடித்து வரும்படி கூடச் சில சமயம் சொல்லுவாள். அல்லது சில வகைகளுக்காக டைவ் செய்து பிடிக்கும்படி கூறுவாள்.

**எழுதியது: ஹென்ரி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

இதனால் எங்கள் கோர்பியின் சாப்பாட்டு வசதிகள் குட்டிச் சுவராகவே இருந்தன. ஆனால் அதே சமயம் மேலிடத்து அந்தப்புரத்தில் எனக்கு அருமையான சகா ஒருத்தி கிடைத்தாளே!

மரியாதை தெரிந்தவளாகவும் இருந்தாள் அவள். "பட்டாம்பூச்சி, ஒரு மணிக்குத்தான் தண்ணீர் வரும், இல்லையா?"

"ஆமாம், அம்மா."

"அப்படியானால் மறுபடி முகாமுக்குப் போய்விட்டு வர வேண்டாம். என் வீட்டுக்கு வந்து சாப்பிடு." அவள் சொல்படியே அவள் வீட்டில் சாப்பிடுவேன்.

*(பட்டாம் பூச்சி பறக்கும்)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சொற்படு நயமறி வார் – ஆசை
தோய்ந்திடத் தொகுப்பதின் சுவையறி வார்
விற்பனத் தமிழ்ப்புல வோர் – அந்த
மேலவர் நாவினும் மலர்ப்பதத் தாள்.

– சுப்பிரமணிய பாரதியார்



# உயர்ந்த உள்ளம்

**கதிரவன்** தனது செங்கதிர்களை வெளியிட்டுக்கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் யாரோ வானத்தின் முகத்தில் கரியைப் பூசியதைப் போல இருண்டு விட்டது வானம். சந்தோஷமோ, துக்கமோ, ஆனந்தக் கண்ணீரோ, அழுகையோ மழை கொட்டோ கொட்டென்று கொட்ட ஆரம்பித்தது.

புகழேந்திக்கு வயது இருபத்தி மூன்று. காமராஜபுரத்தில் வசித்து வந்தான். அலுவலகம் முடிந்து வீடு திரும்புவதற்காகப் பேருந்து நிறுத்தத்துக்கு வந்தான். அன்று அலுவலகத்தில் வேலை அதிகமாதலால் வழக்கமாக ஆறு மணிக்குக் கிளம்புபவன் எட்டு மணிக்குத்தான் அலுவலகத்தை விட்டு வெளியே வந்தான்.

அவனது வீடு இருந்த காமராஜபுரத்துக்கு ஒரே ஒரு சிற்றுந்துதான். அது சரியாக 6.15-க்குப் பேருந்து நிறுத்தத்துக்கு வந்துவிடும். புகழேந்தி தினமும் அதில்தான் பயணம் செய்வான். அதை விட்டு விட்டால் அடுத்த 8.15-க்குத்தான் அடுத்த சிற்றுந்து.


இப்போது மணி 8.30. எட்டுப் பதினைந்துக்கு வரும் சிற்றுந்து இன்னும் வரவில்லை.

"ஆட்டோ..." முதியவர் ஒருவர் அழைக்க, சந்தர்ப்ப சூழ்நிலையைப் புரிந்துகொண்ட ஆட்டோக்காரன் இருமடங்கு தொகையைக் கூறினான்.

வெறுத்துப்போன முதியவர், "அட போப்பா... நான் அடுத்த பஸ்ஸில் போகிறேன்" என்று அழைத்த வேகத்தில் விரட்டி விட்டார். சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு பேருந்து வர, முதியவரும் சென்றுவிட்டார்.

தனிமையில் நின்றான் புகழேந்தி.

"ஐயா..." -குரல் கேட்டுத் திடுக்கிட்ட புகழேந்தி நிமிர்ந்து பார்க்க, ஆட்டோவுடன் நின்று கொண்டிருந்தான் மணி. நன்கு இருட்டிவிட்டது. மழை வேறு! "வருகிறீர்களா?" என்று பணத்தைப் பொருட்படுத்தாமல் ஆட்டோக்காரரை அழைத்தான் புகழேந்தி.



அடுத்த பத்தாவது நிமிடம் புகழேந்தியின் வீட்டின் முன் நின்றது ஆட்டோ. "எவ்வளவு ரூபாய்?" என்று புகழேந்தி கேட்க, 20 ரூபாய் என்றான் மணி. வியப்பாக இருந்தது புகழேந்திக்கு.

"எல்லோரும் இந்த மழை நேரத்துக்கு ஏற்ப கூடுதலாகப் பணம் வாங்குவார்கள். நீங்களோ ரொம்ப நேர்மையாக இருக்கிறீர்களே?" என்று புகழேந்தி கேட்க, புன்முறுவலுடன் சென்றுவிட்டார் மணி. அறிமுகமில்லாத அந்த மனிதரின் நேர்மை, புன்முறுவல் இரண்டும் புகழேந்தியை ஒரு கணம் வியக்க வைத்தன.

நாட்கள் உருண்டோடின... 20 வருடங்கள் தாண்டிவிட்டன.

இப்போது தொழிலதிபராகிவிட்ட புகழேந்திக்கு வயது 43.

ஒருநாள்...

வீதியோரம் பசியால் சோர்ந்துபோன ஒரு முதியவர் இருந்தார். அவரைக் கண்ட புகழேந்திக்கு எங்கோ பார்த்த முகம் போலத் தோன்றியது. வாகனத்தை நிறுத்திவிட்டு அருகில் சென்று விசாரித்தார் புகழேந்தி.

**பாப்பா முரசு சிறுகதை**

தான் ஓர் ஆட்டோக்காரன் என்றும், தனது பெயர் மணி என்றும் கூறினார் முதியவர். மேலும் அவர், தன்னுடைய நேர்மையால் பொறாமை கொண்ட ஆட்டோ ஓட்டுநர்கள் தன்னை அடித்து விரட்டியதோடு தனது ஆட்டோவையும் பறித்துச் சென்றுவிட்டனர் என்று பரிதாபமாகக் கூறினார்.

அதைக் கேட்ட புகழேந்தி முதியவரைக் கூர்ந்து பார்த்துவிட்டு, 20 ஆண்டுகளுக்கு முன்பு மழை கொட்டிய ஓர் இரவில் தனக்கு உதவிய மணி இவர்தான் என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு அந்த நிகழ்ச்சியைப் பற்றி முதியவரிடம் கேட்டார்.

பலருக்கு உதவி செய்தவர் அல்லவா அவர்? புகழேந்தியை மறந்துவிட்டார்.

"நன்றி மறப்பது நன்றன்று" என்ற வள்ளுவரின் வாக்குக்கு ஏற்ப, முதியவரை வருந்தி அழைத்துத் தனது மாளிகைக்குக் கூட்டிவந்தான் புகழேந்தி. பின்னர் அவரைச் சாப்பிடச் சொல்லி, தனது வீட்டைக் காவல் காக்கும் பணியை அளித்து மாதந்தோறும் 4 ஆயிரம் ரூபாய் ஊதியமும் அளித்துப் பராமரித்து வந்தான்.

என்றோ தான் நேர்மையாக நடந்துகொண்டதை ஞாபகத்தில் வைத்து உதவிய உயர்ந்த உள்ளம்கொண்ட புகழேந்தியை நன்றியோடு நினைத்தபடி, கண்ணும் கருத்துமாக வீட்டைப் பாதுகாத்து வந்தார் மணி.

## ஆத்திசூடி

**ஈதல் இசைபட வாழ்தல்**

ஈதலும் அதனால் பெரும் புகழ்
அடைதலும் வாழும் வழிநெறியாகும்.

-திருவள்ளுவர்

## பாப்பா பாட்டு

### சின்னக் குழந்தாய்!

சின்னக் குழந்தாய் சின்னக் குழந்தாய்
ஒரு சொல் கேட்டிடம்மா
கதிரவன் எழும் முன்னே - தினம்
நீ காலையில் எழுந்திடம்மா
புறத்தூய்மை பேண நன்றாய் நீயும்
குளிர் நீரில் குளித்திடம்மா
அகத்தூய்மை பேண அனுதினமும்
இறைவனை மனதில் நினைத்திடம்மா.

நொடிப் பொழுதும் தாமதமின்றி - தினம்
பள்ளி சென்று சேர்ந்திடவேண்டும்
நல்ல நண்பர் குழாம் உனைச்சுற்றி
பள்ளியில் நீ அமைத்திட வேண்டும்
கற்றுத்தரும் ஆசானை ஆண்டவன் போல்
நாளும் மனதில் நினைத்திடவேண்டும்
கற்ற கல்வி வழிநின்று - தினம்
நீ வாழ்வில் உயர்ந்திடவேண்டும்.

வளர்ந்து வரும் உலகில் சிறந்திட
கணினியைக் கற்றுத் தேர்ந்திடவேண்டும்
உலகத்தின் நடப்பை எல்லாம் - நீ
வலையத்தளத்தில் அறிந்திட வேண்டும்
எவ்வுயரம் வளர்ந்திட்ட போதும் - நீ
பழைமையைப் போற்றிப் பேணிடவேண்டும்
அன்னை தந்தை ஆசான் பேணி
தாய் மொழியை வளர்த்திடவேண்டும்.

## தெரிந்து கொள்ளுங்கள்

### நாற்காலியைத் தள்ளும் நாய்

இரண்டு வயதான "டாச்சண்ட்" இன நாயான "குவாய் வாய்" தனது ஊனமுற்ற முதலாளியின் சக்கர நாற்காலியைத் தள்ளிச் செல்லப் பழகியிருக்கிறது. சக்கர நாற்காலியின் பின்பகுதியில் அது முன்னங்கால்களை வைத்துத் தள்ளிச் செல்கிறது. அது வேகமாகத் தள்ளிச் செல்வதாலும், உருவில் சிறியதாக இருப்பதாலும், முன்னால் வருபவர்கள் கண்ணில் அது படாமல், சக்கர நாற்காலியில் மோட்டார் பொருத்தியிருக்கிறது போலும் என்று நினைக்கிறார்கள்.





### மறையும் நிறம்

**வீடுகளில்** வளர்க்கப்படும் தங்கநிற மீன்களை இருட்டான பகுதியில் வைத்தாலோ, தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும் தண்ணீரில் விட்டாலோ அவை தமது பொன்னிறத்தை இழந்துவிடும்.

### ஆந்தையின் கண்

**ஆந்தையின்** விழிக்கோளங்கள் உண்மையில் நீள்குழாய் வடிவில் இருக்கின்றன. அதனால்தான் ஆந்தையால் தனது கண்களை நகர்த்த முடிவதில்லை.



## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.
மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 27.01.2009

**வர்ணம் தீட்டும் போட்டி இல.780**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772, கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 778

**பரிசுக்குரியவர்:** எவ்.எல். ஆரா தில்பா, பதுரியா வீதி, அன்பு இல்லம், காத்தான்குடி-05.

**பாராட்டுக்குரியவர்கள்**

1. ந. பாதுசன் ராஜ், வெட்டுக்குளம் வீதி, புத்தளம்.
2. ஆர். டினோராகல், பனிச்சையடி சத்துருக்கொண்டான், மட்டக்களப்பு.
3. முத்துசாமி தர்ஷிகன், வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா.
4. பத்மநாதன் கோகிலேஷ், தவசிகுளம் கண்டி வீதி, வவுனியா.
5. கருணாகரன் உமாசங்கரி, 8ஆம் குறுக்கு வீதி, கூழாவடி மட்டக்களப்பு.
6. V. பிரவீன், நற்பட்டிமுனை, கல்முனை.
7. ஜே.எச்.பாத்திமா முஹூசாஸ், 5ஆம் குறுக்கு வீதி, புத்தளம்.
8. உமர் சுக்ரி, வேத்தாவி ரோட், கலகெதர மடிகே.

## கண்டு பிடியுங்கள்

இரண்டிற்குமிடையில் 7 வித்தியாசங்கள்



## விடுகதை

1. கிழித்த கோட்டிற்குள்தான் அவன் ஓடுவான் அவன் யார்?
2. கிண்ணி போலப் பூ பூக்கும்; அதைக் கிள்ளி முடிக்க முடியாது. இது என்ன பூ?
3. கிளிகள் மூன்று நிறம். இந்தக் கிளிகள் கூட்டினுள் சென்றால் ஒரே நிறம். இவை என்ன?
4. குடுக்கை நிறைய நல்ல வைர மணிகள்; இது என்ன?
5. கிணற்றினுள் அம்புகளை வீசுவாரேயன்றி எடுப்பார் இல்லை; இது என்ன?
6. கிளை உண்டு; ஆனால் இலை இல்லை; அது என்ன?
7. கிணற்றைச் சுற்றி வெள்ளைக் கற்கள்- இவை என்ன?
8. குட்டியும் போடும், குவலயம் எல்லாம் பறக்கும்; இது என்ன?
9. குட்டப் பிள்ளைக்குக் குறுணி நகை. இது என்ன?
10. குட்டைச் சிறுக்கிக்குப் பெட்டிப் புடைவைகள். இது என்ன?

**7 வித்தியாசங்கள் விடைகள்**
1. ஜன்னல்
2. பெண்ணின் கால் நகம்
3. கோழியின் கால்
4. பாத்திரம்
5. கதவு
6. மேகம்
7. வளையல்

**விடுகதை விடைகள்**
1. ரயில்
2. ஊமத்தம் பூ
3. வெற்றிலை ,பாக்கு, சுண்ணாம்பு
4. மாதுளம்பழம்
5. மழைத்துளி
6. மான்கொம்பு
7. பற்கள்
8. வௌவால்
9. கோழி மயிர்
10. உள்ளிப்பூண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர)ப் பரீட்சை

## கணிதம் (பகுதி -1B) (ஒரு மணித்தியாலம்)

### இல. - 01.

01. $A=\begin{pmatrix} 2 & 4 & -3 \\ -1 & 3 & 0 \end{pmatrix}$ $B=\begin{pmatrix} -5 & 1 & 3 \\ 10 & -9 & -4 \end{pmatrix}$

(i) A, B இன் வரிசைக்கான
(ii) A + B, 2A + 3B இன் பெறுமதியைக் காண்க?
(iii) A - B + C = 0 ஆகுமாறு C ஐக் காண்க.


02. (a) விஜய் ரூபா 150,000 ஐ முதலிட்டு, வியாபாரத்தை ஆரம்பித்தார். 6 மாதங்களின் பின் ரூபா. 250,000 முதலிட்டு அஜித் இவருடன் பங்காளியாய் இணைந்துகொண்டார். ஒரு வருட முடிவில் ரூபா. 231,000 இலாபமாகப் பெறப்பட்டது. இவ் இலாபமானது முதலீட்டிற்கும் காலத்திற்கும் ஏற்ற விகிதத்தில் பங்கிடப்படின்,
(i) இலாபம் பங்கிடும் விகிதத்தைக் காண்க?
(ii) ஒவ்வொருவரும் பெற்ற இலாபத்தைத் தனித்தனியாகக் காண்க?

(b) பொருள் ஒன்றை 10% குறைத்து விற்றதால் அது ரூபா. 90 குறைத்து விற்கப்பட்டது எனின் அப்பொருளின்
(i) கொள்விலை யாது?
(ii) 20% இலாபம் பெற விற்க வேண்டிய விலை யாது?

03. (a) குறித்த நாளொன்றில் 07.00 மணிக்கு நிஸார் ஒரு செய்தியை இருவருக்கு அனுப்புகிறார். 08.00 மணிக்கு அவ்விருவரும் தனித்தனியாக மேலும் இருவருக்கும் வீதம் அனுப்புகின்றார்கள். இவ்வாறு ஒவ்வொரு மணித்தியாலத்தின் இறுதியிலும் செய்தி கிடைத்த ஒவ்வொருவரும் மேலும் இருவருக்கு அனுப்புகிறார்கள். இது தொடர்ந்து நடைபெற்றது எனின்,
(i) 11.00 மணி முடிவில் செய்தி பரவிய முறையை எண்கள் மூலம் காட்டுக?
(ii) அவ்வேளையாகும் போது செய்தி கிடைத்தோர் மொத்தம் எத்தனை பேர்?


(b) 70, 64, 58, 52 எனும் கூட்டல் தொடரில்,
(i) 12ஆம் உறுப்பு
(ii) முதல் 12 உறுப்புக்களின் கூட்டுத்தொகை என்பவற்றைக் காண்க.

04. உருவில் காட்டப்பட்டுள்ள பலகைக்கு குறித்த ஓர் இடத்தில் இருந்து அம்பொன்று எய்யப்படுகிறது. அம்பின் தலை 0-9 வரையுள்ள எண்கள் குறிக்கப்பட்ட வட்டத்தின் மீது பாய்கின்றது. (கோடுகளின் மீது பாயாது எனக் கொள்க)




(i) அம்புத்தலை எண் ஒன்றின் மீது பாயும் மாதிரி வெளியை எழுதுக.
(ii) அம்புத்தலை முக்கோணி எண் ஒன்றின் மீது பாயும் நிகழ்ச்சித் தொடை A எனின் தொடை A யின் மூலகங்ளை எழுதுக?
(iii) அம்புத்தலை 3 இன் மடங்குகள் மீது பாயும் நிகழ்ச்சித் தொடை B எனின் தொடை B யின் மூலகங்களை எழுதுக?
(iv) (AnB) யாது?
(v) P (AnB) யாது?

05. (a) தரம் 11 மாணவர்கள் கணித மதிப்பீடொன்றின்போது பெற்ற புள்ளிகளைக் காட்டும் வலையுருவில் காட்டப்பட்டுள்ளது.



(i) 0 - 40 வகுப்பாயிடையில் புள்ளி பெற்ற மொத்த மாணவர்கள் தொகை யாது?
(ii) வலையுரு வரைபை விடைத்தாளில் பிரதி செய்க. 80 - 120 வகுப்பாயிடையில் மாணவர் தொகை 10 ஆயின் அதனை வரைந்து காட்டுக.
(iii) அவ்வலையுரு வரைபில் மீடிறன் பல்கோணியையும் வரைக.


(b)(i) மடக்கை அட்டவணையை உபயோகிக்காது பெறுமானம் காண்க.
1/2 log 9 + 2log 6 - 3 log 3+ 2 log 5
(ii) பெறுமானம் காண்க.
$(1/8)^{1/3}$ x 8 11/2

(iii) சுருக்குக. ( 33/10 - 25/6) ÷ 12/5

### இல. - 02.

01. (a) ஒரு விருந்தினர் குழுவில் 80 பேர் இருந்தார்கள். அவர்களில் 40 பேர் வடை, 35 பேர் கேக், 25 பேர் பற்றீஸ் உண்டார்கள். வடையும், கேக்கும் உண்டவர்கள் 20 பேர், கேக்கும் பற்றீஸும் உண்டவர்கள் 15 பேர், பற்றீஸ் மட்டும் உண்டவர்கள் 5 பேர், கேக்கும் பற்றீஸும் உண்டவர்களில் 5 பேர் வடை உண்ணவில்லை.
(i) இத்தகவலை வென்வரிப்படம் ஒன்றின் மூலம் விளக்குக.
(ii) வடையும், பற்றீஸும் உண்டோர் தொகை யாது?
(iii) இவர்களில் எத்தனை பேர் மேற்குறித்த எந்த உணவையும் உண்பதில்லை?

(b)





b. உருவில் நிழற்றிய பகுதி எப்பிரதேசத்தை வகைக் குறிக்கின்றது?

02. (a) 20000 ரூபா பெறுமதியான ஒரு தளபாடத் தொகுதிக்கு 8000 ரூபா முற்பணம் கொடுத்து, மீதி 15 சமமான தவணையில் மீளச் செலுத்தப்பட்டது. இதற்கு 60% மாதாந்த வட்டி அறவிடப்பட்டது.
(i) முற்பணம் செலுத்தியபின் கட்டணங்களாகச் செலுத்த எஞ்சி நிற்கும் தொகை யாது?
(ii) வட்டி தவிர்ந்த ஒரு தவணைக் கட்டணம் யாது?
(iii) ஒரு தவணை வட்டி யாது?
(iv) வட்டி செலுத்தப்பட்ட மொத்த மாத அலகு எத்தனை?
(v) வட்டியுட்பட ஒரு தவணைக் கட்டணம் யாது?

03. $\begin{pmatrix} a & -2b \\ 3x & -y \end{pmatrix} + \begin{pmatrix} b & -a \\ -y & 2x \end{pmatrix} = \begin{pmatrix} 3 & -3 \\ 3 & 4 \end{pmatrix}$

(i) a, b இன் சார்பில் இரு ஒருங்கமைச் சமன்பாடுகளைத் தருக?
(ii) அதனைத் தீர்த்து a, b இன் பெறுமானத்தைக் காண்க.
(iii) x, y இல் இரு ஒருங்கமைச் சமன்பாடுகளை எழுதி அவற்றிலிருந்து x, y இன் பெறுமதியைக் காண்க.


04. (a)





குறித்த விளையாட்டொன்றில் பயன்படுத்தும் வட்டத்தட்டுப் படத்தில் காட்டப்பட்டுள்ளது. இது 8 சம பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 3 பகுதிகள் W எனக் குறிக்கப்பட்டு வெற்றி எனக் கொள்ளப்படுகிறது. மிகுதி 5 பகுதிகளும் L எனக் குறிக்கப்பட்டு தோல்வி எனக் கொள்ளப்படுகிறது. இவ்விளையாட்டில் ஒருவருக்கு மூன்று சந்தர்ப்பங்கள் வழங்கப்படும். விளையாட்டில் வெற்றி பெற 2W தேவைப்படும். முதல் இரு சந்தர்ப்பங்களிலும் W பெறப்படின் போட்டி நிறுத்தப்படும். இதேபோல் முதல் இரு சந்தர்ப்பங்களிலும் L பெறப்பட்டாலும் போட்டி நிறுத்தப்படும்.

இப்போட்டிக்கு வந்திருக்கும் ரஜீவனின் வெற்றி தோல்வி வாய்ப்புக்களை வெளிக்கொணரும் மாவரிப்படத்தை வரைக. இதனைப் பயன்படுத்தி பின்வருவனவற்றின் நிகழ்தகவுகளைக் காண்க.
(i) ரஜீவன் முதல் இரு சந்தர்ப்பங்களிலும் வெற்றி பெறுதல்.
(ii) ரஜீவன் முதல் இரு சந்தர்ப்பங்களிலும் தோல்வியடைதல்.
(iii) ரஜீவன் மூன்று சந்தர்ப்பங்களிலும் பங்கு பற்றி வெற்றியடைதல்.
(iv) ''ரஜீவனின் தோல்விக்கான வாய்ப்பு வெற்றிக்கான வாய்ப்பின் இரு மடங்கிலும் அதிகம்'' எனக் காட்டுக.

05.




(a) உருளை வடிவமான மரக்குற்றி ஒன்று படத்தில் காட்டப்பட்டுள்ளது வெட்டப்பட்டுள்ளது.
(i) வட்ட ஆரைச் சிறையின் பரப்பளவு யாது?
(ii) வளை பரப்பளவு யாது?
(iii) மொத்த மேற்பரப்பளவு யாது?




(b) ABCE என்னும் செவ்வக வடிவத் தரையிலிருந்து CDE எனும் அரைவட்டப் பகுதி நீக்கப்பட்டு ABCDE எனும் பூப்பாத்தி ஒன்று அமைக்கப்படுகிறது.
(i) செவ்வக ABCE இன் பரப்பளவு யாது?
(ii) அரைவட்டம் CDE இன் பரப்பளவு யாது?
(iii) பூப்பாத்தி ABCDE இன் பரப்பளவு யாது?
(iv) பூப்பாத்தி ABCDE இன் சுற்றளவு யாது?


### இல. - 03.

01. (a) $A=\begin{pmatrix} 1 & 4 \\ -1 & 2 \end{pmatrix}$ $B=\begin{pmatrix} x+y & P+Q \\ x-y & P-Q \end{pmatrix}$
(i) A இன் வரிசை எழுதுக.
(ii) தாயம் A இன் சிறப்புப் பெயர் யாது?
(iii) A=B எனின் x,y,P,Q இன் பெறுமதி யாது?

(b) $\begin{pmatrix} x^2 - x & y^2 \\ a^2 + 4 & b^2 \end{pmatrix}$ $\begin{pmatrix} 2x+4 & y+2 \\ 4a & b \end{pmatrix}$

(i) x இன் சார்பில் சமன்பாட்டை அமைத்து x இன் பெறுமதியைக் காண்க.
(ii) y இன் சார்பில் சமன்பாட்டை அமைத்து y இன் பெறுமதியைக் காண்க.
(iii) a இன் சார்பில் சமன்பாட்டை அமைத்து a இன் பெறுமதியைக் காண்க.
(iv) b இன் சார்பில் சமன்பாட்டை அமைத்து b இன் பெறுமதியைக் காண்க.

02. ஒரு குழுவில் இருந்த 20 பெண்களிடம் பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு 14 fairever கிறீமையும் 9 பேர் fairplus கிறீமையும் 7 பேர் fair and lovely கிறீமையும் பூசுகின்றனர். fair and lovely கிறீம் பூசும் அனைவரும் fairever கிறீமையையும் பூசுகின்றனர். 4 பேர் fairever கிறீமையும் fair and lovely கிறீமையும் பூசியபோது fairplus கிறீமைப் பூசுவதில்லை. 5 பேர் fairplus கிறீமையும் fairever கிறீமையும் பூசுவர் ஆயின்,




(i) தரவுகளைத் தரப்பட்ட வென்னுருவில் குறிக்க.
(ii) fair and lovely கிறீமும் fairplus கிறீமும் பூசுவோர் எத்தனை பேர்?
(iii) fair and lovely கிறீம் பூசுவோருக்கும் மூன்றையும் பூசுவோருக்கும் இடையிலான விகிதம் யாது?
(iv) fairever கிறீம் மட்டும் பூசுவோர் எத்தனை பேர்?
(v) இவற்றுள் ஒரு வகையேனும் பூசாதவர்கள் எத்தனை பேர்?

03. (a) கம்பியில்லாத் தொலைபேசி (CDMA) ஒன்றை உடன் காசிற்கு வாங்குவதாயின் ரூபா 12,600.00 செலுத்த வேண்டும். வாடகைக் கொள்வனவிற்கு வாங்குவதாயின் முதலில் ரூபா 3,000.00 ஐயும் பின்னர் தவணைக்கு ரூபா 500.00 வீதம் சமமான 24 மாதத் தவணைகளில் செலுத்தும் முறையிலும் வாங்கலாம்.
(i) இத் தொலைபேசியை வாடகைக் கொள்வனவில் வாங்கும்போது கடனாகத் திருப்பிச் செலுத்த வேண்டிய மிகுதித் தொகை யாது?
(ii) செலுத்த வேண்டிய வட்டித் தொகை யாது?
(iii) வட்டி செலுத்த வேண்டிய மாத அலகுகள் எத்தனை?
(iv) ஒரு மாத அலகிற்கான வட்டி யாது?
(v) வருடாந்த வட்டி வீதம் எவ்வளவு?

(b) குறித்த ஒரு வீடொன்றிற்கு வீட்டு வரியாக ஒரு காலாண்டிற்கு ரூபா 314.25 செலுத்த வேண்டும். வருடாந்த வரி வீதம் 6% ஆகும்.
(i) வருடாந்தம் செலுத்த வேண்டிய வரித் தொகை எவ்வளவு?
(ii) வீட்டின் ஆண்டுப் பெறுமானம் எவ்வளவு?
(iii) வீட்டினை ஒரு வருடத்திற்கு வாடகைக்கு விட்டுக் கிடைக்கும் தொகையிலிருந்து ஒரு தொகை திருத்த வேலைகளுக்காக ரூபா 10,000, வருடாந்த வரியும் செலுத்தப்பட்டது. அப்போது எஞ்சியுள்ள தொகை ரூபா 24,743 ஆயின் வீட்டின் மாத வாடகை யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அஜித் - ஷாலினி - அனோஷ்கா

## மினிசினி

✣ புத்தாண்டுக் கொண்டாட்டத்திற்கு ஏக கெடுபிடிகள் இருந்ததால், திரிஷா தனது நெருங்கிய நண்பர்கள் குழுவுடன் துபாய்க்குப் பறந்திருக்கிறார். துபாயில் புத்தாண்டைக் கொண்டாடியிருக்கிறது திரிஷா அண்ட் கோ.

✣ **அர்ஜுன்** தீவிர ஆஞ்சநேயர் பக்தர். தன்னுடைய படங்களின் வசனங்களில் அவ்வப்போது இது வருமாறு பார்த்துக்கொள்கிறார்.

✣ **கே.பாலசந்தரும்,** பாரதிராஜாவும் இணைந்து நடிக்கும் 'ரெட்டச்சுழி' படத்தின் ஷூட்டிங்கில் இவர்கள் இருவரின் நடிப்பையும் பார்க்க இயக்குநர் சங்கம் மூலமாக இரண்டு பஸ்களில் இயக்குநர்கள் ஆவலோடு செல்லத் திட்டமிட்டு வருகிறார்கள்.

✣ **நடிகர்கள்** தங்களது வாரிசை சொந்தப் படமெடுத்து ஹீரோவாக்குவது போல, முன்னாள் கவர்ச்சி நடிகை பபிதா தனது மகள் லக்ஷ்வை ஹீரோயினாகக் களமிறக்க, 'காதலை மறந்தேன்' என்ற படத்தை எடுக்கப் போகிறார்.



# நான் கடவுளுக்கு இரண்டு முடிவு!

**பாலாவின்** "நான் கடவுள்" தான் இன்றைய திகதியில் கோலிவுட்டின் பரபரப்பு. ஆர்யா, பூஜா நடித்துள்ள இப்படத்தின் டிரெயிலரே மிரட்டலாக வந்துள்ளது. பாடல்களிலும் தனி முத்திரை பதித்துள்ளார் இளையராஜா. இயக்குநர் பாலாவின் படைப்புகளில் இது ஒரு மைல்கல்லாக இருக்கும் என்பது ரசிகர்களின் எதிர்பார்ப்பு! தனது எண்ணப்படி மட்டுமே நடப்பேன் என்று பிடிவாதமாக இருக்காமல், ரசிகர்களுக்காகவும் ஒரு காரியத்தைச் செய்துள்ளாராம் பாலா.

அதாவது, 'நான் கடவுள்' படத்தில் அவர் இரண்டு க்ளைமாக்ஸ் காட்சிகளை எடுத்துள்ளார். ஒன்று... அவரது படைப்புக்கே உரிய அம்சமான சோகம், கொடூரம், ஷாக்..! மற்றொன்று... ரசிகர்களின் மனதை ரொம்பவும் பாதிக்காத வகையில்..! ஆரம்பத்தில் முதல் க்ளைமாக்ஸை இணைத்து வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த க்ளைமாக்ஸை ரசிகர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் இரண்டாவது திரைக்கு வரும்...

# திரையுலகப் பொங்கல் - 2009

**வில்லு:-** போக்கிரிக்குப் பிறகு பிரபுதேவா இயக்கி விஜய் நடித்திருக்கும் படம். நயன்தாராவுக்கு தமிழில் இருக்கிற மார்க்கெட்டை தக்க வைத்துக்கொள்ள கிடைத்திருக்கும் ஒரே வாய்ப்பு. விஜய்க்கும் இதே கட்டாயம்தான்! தனது இரட்டை வேட சென்டிமென்ட்டை புறம் தள்ளிவிட்டு இந்த படத்தில் அப்பா மகனாக நடித்திருக்கிறார் வைகை புயல். இடைவேளைக்கு முன்பு வரை காமெடி புயலை வீசி, தியேட்டரையே திடுதிடுக்க வைத்திருக்கிறார் வடிவேலு. மசாலாவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கும் கதையில் நம்ப முடியாத சண்டைகள்தான் அதிகம் என்கிறார்கள்.

**படிக்காதவன்:-** காமெடிக்கு குறைவில்லை என்கிறார்கள். வடிவேலுவுக்குப் பதிலாக இதில் விவேக் நடித்திருக்கிறார். பொல்லாதவன், யாரடி நீ மோகினி வெற்றியைத் தொடர்ந்து வருகிற தனுஷின் படம். என்ன நினைத்தார்களோ, முந்தைய படங்கள் மாதிரி கதையை மட்டும் நம்பாமல் ஆக்ஷனையும் பலமாக நம்பியிருக்கிறார்கள். படித்த குடும்பத்தில் பிறந்து பத்தாவது கூட பாஸ் ஆகாத தனுஷ் செய்கிற அலம்பல்கள்தான் கதை. ஜோடி தமன்னா. தமிழ் சினிமாவில் திடீர் பிரமோஷன் ஆகியிருக்கும் தமன்னாவுக்கு இந்தப் படம் கைகொடுக்கும்.

**காதல்னா சும்மா இல்லே:-** ரவிகிருஷ்ணா, தெலுங்கு ஹீரசர்வானந்த், கமலினி முகர்ஜி ஆகியோர் நடித்திருக்கும் இப்படத்தை இளங்கண்ணன் இயக்கியிருக்கிறார். 7ஜி ரெயின்போ காலனிக்குப் பிறகு ஒரு கட்டாய வெற்றிக்காக காத்திருக்கும் ரவி கிருஷ்ணா, இதில் காமெடியாகவும் நடித்திருக்கிறார். தேஜாஸ்ரீ போட்டிருக்கும் ஒரு ஆட்டமும், அந்தப் பாடலும் இந்த வருடத்தின் சூப்பர் ஹிட் வரிசையில் இடம் பிடிக்கும்.



விஜய் - நயன்தாரா
வில்லு

முகப்பில்:- விஜய் - நயன்தாரா

# "தாயாக நினைக்கிறேன்!"

**'நொந்தலாலா'** என்றுதான் டைட்டில் வைத்திருக்க வேண்டும். "சித்திரம் பேசுதடி படத்திற்கு பிறகு அடுத்த படமாக இதைத்தான் எடுக்கணும்னுதான் நினைச்சேன். ஆனால் கதையை கேட்ட ஹீரோக்களும் சரி, தயாரிப்பாளர்களும் சரி, வேறு ஏதாவது கதை இருந்தா சொல்லுங்கன்னு சொல்லிட்டாங்க. வேற வழியில்லாம தான் அஞ்சாதே படத்தை எடுத்தேன்"

"இந்த முறை சும்மா கேட்டு பார்ப்போமேன்னுதான் ஐங்கரன் ஆபிசுக்குப் போனேன். நான் கதை சொல்ல முன்வந்தபோதும், "வேணாம்... உங்க மேல் நம்பிக்கை இருக்கு" என்று சொல்லி இந்தப் படத்தை எடுக்க முன்வந்தாங்க கருணாமூர்த்தியும், அருண்பாண்டியனும்! இரண்டு பேரையும் என்னுடைய தாயாக நினைக்கிறேன்" என்று நந்தலாலா படத்தின் உருவாக்கக் கதையை நன்றியுணர்வுடன் சொல்லுகிறார் மிஷ்கின். இந்தப் படத்திற்கு பிறகு 30 கோடி ரூபாய் பட்ஜெட்டில் இன்னொரு படத்தையும் மிஷ்கினுக்கு வழங்கியிருக்கிறது ஐங்கரன்.

நந்தலாலாவுக்காக ஐந்து பாடல்கள்ளைப் போட்டுக் கொடுத்தாராம் இளையராஜா. இதில் இரண்டைத்தான் படத்தில் பயன்படுத்தியிருக்கிறார் மிஷ்கின். "இதற்காக இசை ஞானியிடம் மன்னிப்புக் கேட்டேன். ஏன்னா படத்திலே இரண்டு இடத்திலேதான் பாடலைப் பயன்படுத்த வாய்ப்பு இருந்திச்சு. மற்ற பாடல்கள் ஆடியோ சி.டியில் இருக்கு" என்று கூறும் மிஷ்கின் தமிழ் சினிமா வரலாற்றில் இவ்வளவு சிம்பிளாக ஒரு ஆடியோ வெளியீட்டு விழாவும் நடந்த தில்லை. ஆர்ப்பாட்ட மில்லாமல், உள்ளத்தை தொடும் படி அமைந்திருந்தது விழா, மிஷ்கினின் படங்களைப் போலவே தான்!

# ஜோடி சேருகிறது காதல் ஜோடி!

"யார யாருடனோ சேர்ந்து நடிக்கிற திரிஷா, நான் கேட்டால் மட்டும் கால்ஷீட் இல்லை என்கிறார்" என்று பொத்தாம் பொதுவில் நின்று புலம்பி வைத்தார் விஷால். சொல்லி வைத்துக் கிள்ளிக் கொண்டார்களோ என்னவோ? "அதுக்கென்ன, கொடுத்திட்டாப் போச்சு" என்று திரிஷாவும் பெரிய மனசு பண்ணினார். செல்வராகவன் இயக்கவிருக்கும் படத்தில் விஷாலுடன் ஜோடி சேரப்போவது திரிஷாதானாம். தனது குடும்பத்தினர் எல்லோரையும் கூட்டி வைத்துத்தான் இந்தக் கதையின் லைனைக் கேட்டிருக்கிறார் விஷால். வருடக்கணக்கில் படத்தை இழுக்கக் கூடாது என்ற கண்டிஷன்களுக்கு உட்பட்டு இந்தப் படத்தில் சைன் பண்ணியிருக்கிறாராம் இவர். இதற்கிடையில் அவுஸ்திரேலியா போயிருக்கும் திரிஷ், அங்கிருந்து விஷாலுக்கு அழைப்பு விடுத்திருக்கிறாராம். இந்த மாதம் முழுவதும் அங்கேயே இருக்கப் போவதாகவும், முடிந்தால் வந்துவிட்டுப் போகும்படியும் கூறியிருக்கிறாராம். தற்போது 'தோரணை' படத்தில் பிசியாக இருக்கும் விஷால், ஒரு பாடல் காட்சியை அவுஸ்திரேலியாவில் வைங்களேன் என்கிறாராம் தயாரிப்பாளரிடம். இவரது அண்ணன் விக்ரம் கிருஷ்ணாதான் தோரணையின் தயாரிப்பாளர் என்பதால், சரி என்று கூறியிருக்கிறாராம் தம்பியிடம். காதலின் வலி தெரிந்தவர்தானே இந்த அண்ணனும்!



தனுஷ் - தமன்னா
படிக்காதவன்

# ஒரே மாதிரியிருந்தால் போரடித்து விடும் - நயன்தாரா

வில்லு படம் வெளியானதைத் தொடர்ந்து தமிழகச் சஞ்சிகை ஒன்றிற்கு நயன்தாரா வழங்கிய பேட்டியில் சில பகுதிகள்...

***கேள்வி:-*** விஜயுடன் 'வில்லு' பற்றி...

***பதில்:-*** விஜயுடன் முதன் முறையாக ஜோடியாக நடிப்பதில் எனக்குச் சந்தோஷம். சில படங்களைப் பண்ணும்போது நமக்கே ஒரு திருப்தி இருக்கும். அந்தத் திருப்தி 'வில்லு' படத்தில் முழுமையாக இருக்கிறது.

***கேள்வி:-*** 'ஐயா' படத்தில் வந்த அந்த நயன்தாராவுக்கும் 'பில்லா'வில் வந்த நயன்தாராவுக்கும் இடையிலான மாற்றங்கள் எப்படி வந்தது?


***பதில்:-*** ஹீரோயின்கள் எல்லாப் படங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு எப்போதும் உண்டு. இந்தக் கமெண்ட்டிற்குக் கீழே நானும் வர விரும்பவில்லை. முதல் படத்தில் பார்த்தது போல் அடுத்த படங்களிலும் இருக்கக் கூடாது. நம்முடைய காஸ்ட்யூம், ஸ்டைல், லுக் என எல்லாவற்றிலும் நல்ல மாற்றங்கள் இருக்க வேண்டும். இதுதான் நம்மை அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்லும். ஒரே மாதிரி இருந்தால் மக்களுக்கும் போரடித்துவிடும். அதனால்தான் ஒவ்வொரு படத்திற்கும் சின்னச் சின்ன மாற்றங்களைச் செய்து வருகிறேன்."

***கேள்வி:-*** காதல் பரபரப்பு, பிரிவு எல்லாம் முடிந்து கடந்த இரண்டரை வருடங்களாக 'சிங்கிளாக' இருக்கிறீர்களே. இந்த சிங்கிள் ஸ்டேட்டஸை என்ஜாய் செய்கிறீர்களா?

***பதில்:-*** "ரிலேஷன்ஷிப்பில் இருந்தால் நம்மால் சுதந்திரமாக எந்த வேலையையும் பார்க்க முடியாது. முக்கியமாக ஹீரோயின்களால் முடியவே முடியாது. காரணம், ஹீரோயின்கள் நடிக்கும் படங்களில் இடம் பெறும் சில காட்சிகள், அணிகிற சில காஸ்ட்யூம்கள், வசனங்கள் என எல்லாவற்றையும் நம்முடைய பர்ஸனல் வாழ்க்கைக்காக, ரிலேஷன்ஷிப்பிற்காக காம்ப்ரமைஸ் செய்துகொள்ள முடியாது. இந்த மாதிரியா எமோஷனலான விஷயங்களால் முழுமையாக வேலை பார்க்க முடியாது. வேலை பாதிக்கும். சிங்கிளாக இருந்தால் இந்த மாதிரி பிரச்சினைகள் எதுவும் இருக்காது."



தமன்னா
படிக்காதவன்



நடி... போ... கட... அத... போ... ஆ... ந... அடி... ருக்... தில்... நடி... செய... இனை... என்... கேட்... பேட்... "லவ... கிறே... செல்... இனை... (right-edge column cut off)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஜீவா - அனுஷா
சிவா மனசில சக்தி

## எந்திரனுடன் மோத ஹாலிவூட் வில்லன்!

**சூப்பர்** ஸ்டார் ரஜினியின் படங்களில் வரும் வில்லன் பாத்திரத்துக்கு எப்போதுமே மிகுந்த முக்கியத்துவம் உண்டு.

முரட்டுக் காளையில் ஜெய்சங்கர், மிஸ்டர் பாரத்தில் சத்யராஜ், படையப்பாவில் ரம்யாகிருஷ்ணன் மாதிரி... இப்போது எந்திரனில் அந்தப் போக்கு தொடர்கிறது. பாலிவுட்டில் புகழ் பெற்ற ஒரு வில்லனை இந்தப் படத்தின் மூலம் தமிழுக்கு அறிமுகப்படுத்துகிறார்கள். அவர்தான் டேனி டெங்ஸோங்பா.

அமிதாப் போன்ற ஜாம்பவான்களுக்கு நிகராகப் பேசப்பட்டவர். இவர்தான் இப்போது எந்திரன் பட வில்லன். டேனியின் சேர்க்கை படத்துக்கு நிச்சயம் பலம்தான். 2003ஆம் ஆண்டு பத்மஸ்ரீ பட்டம் பெற்ற டேனி, ஹாலிவுட் படத்திலும் நடித்துள்ளார்.



என்னால் நிருபித்துகாட்டும்
மலையாள மாந்திரிக சக்தியால்!

(1)தொழில் வெற்றியின்மை, (2)வியாபாரத்தில் விருத்தியின்மை, (3)கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடு (4)தாம்பத்தியவாழ்க்கையிலுள்ள பிரச்சனைகளுக்கு (5)திருமணம் தடைப்பட்டுக்கொண்டு இருத்தல், ஸ்த்ரீ, புருஷ வசியம் (6)குழந்தை பாக்கியமின்மை, (7)வெளிநாடு செல்லத்தடை (8)மனக்குழப்பம், (9)பணமிருந்தும் மன நிம்மதியின்மை, (10)கடின உழைப்பிருந்தும் கையில் பணம் தங்காமை, (11)படிப்பு பட்டம் இருந்தும் புகழ்பெற முடியாமை, (12)முயற்சியிருந்தும் முன்னேற்றத்தில் தடை, (13)சூனியக்கோளாறு தீயசெய்வினைகள், (14)அதிஷ்ட வாழ்வு சொத்து சேர, இன்னும் உங்கள் சகல நிறைகுறைகளுக்கும் என்னை சந்திக்கலாம், (15) காண்ட அடிப்படையில் அக்குவேறு ஆணிவேறாக 331 பக்கம் கொண்ட அவரவர் ஜனனஜாதகத்தை வாழ்க்கை சித்திரமாக அறிந்து தெரிந்து செயற்பட, ஜாதக கணிப்புக்கும் மட்டும் கட்டணம் ரூபா 2700/= தபால் கட்டணம் 350/=

வெளிநாட்டவர்களுக்கு விஷேட சலுகை உண்டு

அருள் ஞானசித்தர் தேசபந்து, கௌரவ பேராசிரியர், ஜோதிட கலாநிதி P.K.SAMY(J.D.G.A.N) JP ஐயா
ஸ்ரீ துர்க்காதேவி மாந்திரீக உச்சாட்ட பீடம்
No.162, KOTAHENA STREET, MAYFIELD ROAD, COLOMBO - 13
011 2470615, 011 2342463, 011 2342464, Fax.0094-11-2344831
நுவரெலியாவில் என் நிறுவனம் துர்க்காதேவி ஆலயம்,
இல 33,கண்டி வீதி,நுவரெலியா 052 2222508.

குறிப்பாக உண்மையை கண்டறிய வாருங்கள். தினந்தோறும் மாதந்தோறும் ஸ்ரீ துர்க்கையின் உச்சாட பீடத்தில் நடக்கும் அக்கினி குண்டல யாக பூஜையில் கலந்து கொள்பவர்களுக்கு தெய்வீக சித்தம் பெறுவது திண்ணம். அன்று அன்னதானமும் வழங்கப்படும்


## குதறியது நாய்!

**யோகி** படத்தில் ஒரு காட்சி. பத்திரிகையாளர் தேவராஜ் இதில் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். இவரை வாசலில் நின்று யாரோ அழைப்பது போலவும், யார் என்று பார்க்க வாசலுக்கு போகும்போது இவர் வளர்க்கும் நாய் செல்லமாக மறிப்பது காட்சி. அப்போது கையிலிருக்கிற கட்டையால் நாயின் மண்டையில் அடித்துவிட்டு வாசலுக்குப் போக வேண்டும் என்பது காட்சி. அதன்படி நாயின் தலையில் அடிக்க நாய்க்குக் கோபம் தலைக்கேறியது. சில அடி தூரம் கூடப் போயிருக்க மாட்டார் தேவராஜ். பாய்ந்து சென்று அவரது கை, கால்களைக் கடித்துக் குதற ஆரம்பித்தது. ஓடவேண்டிய பரிதாப நிலையை ஏற்படுத்திவிட்டார் நாயகர்.

## காதோடு சொல்லுகிறோம்

❊ **மொழி** தெரியாத நடிகைகளுக்கு 'பிராம்ட்' மூலம் வசனம் சொல்லித் தரப்படும். ஆனால், தமன்னாவோ இந்தியில் எழுதிக்கொண்டு வசனம் பேசுகிறார்.

❊ **மூக்கு** ஆபரேஷனுக்குப் பிறகு கிளாமராக நடிக்க முடிவு செய்திருக்கிறாராம் சந்தியா! 2ஆவது முறையாக மூக்கில் கத்தி வைக்க முடியாதே?

❊ **கஜினி** பெரிய ஹிட் ஆனதால் தமிழுக்கு வருகிற ஐடியாவைத் தள்ளிப் போட்டுவிட்டார் அசின். அப்படி வலிந்து கேட்பவர்களிடம் 2 சி கேட்கிறாராம்.

❊ **வேர்ல்டு** நாயகனின் ஓல்டு காதலி இப்போது அவரை விட்டு பிரிந்துவிட்டாராம். இதற்கு முன்பும் இதுபோல் பலமுறை நடந்திருப்பதால் மீண்டும் வருவார் என்று அலட்சியமாகவே இருக்கிறார் நாயகன்.

❊ **கல்யாணம்** ஆகிவிட்டால் வருமானம் போய்விடுமே என்பதால், தம்பியையும் களத்தில் இறக்கியிருக்கிறார் சங்கீதம். ஆனால், பையனின் போக்கும், மூக்கும் ஒரு ரசிகனையும் இம்ப்ரஸ் பண்ணாது என்று பந்தயம் கட்டுகிறது ஹாலிவுட்.

## நடிப்பும் இசையும் இரு கண்கள்!

**கமலின்** வாரிசான ஸ்ருதி, அப்பாவின் அடிச்சுவட்டில் வளர்ந்துகொண்டிருக்கிறார். இப்போது ''லக்'' இந்திப் படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார். இசை - நடிப்புன்னு இரண்டு ரூட்டுகளில் பயணம் செய்கிறீர்களே? நீங்கள் நேசிப்பது இசையா, நடிப்பா என்றால், ''இரண்டும் என் இரண்டு கண்கள்'' எனக் கேள்வி கேட்பவர்களின் வாயை அடைக்கிறார்.

சமீபத்தில் அவர் அளித்த மினி பேட்டி... ''இம்ரான் கான் ஜோடியாக ''லக்'' இந்திப் படம் மூலம் அறிமுகமாகிறேன். என் பெற்றோர் வழியில் செல்வீர்களா? என்கிறார்கள். நான் இசை கற்றேன். நடிப்பு லகக் குடும்பத்தில் பிறந்ததால் அது என் பிறவியிலேயே ஊறி இருக்கிறது. நடிப்புதான் தொழில் என்ற குடும்பத்தில் பிறந்துவிட்டு நடிக்க முடியாது என்று மறுக்க முடியாது. இசைக்குத்தான் முக்கியத்துவம் தருவீர்களா? என்கின்றனர். இசையில் எனது திறமையை வெளிப்படுத்தியிருக்கிறேன். இதையடுத்து நடிப்புத் துறைக்குச் செல்லத் தயாராகிவிட்டேன். தமிழ், இந்திப் படங்களில் பாடிக் கொண்டே நடித்தவர்கள் நிறையப் பேர் இருந்தார்கள். நானும் பாடிக்கொண்டே நடிப்பேன் என்றார்.


ஆர்யா - த்ரிஷா
சர்வம்

## உற்சாக வரவேற்பு!

**கோல்டன்** குளோப் விருது பெற்றுத் திரும்பிய இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு சென்னை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. "ஸ்லம் டாக் மில்லியனர்" என்ற ஆங்கிலப் படத்துக்கு இசை அமைத்ததற்காக ஏ.ஆர்.ரஹ்மானுக்கு விருது அமெரிக்காவின் பெவர்லி ஹில்ஸ் நகரில் கடந்த 13 ஆம் திகதி வழங்கப்பட்டது. ஆஸ்கார் விருதுக்கு இணையானதாகக் கருதப்படும் இந்த விருதைப் பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமையை ரஹ்மான் பெற்றார்.

விருது பெறுவதற்காக அமெரிக்கா சென்றிருந்த ஏ.ஆர். ரஹ்மான், விமானத்தில் ஜெர்மனி வழியாகக் கடந்த வெள்ளிக்கிழமை 1.30 மணிக்கு சென்னை திரும்பினார். சென்னை பன்னாட்டு விமான நிலையத்தின் பயணிகள் வருகை பகுதியில் ரஹ்மானை வரவேற்கும் வகையில் சென்னை சங்கமத்தைச் சேர்ந்த சுமார் 100 கலைஞர்கள் மற்றும் ஏராளமான ரசிகர்களும் ரஹ்மானை உற்சாகத்துடன் வரவேற்றனர்.

விருது பெற்றது குறித்து ரஹ்மான் கூறியதாவது... ''ஸ்லம் டாக் மில்லியனர்'' இசைக்கான படமல்ல. இருந்தாலும் இதில் இசை முக்கியத்துவம் பெற இயக்குநர் டேனியல் பெய்லே முக்கிய காரணம். அவர் என்னிடம் இசையை வாங்கிய விதம், படக்குழுவின் உழைப்பு, இது எல்லாம்தான் இந்த விருதுக்குக் காரணம். இந்த விருது விழா நடைபெறுவதற்கு ஒரு நாள் முன் தூக்கம் கெட்டுவிட்டது. மறுநாள் விழாவில் எனது பெயரை அறிவித்ததும் நிம்மதிப் பெருமூச்சு விட்டேன்'' என்றார்.

## எதிர்க் கேள்வி!

**நான்** கடவுள் படம் இந்து மதத்தையே இழிவு படுத்துகிறது என்று போர்க் கொடி தூக்கியுள்ளது இந்து அமைப்பொன்று. இது உண்மையா என்று படம் சம்பந்தப்பட்டவர்களிடம் வினவியபோது ''எழுத்தாளர் ஜெயமோகனின் 'ஏழாம் உலகம்' நாவலைத் தழுவி எடுக்கப்பட்ட படம் இது. ஆரம்ப காலங்களில் நாத்திகராக இருந்தாலும், சித்தர்களின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர் பாலா. இவருக்குப் பிடித்த சித்தர் ஒருவர் எழுதிய நூலின் பெயர்தான் 'நான் கடவுள்'. அதைத்தான் தனது படத்திற்கும் தலைப்பாக வைத்திருக்கிறார்'' ''கதையையும், திரைக் கதையையும் மட்டுமே பாலா எழுதியிருக்கிறார். வசனம் ஜெயமோகனுடையது. எழுத்தாளர்களின் மத்தியில் ஜெயமோகன் இந்து அமைப்பு ஒன்றின் அனுதாபி என்ற கருத்து அழுத்தமாகவே இருக்கிறது. அப்படிப்பட்டவர் எப்படி இந்து மதத்திற்கு எதிரான வசனங்களை எழுதுவார்?'' என்று எதிர்க் கேள்வி எழுப்பினார்கள்.


சி னி வி சி ட்


## மாமாவின் விருப்பம்!

**அருண்** விஜயின் மலை மலை ஸ்டில்களைப் பார்க்கும்போது, 'எப்படியாவது ஜெயிச்சுடுய்யா' என்று உற்சாகப் படுத்தி வந்த விஜயகுமார் குடும்பத்தின் முகத்தில், அழுத்தமான நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. உடல் இளைத்து, கன்னம் குறைந்து மிடில் கிளாஸ் லுக்கிற்கு வந்துவிட்டார் அருண் விஜய். இப்படி இருந்தால்தான் ஜனங்க ரசிக்கிறாங்களாம். படத்தின் இயக்குநர் ஏ.வெங்கடேஷின் அட்வைஸ் இது. டான்ஸ், பைட், நடிப்பு, ஹைட், வெயிட் இப்படி லிஸ்ட் போட்டால், எதிலும் குறையில்லை பிறகெப்படி கோட்டை விடுகிறார் அருண்? இந்தச் சந்தேகம் அருணின் மாமனார் டாக்டர் மோகனுக்கும் வர, சொந்தச் செலவிலேயே படம் எடுக்க முடிவு செய்துவிட்டார். தை முதலாம் திகதி தமிழ் புத்தாண்டு என்பதால், மலை மலை சார்பாக ஒரு கலண்டரை வெளியிட்டார் மோகன். முதல் பக்கத்திலேயே பளிச்சென்று சிரித்துக் கொண்டிருந்தார் அருண் விஜய். அடுத்தடுத்த வருடங்களில் வழக்கமான எல்லோரது கலண்டர்களிலும் அருண் விஜயின் படத்தையும் இடம் பெற செய்ய வேண்டுமென்பது தான் மாமாவின் விருப்பம்.


த்ரிஷா - பிரகாஷ்ராஜ்
அபியும் நானும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கா த ல்!

பார்வையில் தொடங்கி;
பேச்சில் ஆரம்பித்து;
பண்போடு பழகி;
பழக்கத்தில் வளர்ந்து;
எண்ணத்தில் பதிந்து;
உதிரத்தில் கலந்து;
நரம்போடு பிணைந்து;
உணர்வுகள் சிறகடித்து;
உடலும், உள்ளமும்;
இரண்டறச் சங்கமித்து;
மரணம் தொடும் வரை;
கைகோர்த்துப் பயணிக்கும்;
வாழ்வியல் பயணத்தில்;
இளமைக் கனவுகளின்;
முதன்மை அத்தியாயம்.

மணிமகுடம் தரித்த
மன்னாதி மன்னர்கள்;
கீர்த்திமிகு புலவர்கள்
முற்றும் துறந்த முனிவர்கள்;
போன்றோர் தம் - தலைவிதியை;
தலைகீழாய் புரட்டிப்போட்டு;
வரலாற்றுப் பக்கங்களில்
நீக்கமற நிறைந்திருக்கும்
வற்றாத ஜீவநதி.

கோழையை வீரனாக்கும்;
முட்டாளைக் கவிஞனாக்கும்;
உடலின் உயிரணுக்களில்
ஊடுருவிக் கலந்து
நெஞ்சத்தில் தேங்கி நிற்கும்
தெவிட்டாத அமுதபானம்.

கடலில் அலைகள் ஓயும்வரை;
வானத்து விண்மீன்கள் உதிரும் வரை;
புவிச் சுழற்சி நிற்கும் வரை;
ஆதாம்; ஏவாள்; ஏற்றிவைத்த
அணையா அகல் விளக்கு;
அதுதான்
பேதங்கள் ஏதுமின்றி;
புகுந்து விளையாடும்;
காதல் எனும்
அதிசய ஜோதி.

**கற்பிட்டி, வஹாப்.**



## ஸ்பெஷல் பிரியம்!

சிலுவைப் பாடுகளை - நானும்
அனுபவித்திருக்கிறேன்!
உன் வருகை தாமதமான
பொழுதுகளில்....

காதலில் - நீ
பணக்காரி என்பது - சோகங்களை
இலவசமாய் தந்த போதுதான்
தெரியவந்தது...

என் கண்கள் - எழுதிய
பரீட்சையில்...
உன் இதயம்
வினாத்தாளாய் இருந்தது...



காதலும் ஒரு வகையில்
பண்டமாற்றே...?...
மனசைக் கொடுத்து
நினைவை வாங்குவதால்....

என் ரசனை உன்னிடம்
மலிந்திருந்ததாலா...?... உன்னை
வாங்குவதற்கு... என்...
உயிரைச் செலவழித்தேன்!

நரம்புகளைத் தண்டவாளமாக்கி - அதில்
நினைவுகளை ரயிலாய் ஊரவிடுகிறேன்!
எல்லாப் பெட்டிக்குள்ளும்
நீதான் இருக்கிறாய்...

நிறைய முகங்கள் - எனக்கு
ஞாபகம் இருக்கிறது - ஏனோ
உன் முகம் மட்டும்
நிறைய ஞாபகம் இருக்கிறது....

**-வி.முகிலன்,**
**நெடுந்தீவு-13.**

## துயரத்தின் நிலுவைகள்!

நாங்கள் உனைக்காண
வரும்போதெல்லாம்
அலையாய் தலை அசைத்து
வரவழைத்தாய்.
யார் உன்னை
எங்களைத் தேடி
வரவழைத்தது.

முடிவில்லாமல்
உறவுகளின் தேடல்
தொடர்கின்றன
முந்தானைக்குள் முகம் புதைத்து
பால் குடித்த மழலையின்
நகக் கீறலின் தடம்;
இன்னும் மாறவில்லை
பேரலை உன்
போர்வைக்குள் மாட்டிக் கொண்டது.

பேரலையாய் வந்து
பேரிடியென
பெற்றார், உற்றார்
உறவுகளை
அள்ளிச் சென்றாய்
அவதியும் அலைச்சலும் தொடர
அகதி முகாம் வாழ்க்கைக்கு
நாங்கள் இன்றுவரை
அடிமைகள்.

நாளை நாளையென
விடியலைத் தேடி
மிஞ்சி இருக்கும்
எச்சங்களைச்
சாந்தி பெறச் செய்ய
சமாதானம் கொண்டு வா
நீ வரும்வரை
வழி மேய்ந்து விழிகள்
காத்துக் கிடக்கின்றன.

கடலே உன் வங்கியில்
சேமிக்கப்பட்ட உயிர்களால்
எங்கள் உள்ளத்தில்
வரவு வைக்கப்பட்டுக்
கிடக்கின்றன
துயரத்தின் நிலுவைகள்.

**-ஹஸீனா ஏ. ஹஸீஸ்,**



## வனத்தில் 'ஐஸ்'




**டைரக்டர்** மணிரத்தினத்தின் 'ராவணா' படத்தின் சூட்டிங் கேரளாவின் கொச்சி வனப்பகுதியில் நடந்து வருகிறது. இதற்காக அபிஷேக் பச்சனும், ஐஸ்வர்யா ராய் உள்ளிட்டோரும் அங்கு முகாமிட்டுள்ளனர். விஷ ஜந்துக்கள் நிறைந்த அந்த வனப்பகுதியில் அட்டைப் பூச்சிகள் அதிக அளவில் உள்ளதால் உள்ளூர்வாசிகளின் உதவியுடன் படப்பிடிப்பை நடத்தி வருகிறார் மணிரத்தினம். இந்நிலையில் சமீபத்தில் ஐஸ்வர்யா ராயை அட்டைப்பூச்சி ஒன்று கடித்து விட்டதாம். இதையடுத்து முதலுதவிச் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. தற்போது பாதுகாப்புக்காக பாம்பாட்டிகளும் சூட்டிங் ஸ்பாட்டை வலம் வந்து கொண்டிருக்கிறார்களாம்.

## தடை!




**பாலிவுட்** நடிகை கங்கனா அரை நிர்வாணமாக நடித்துள்ள காட்சிகளுக்குச் சென்சார் போர்டு கத்தரி போட்டுள்ளது. இந்தியில் முகேஷ் பட் தயாரித்துள்ள ராஸ் என்ற படத்தில் கங்கனா படு செக்ஸியாக நடித்திருக்கிறார். அதிலும் அரைநிர்வாணமாக நடித்துள்ள காட்சி போஸ்டர்களாக மும்பை நகரெங்கிலும் ஒட்டப்பட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில் ராஸ் படம் தணிக்கைச் சான்றிதழுக்கு அனுப்பப்பட்டது. படத்தை பார்த்த தணிக்கை அதிகாரிகள் கங்கனாவின் நிர்வாணக் காட்சிகளில் கத்தரி போட்டு விட்டார்களாம். படத்தின் ஹைலைட் அம்சமாக இருந்த காட்சிகளுக்குக் கத்தரி போட்டதால் கடுப்பான முகேஷ் பட், தணிக்கை அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். இருப்பினும் அந்தக் காட்சிகளை நீக்கியே தீர வேண்டும் என்று சென்சார் போர்டு கிடுக்கிப்பிடி உத்தரவு போட்டு விட்டதாம். இந்தக் காட்சிகள் தவிர இன்னும் பல பலான காட்சிகள் இருப்பதால் ராஸ் படத்துக்கு ஏ சான்றிதழ் வழங்கப்பட்டிருப்பதாக தணிக்கை அதிகாரி ஒருவர் கூறினார்.

## முதலிடம்



**2008ஆம்** ஆண்டில் ஆசியாவின் செக்ஸியான பெண்கள் பட்டியலில் இடம்பெற்று சாதனை புரிந்துள்ளார் அசின். அசினின் வரவால் பாலிவுட் நடிகைகள் பலரும் சற்றுக் கலக்கத்தில் உள்ளனர். எந்த நடிகர் வாயைத் திறந்தாலும் அசின் புராணம்தான். இந்நிலையில், பிரிட்டனைச் சேர்ந்த 'ஈஸ்டன் ஐ' என்ற வார இதழ் கருத்துக் கணிப்பொன்றை மேற்கொண்டு 2008 ஆம் ஆண்டில் ஆசியாவின் செக்ஸியான பெண்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. இப்பட்டியலில் அசின் 22ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். ஏற்கனவே தமிழில் பிரபல நடிகையாகத் திகழ்ந்தவர் என்பதால் பிரிட்டனிலும் அசினிக்கு ரசிகர்கள் பெருகிவிட்டது கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது. இப்பட்டியலில் முதலிடத்தில் இருப்பவர் கத்ரீனா கை.'ப். இரண்டாம் இடத்தில் உள்ளவர் பிபாஷா பாசு.

# பஸ் நடத்துநர் சூப்பர் ஸ்டாரானது எப்படி !




## சிவாஜிராவ்/ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு:

**நம்** பாலாஜி எடுக்கும் படம். ஸ்கோப் இருக்கோ இல்லையோ அவனுக்காக நடிக்கலாம். கரைக்டா காசு கொடுத்திடுவான். அப்புறம் என்ன? ஆல்ரைட் என்றார், சிவாஜி.

விட்டுக் கொடுப்பதிலும், காழ்ப்புணர்ச்சி இன்றி பிறர் திறமையை மதித்து அவர்களை உற்சாகப்படுத்துவதிலும், சிவாஜிக்கு நிகராக இன்னொரு நடிகரை என்னுடைய அரை நூற்றாண்டுத் திரை உலக அனுபவத்தில் கண்டது இல்லை.

இவ்வாறு ஆரூர்தாஸ் கூறினார்.

இந்தப் படத்தில் சிவாஜி - ரஜினியுடன், மாதவி, அனுராதா, ஷாலினி, விஜயகுமார், பாலாஜி, விஷ்ணுவர்த்தன், வை.ஜி. மகேந்திரன், தேங்காய் சீனிவாசன் ஆகியோர் நடித்தனர்.

பாடல்களை வாலியும், புலமைப்பித்தனும் எழுத, சந்திரபோஸ் இசை அமைத்தார்.

25.4.1986 இல் வெளிவந்த விடுதலை, நூறு நாள் படமாக அமைந்தது.

முதல் 70 எம்.எம் படம் மாவீரன்

தமிழில் தயாரிக்கப்பட்ட முதல் 70 எம். எம் படம் மாவீரன்.

பத்மாலயா பேனரில் தயாரிக்கப்பட்ட இந்தப் படத்தின் தயாரிப்பிலும் ரஜினி பங்கு கொண்டார்.

இந்தியில் வெளியான மர்த் என்ற படத்தின் தழுவல்தான் மாவீரன். இந்தப் படத்தில் ரஜினியுடன் அம்பிகா, சுஜாதா, விஜயகுமாரி, ஜெய்சங்கர், நாகேஷ், விஜயகுமார், தாராசிங், ரா.சங்கரன் ஆகியோர் நடித்தனர்.

திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியவர் ராஜசேகர். ஆங்கிலப்படங்களுக்கு நிகராகத் தயாரிக்க வேண்டும் என்று விரும்பி, அதற்காக நிறைய உழைத்தார்.

சாதாரணமாக, ஒரு படத்துக்கு ஒரு வாரம்தான் ரீ ரிக்கார்டிங் நடப்பது வழக்கம். ஆனால் இந்தப் படத்திற்கு இரண்டு வாரங்கள் அப்பணி நடந்தது. இயக்குநர் ராஜசேகரை அருகில் வைத்துக்கொண்டே, அவர் சொல்கிற ஆலோசனைகளை ஏற்று, பின்னணி இசை சேர்ப்பு பணிகளைச் செய்தார், இளையராஜா.

1.11.1986 இல் இப்படம் வெளியாகியது. பிரமாண்டமான அகன்ற திரையில் ரஜினியைப் பார்த்த ரசிகர்கள், பிரமித்துப்போய், மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஒதுங்கு, ஒதுங்கு என்ற பாடல் அனைவரையும் கவர்ந்தது.

இப்படம், நகரங்களில் பெரிய வெற்றி பெறவில்லை. சென்னையில் 90 நாட்களும், திருச்சியில் 101 நாட்களும் ஓடியது.

ஆனால் பி அண்டு சி சென்டர்களில் (நடுத்தர ஊர்களில்) வசூல் பிரமாதமாக இருந்தது.

### வேலைக்காரன்

அமிதாப்பச்சன் நடித்த இந்திப்படங்கள் தமிழில் எடுக்கப்படும்போது, அதில் அமிதாப் கதாபாத்திரத்தை ரஜினி ஏற்று நடிப்பது வழக்கமாக இருந்தது.

அமிதாப் நடித்த நமக்லால் என்ற இந்திப்படம், வெற்றிகரமாக ஓடியது. அதை, கே.பாலசந்தரின் கவிதாலயா நிறுவனம், தமிழில் வேலைக்காரன் என்ற பெயரில் தயாரித்தது.

திரைக்கதை, வசனத்தை கே.பாலசந்தர் எழுத, எஸ்.பி.முத்துராமன் டைரக்ட் செய்தார். இசை: இளையராஜா.

இப்படத்தில் ரஜினிக்கு ஜோடியாக அமலா நடித்தார். மற்றும் கே.ஆர்.விஜயா, பல்லவி, ஏ.சகுந்தலா, விஜயசந்திரிகா, சரத்பாபு, நாசர், டெல்லிகணேஷ், செந்தில்,



வி.கே.ராமசாமி நடித்தனர்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு முழுக்க முழுக்க காமெடி பாத்திரத்தில் ரஜினி அசத்தியிருந்தார்.

### பனிப்புயலில் படப்பிடிப்பு

இந்தப்படத்தில் வரும் ஒரு பாடல் காட்சிக்காக டெல்லி, ஆக்ரா, காஷ்மீர் முதலிய இடங்களில் படப்பிடிப்பு நடந்தது. கடுமையான பனி சீசன். எங்கு பார்த்தாலும் பனிக்கட்டிகள் உறைந்து கிடந்தன.

அமலா, பரதநாட்டிய உடையில் வெறும் காலுடன் பனிக்கட்டிகள் மீது நடனம் ஆடினார். ஒவ்வொரு ஷாட் டுக்கும் ஆடி முடிந்ததும், ரஜினியின் பாதங்கள் மீது நின்று கொள்வார்!

7.3.1987 இல் வெளிவந்த வேலைக்காரன் 131 நாள் ஓடிய வெற்றிப்படம்.

### பிரபுவுடன் இணைந்து நடித்த குரு சிஷ்யன்

பிரபுவுடன் இணைந்து நடித்த குரு சிஷ்யன்: கௌதமி அறிமுகமான படம்

ரஜினியும், பிரபுவும் இணைந்து நடித்த குரு சிஷ்யன் வெற்றிப்படமாக அமைந்தது. இந்தப் படத்தின் மூலம்தான் நடிகை கௌதமி அறிமுகமானார்.

வேலைக்காரன் படத்தைத் தொடர்ந்து ரஜினி நடித்த படம் ஊர்க்காவலன். சத்யா மூவிஸ் தயாரிப்பு. இந்தப் படத்திற்கான வசனத்தை ஏ.எல்.நாராயணன் எழுத, மனோ பாலா டைரக்ட் செய்தார்.

பாடல்களை, புலமைப்பித்தன், முத்துலிங்கம், வாலி, வைரமுத்து, நா.காமராசன் போன்றோர் எழுதினர்.

(பயணிக்கும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னும் கண்களைப் பராமரிக்க.....




**கண்** என்பது அத்தனை பத்திரமாக, பொக்கிஷமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய உறுப்பு. நமது உள்ளத்து உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பவை கண்கள். கண்களில் உண்டாகிற பிரச்சினைகள் ஆரோக்கியத்துக்கு மட்டுமன்றி, அழகுக்கும் நல்லதல்ல.

கண்களைச் சுற்றியுள்ள சருமம் மிக மிக மென்மையானது. தவிர சீக்கிரமே வறண்டு போகக் கூடியது. கண்களைச் சுற்றிக் கொஞ்சமாக ஐ கிரீம் அல்லது கண்களுக்கான எண்ணெய் தடவி வரலாம். மோதிர விரலால் அழுத்தம் தராமல் மெதுவாக மசாஜ் தரலாம்.

கண்களில் அரிப்போ, எரிச்சலோ இருந்தால் கைகளால் கண்களைக் கசக்கக் கூடாது. அது சுருக்கங்கள் உண்டாகச் சுலபமான காரணமாகிவிடும். சுருக்கம் மிக அதிகமாக இருந்தால் தரமான ஆன்ட்டி ரிங்கிள் கிரீம் அல்லது பாதாம் ஆயில் உபயோகிக்கலாம். மோதிர விரலால் மிகமிக மென்மையாக மசாஜ் செய்து துடைக்கலாம். தேயிலையைக் கொதிக்க வைத்த தண்ணீரை வடிகட்டிக் கொள்ளவும். அதில் பஞ்சை நனைத்து, கண்களின் மேல் ஒத்தடம் கொடுப்பது போல தினமும் செய்யவும். எட்டு மணி நேரத் தூக்கம் கண்களுக்கு மிகவும் முக்கியம். பகல் நேரத்தில் உள்ளங்கைகளைக் குவித்து கண்களின் மேல் வைத்து மூடியபடி அடிக்கடி செய்யலாம். கண்களை வேகமாக மூடித் திறப்பது போலச் செய்வது, அதற்கு ஒருவித மசாஜ் மாதிரி அமையும். கண்களை இறுக மூடவும், பிறகு அகலமாகத் திறக்கவும். இதேபோல 5 முறைகள் செய்யவும். புருவங்களைக் குறுக்காமல், கண் இமைகளை மட்டும் மூடி, மூடித் திறக்க வேண்டும். நெற்றி, முகத் தசைகள் சாதாரணமாக இருக்கட்டும். இந்தப் பயிற்சி கண்களைச் சுற்றியுள்ள தசைகளுக்கான நல்ல பயிற்சியாகும். கருவளையங்களைப் போக்க இதைத் தொடர்ந்து செய்து வரலாம்.

### வீங்கிய கண்கள்

சிலருக்கு அடிக்கடி கண்கள் வீங்கியவை போன்று தோற்றமளிக்கும். இது உடல் நலத்தில் ஏதோ கோளாறு என்பதற்கான அறிகுறி. இது காலையில் தென்படும். குளிர்ந்த மற்றும் சூடான தண்ணீரால் மாறி, மாறிக் கழுவுவதால் சரியாகும். கண்களைச் சுற்றியுள்ள தசைகளை லேசாக நீவிக் கொடுக்கலாம். வீக்கம் குறைகிற வரை கண்களுக்கான மசாஜ் செய்யக் கூடாது. அடிக்கடி இப்படி வீக்கம் தென்பட்டால் மருத்துவரை அணுகலாம்.

### சிவந்து கண்ணீர் வடியும் கண்கள்

கண்களுக்கு உபயோகிக்கிற மை, பிரஷ், ஐ லைனர், மஸ்காரா போன்ற ஏதேனும் அலர்ஜியினால் இப்படிக் கண்ணீர் வடியலாம். வாயில் துணியை வைத்து ஊதி கண்களின்மேல் வைக்கிற பழக்கம் வேண்டாம். எச்சில் மூலம் தொற்றுக் கிருமிகள் கண்களுக்குள் போகும். கண்களைக் கழுவிவிட்டு அப்படியே காத்திருக்கலாம். அலர்ஜி காரணமாக உண்டாகியிருந்தால் அதற்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கண்களுக்கான மேக்கப் சாதனங்கள் தரம் வாய்ந்தவையாக இருக்க வேண்டியது மிக முக்கியம்.



கண்களுக்கான மேக்கப்பை நீக்க வேண்டியதன் அவசியம் இரவு படுப்பதற்கு முன் கண்களில் போட்ட மேக்கப் முற்றிலும் அகற்றப்பட வேண்டும். முதலில் செயற்கை இமைகள் பொருத்தியிருந்தால் அதை அகற்ற வேண்டும். ஐ மேக்கப் ரிமூவர் என்று கிடைக்கிறது. அதில் பஞ்சைத் தொட்டு கண்களை மூடியபடி வெளியிலிருந்து உள்ளே மூக்கை நோக்கித் துடைக்க வேண்டும். இரண்டு, மூன்று முறைகள் இப்படிச் செய்யவும். பிறகு கண்களைத் திறந்து, வேறொரு பஞ்சால் உள் பக்கத்தையும், கீழ் இமைகளையும் சுத்தப்படுத்த வேண்டும். கண்ணில் உள்ள மேக்கப் முழுக்க அகற்றப்படாவிட்டால், அது எரிச்சலை உண்டாக்கி, கண்கள் சிவந்து போகுமாறு செய்யும்.

சுத்தமான தண்ணீரால் அடிக்கடி கண்களைக் கழுவவும். சாதாரண மையில் ஆரம்பித்து, ஐ லைனர், ஐ ஷேடோ, மஸ்காரா என எல்லாமே தரமான தயாரிப்புகளாக இருக்க வேண்டியது முக்கியம். கம்பியூட்டர் முன் நீண்ட நேரம் வேலை பார்ப்பவர்கள் அடிக்கடி கண்களைச் சில நொடிகளாவது மூட வேண்டும். கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரக் கூடிய பச்சை, நீல நிறங்களை அடிக்கடி சிறிது நேரம் பார்க்கலாம். கண்களைச் சுற்றி எப்போதும் மோதிர விரலால்தான் அதுவும் மிக மென்மையாக மசாஜ் செய்ய வேண்டும். எட்டு மணி நேரத் தூக்கம். 10 முதல் 12 டம்ளர் தண்ணீர் குடிப்பது இந்த இரண்டும் மிக முக்கியம். கண்களுக்கு மை தீட்டும் முறை கருஞ்சிவப்பு நிறத்திலுள்ள ஐஷாடோவை இமைகளில் தடவவும். இதன் மேல் தங்க நிற ஐஷாடோவைத் தடவவும். இந்த இரண்டு நிறங்களும் நன்றாகக் கலக்கும் வரையில் விரல்களால் நன்றாகக் கலக்கவும். பிறகு ஐலைனர் தடவவும். அது காய்ந்தவுடன் மஸ்காராவைத் தடவவும்.

---

**சமூகத்தில்** பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து 'உங்கள் பிரச்சினை என்ன?' என்ற இந்தப் புதிய பகுதி மூலம் கலந்துரையாடலாம். அரசியல், பொருளாதார, சமூக, கலாசார விடயங்கள் மட்டுமல்ல, குடும்பத்தில், அலுவலகத்தில் நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் எம்மோடு பகிர்ந்து கொள்ளலாம். இயன்றவரை உங்கள் பிரச்சினை தீர ஆலோசனைகள் தரப்படும்.

## உங்கள் பிரச்சினை என்ன?

**கேள்வி:**

**அபாக்கியசாலி, பம்பலப்பிட்டி.**

நான் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கிராமத்தில், சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவள். எனக்கு இரு சகோதரிகளும் ஓர் அண்ணனும் இருக்கிறார்கள். எம் நால்வரையும் எமது பெற்றோர்கள் கஷ்டப்பட்டு நன்கு படிக்க வைத்தார்கள். எல்லோருமே நல்ல உத்தியோகத்தில் இருக்கிறோம். நான் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்தபோது சக மாணவரொருவரைக் காதலித்து, அவரையே திருமணமும் செய்துகொண்டேன். எனக்கு எனது பெற்றோர் சீதனமென்று பெரிதாக ஒன்றும் தரவில்லை. எனது கணவரின் பெற்றோர் பரம்பரைப் பணக்காரார்கள். அவர்கள் உயர்வான அரசாங்க உத்தியோகம் புரிந்தவர்கள். நான் திருமணமாகி ஏழு வருடங்களாகின்றன. இரு பிள்ளைகள் இருக்கிறார்கள். நானும் ஆசிரியையாகத் தொழில் புரிகின்றேன். எனது கணவருடன் எனக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது. அவர் மிகவும் அன்பானவர். நாங்கள் கொழும்பில் எனது மாமியாருடன், அவருடைய வீட்டிலேயே வசித்து வருகிறோம். எனது மாமி அடிக்கடி நான் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவளென நக்கலாகவும் குத்தலாகவும் கதைப்பது வழக்கம். எனது கணவர் தனது தாயாரைப் கண்டித்தும் இருக்கிறார். ஆனால் அவர் திருந்துவதாக இல்லை. எனது கணவர் பலமுறை வேறு வீட்டுக்குக் குடிபெயர்ந்து செல்வோமா என்று கேட்கிறார். இருவருமே வேலைக்குச் செல்வதால் பிள்ளைகளைக் கவனித்துக்கொள்வது கஷ்டமாக இருக்கும். இதனால் கணவரின் யோசனையை ஏற்றுக் கொள்ள எனக்கு விருப்பமில்லை. ஏன் இப்படிச் சிலபேர் நடந்துகொள்கிறார்கள்?

**பதில்:**

பழம் பெருமை பேசும் திமிர்பிடித்த பரம்பரைத் தன்மை கொண்ட பழங்காலத்து மனிதர்கள் இன்னமும் இருக்கவே செய்கிறார்கள். உலகில் இன்று ஏற்பட்டுவரும் அபரிமிதமான மாற்றங்களைப் புரிந்துகொள்ள முடியாத மனிதர்கள் இவர்கள். இதனை ஒரு வகைப் பரம்பரை இடைவெளியென்று கூடச் சொல்லலாம். இவர்களைத் திருத்தியெடுப்பது மிகவும் கஷ்டமானது. இருந்தாலும் உங்களுக்கு அன்பாகவும் ஆதரவாகவும் இருக்கக் கூடிய கணவர் கிடைத்ததை அதிர்ஷ்டமாகக் கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகள் கூடப் பாதிப்படையக் கூடிய நிலைமை இது. மனம் தளராதீர்கள். உங்கள் கணவர் மூலமாக உங்கள் மாமியாரோடு இறுதியாகப் பேசிப் பாருங்கள். இல்லையென்றால் கணவர் சொல்வதை ஏற்று நடவுங்கள். வேறு வழியில்லை.

---

## ஓர் செய்தி

### கொங்கோவில் பெண்கள் சந்திக்கும் கொடூரங்கள்



**கொன்ஸ்ரன்ஸ்** 45 வயதான பெண்மணி. கணவரின் பெயர் ஜக்குயஸ். மூன்று பிள்ளைகள். ஆபிரிக்க நாடான கொங்கோவின் சுற்றுச்சூழ நகரில் சிறிய வீடொன்றில் வசித்து வருகிறார்கள். கடந்த நவம்பர் மாத நடுப்பகுதியில் ஒரு நாள். நள்ளிரவு வேளையில் வீட்டின் ஜன்னலொன்று பலவந்தமாக அடித்துத் திறக்கப்பட்டது. டோர்ச் லைட்டுகளின் வெளிச்சங்கள் கொன்ஸ்ரன்ஸ் பிள்ளைகளோடு படுத்திருந்த அறையைத் துழாவிவந்து அவளது முகத்தில் நிலையாகக் குத்தி நின்றது.

''கதவைத் திற, இல்லையேல் உடைத்துத் திறந்து உள்ளே வந்து எல்லோரையும் சுட்டுத்தள்ளுவோம்''- கர்ஜித்த அந்த ஆண் குரலுக்குச் சொந்தக்காரன் லோரன்ற் என்குன்டா கிளர்ச்சிப் படையைச் சேர்ந்த ஒரு போராளி. அவனோடு இன்னொருவனும் காணப்பட்டான். உள்ளே நுழைந்தவர்களில் ஒருவன் ''காசை எங்கே வைத்திருக்கிறாய்?'' என்று கத்தினான். காசை எடுக்க மற்ற அறைக்குச் சென்றவளைத் துப்பாக்கிமுனையில் மிரட்டிக் காசை மட்டும் பறிக்கவில்லை. அவள் கற்பையும் பறித்தான். கணவனையும் பிள்ளைகளையும் நிலத்தில் படுக்குமாறு மிரட்டி விட்டுத் துப்பாக்கியோடு காவலுக்கு இருந்தான் மற்றவன்.

மறுநாள் 'ஹீல் ஆபிரிக்கா' ஆஸ்பத்திரிக்குச் சென்றவளைப் பரிசோதித்த டாக்டர்கள், ''ஆகக் குறைந்தது உடல் ரீதியாக ஆவது அவள் தேறிவிடுவாள்'' என்றார்கள். அந்த ஆஸ்பத்திரியின் பணிப்பாளரான ஜோசப் சீசா ''அவள் அதிர்ஷ்டசாலி'' என்கிறார். ''அநேகமாகப் பெண்களைக் கெடுத்துவிட்டுக் குத்திக் குதறிவிட்டுத்தான் போவார்கள். கொன்ஸ்ரன்ஸை கெடுத்துவிட்டு மட்டும்தானே போயிருக்கிறார்கள்'' என்றார் சீசா. பாலியல் வன்செயல்களுக்கு உள்ளாகும் பெண்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கென்றே 'ஹீல் ஆபிரிக்கா' ஆஸ்பத்திரி இருக்கிறது. ஜோசப் சீசா என்ன சொல்கிறார் தெரியுமா?

'யுத்தம் நடக்கும் காலங்களிலெல்லாம் கற்பழிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கை குறைவு. ஏனெனில் கெரில்லாக்கள் சண்டைக்குப் போய் விடுவார்கள். யுத்தம் நடக்காத காலங்களில் உள்ளூர் பெண்களை வேட்டையாடிக்கொண்டே இருப்பார்கள். பத்து வருடங்களுக்கு மேற்பட்ட இந்த யுத்தத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள், கொங்கோவில் கிழக்குப் பகுதியில் வாழும் பெண்கள்தான். கற்பழிக்கப்பட்ட பெண்கள் நாளாந்தம் நான்கு பேராவது ஆஸ்பத்திரிக்கு வருகின்றார்கள். கடந்த ஐந்து வருடங்களில் பாதிக்கப்பட்ட பதினெட்டாயிரத்துக்கு மேற்பட்ட பெண்களுக்கு இந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளித்திருக்கிறோம் என்கிறார். அயலிலுள்ள தென்கிவு மாகாணத்தில் 2006 ஆம் ஆண்டு 27,000 பெண்கள் கற்பழிக்கப்பட்டனர் என்று ஐ.நா.வின் அறிக்கையொன்று கூறுகின்றது. சுமார் 12இற்கு மேற்பட்ட கிளர்ச்சிக் குழுக்கள் கொங்கோவில் இயங்குவதாக ஐ.நா. கூறுகின்றது. யுத்தத்தில் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களும் சிறுவர், சிறுமியர்களென்றும் சும்மாவா சொன்னார்கள்.

---

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**முரசு வாசகர்களுக்கான போட்டி - 158**

ரூபா. 1000/- பரிசு

கேள்வி:- கடந்த 2006 ஆம் ஆண்டு கொங்கோவிலுள்ள தென்கிவு மாகாணத்தில் எத்தனை பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள் என்று ஐ.நா.வின் அறிக்கை கூறுகின்றது?

158

பெயர் : ..........

முகவரி : ..........

..........

..........

தே-அ- அட்டை இல : ..........

விடை : ..........

கையொப்பம் : ..........

- சரியான விடையை எழுதி அனுப்பி வைப்பவர்களில் அதிர்ஷ்டசாலி ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கவும். (பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -158**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: **27.01.2009**

**பரிசுப் போட்டி இல -156 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**கோ. சந்திரசேகரம்,**
**58/4 ஆசிரியர் சதுக்கம்,**
**உவர்மலை, திருகோணமலை.**

---


## கொக்கீஸ்

**தேவையான பொருட்கள்:-**

| | |
|---|---|
| முட்டை | -1 |
| சீனி | -1மே.க |
| மாஜரின் | -1தே.க |
| உப்பு | -அளவிற்கு |
| தேங்காய்ப்பால்/பால் | -1தம்ளர் |
| அரிசிமாவு | -1சுண்டு |
| வனிலா | -1மே.க |
| தேங்காயெண்ணெய் | -1/2போத்தல் |
| கலரிங் | -1தே.க. |

**செய்முறை:-**

இடித்து அரித்தெடுத்த அரிசி மாவை ஒரு மணி நேரம் நிழலில் உலரவைத்தெடுத்துக் கொள்க. பாத்திரத்தில் மாஜரினைப் போட்டுச் சீனியையும் சேர்த்துக் கலந்து கொண்ட பின்பு முட்டையை உடைத்து விட்டு உப்பும் சேர்த்து நன்றாக அடிக்கவும். பின்பு அடித்த கலவையில் பாலை விட்டுச் சேர்த்து, மாவைச் சிறிது சிறிதாகத் தூவி முழுவதுமாகச் சேர்த்துக் கலந்து நீர்த் தன்மையான பதத்திற்குக் கரைத்து வைத்துக் கொள்க.




பின்பு தேங்காயெண்ணெயைக் கொதிக்க வைத்து, கொக்கீஸ் அச்சைக் கொதி எண்ணெயில் சிறிது நேரம் போட்டு வைத்தெடுத்து மாக்கரைசலில் அச்சின் அரைவாசி உயரம் அமிழும் வரை அச்சை அமிழ்த்தித் தோய்த்தெடுத்துக் கொதிக்கும் எண்ணெயில் அச்சை அமிழ்த்திக் கொக்கீஸ் எண்ணெயில் கழன்றதும் அச்சை எடுத்துக் கொள்க. இவ்வண்ணமே ஒவ்வொரு கொக்கீஸாக எண்ணெயில் இட்டுப் பொரிந்ததும் எடுத்துப் பரிமாறலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி




தாயின் மடியில் 07 - 04 - 1965 | தாயக மண்ணில் 23 - 01 - 1998

**ரங்கசாமி குமார்**
தோழர் ஈசன் (கிளிநொச்சி)



தாயின் மடியில் 14 - 03 - 1968 | தாயக மண்ணில் 23 - 01 - 1998

**மாரிமுத்து சுதாகரன்**
தோழர் சுதா (மட்டக்களப்பு)



தாயின் மடியில் 16 - 04 - 1965 | தாயக மண்ணில் 23 - 01 - 1998

**திருஞானசம்பந்தர் செந்தில்குமார்**
தோழர் கெனடி (ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம்)




தாயின் மடியில் 08 - 06 - 1972 | தாயக மண்ணில் 23 - 01 - 1998

**செல்லையா தர்மராசா**
தோழர் மேனன் (மட்டக்களப்பு)



தாயின் மடியில் 04 - 01 - 1972 | தாயக மண்ணில் 23 - 01 - 1998

**மாரிமுத்து ராசலிங்கம்**
தோழர் தெய்வேந்திரம் (கண்டி)



தாயின் மடியில் 17 - 06 - 1969 | தாயக மண்ணில் 23 - 01 - 1998

**மாணிக்கம் ஜெகதீஸ்வரன்**
தோழர் காளிதாஸ் (மன்னார்)




தாயின் மடியில் 12 - 04 - 1972 | தாயக மண்ணில் 23 - 01 - 1998

**சிதம்பரம் சத்தியசீலன்**
தோழர் நாதன் (மன்னார்)



தாயின் மடியில் 29 - 10 - 1969 | தாயக மண்ணில் 23 - 01 - 1998

**சண்முகராசா தவராசா**
தோழர் சுதாராஜ் (யாழ்ப்பாணம்)



தாயின் மடியில் 12 - 06 - 1972 | தாயக மண்ணில் 23 - 01 - 1998


**ஆனந்தராசா ஜெபநேசன்**
தோழர் தவநேசன் (மன்னார்)

தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் பெற்றுத் தராத புலிகளின் வஞ்சகத் தனத்தை எதிர்த்து நியாயம் கேட்டீர்கள் என்பதற்காக.. புலிகளினால் சுடப்பட்டீர்கள். மாற்றுக் கருத்துக் கொண்டவர்களைக் குறிவைக்கும் புலிகளின் தமிழ் இனத் துரோகம் தொடர்கிறது. உங்கள் ஒவ்வொருவரின் மரணத்தின் போதும் இன்னுமின்னும் மாற்றுக் குரல்கள் ஜனனித்துக் கொண்டிருக்கிறது. தோழர்களே! உங்கள் இழப்புக்களையும் சுமந்துகொண்டு எங்கள் மக்கள் பணி தொடரும்...

-தோழர்கள், உறவுகள்.

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)**

# இதய அஞ்சலி



மலர்வு 20-06-1984 | மலர்வு 05-04-1970

உதிர்வு 15.01.2004 | உதிர்வு 21-01-1990

**செல்வராசா திலீப்** (தோழர் திலீப்)


**டலின்சில்வா தர்மதாஸ்** (தோழர் மணிவண்ணன்)

தோள் கொடுத்த தோழர்களே! - உங்கள்
வேல்தடுக்கும் மார்படைத்து வெற்றுடலாய்ப்போன
துயர் நிறைவெய்தும், ஓயவில்லை எம் மனதில்.
துணையாக நீங்கள் நின்று தோள் கொடுத்த வரலாறு
கதையாகிக் கனவாகிப் போனதே! - உங்களை நினைத்து
அழுதாலும் தொழுதாலும் ஆறுமோ உமைப் பிரிந்த
ஆறாத்துயர் எமக்கு எழுதாத விதியோ?

**- உம்மைப் பிரிந்து வாடும்**
**தோழர்கள், உறவுகள்.**

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)**

# இதய அஞ்சலி



தாயின் மடியில் 05.09.1960 | தாயின் மடியில் 14.04.1969

மண்ணின் மடியில் 21.01.1990 | மண்ணின் மடியில் 25.01.1995

**இராசரத்தினம் உதயகுமார்** (தோழர் மில்ஸ்)

**மயில்வாகனம் செல்வராஜா** (தோழர் இளையராஜா)

ஜனநாயகம் உயிர் வாழ உங்கள் உயிர் கொடுத்தீர்கள்.
தமிழ் மக்களையும் தாயக மண்ணையும் நேசித்தவர்களே,
உங்கள் பணி பொறுக்காத கொலை வெறிப் புலிகள்
நிராயுதபாணியான உங்களைப் பலி கொண்டு நெஞ்சு
நிமிர்த்திக் கொண்டனரோ,
கோழைகள் உங்களைக் கொன்றாலும் தோழர்களே
உங்கள் கொள்கைகள் எங்களால் முன்னெடுத்துச்
செல்லப்படும்.

பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள்,
தோழர்கள், உற்றார், நண்பர்கள்.

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்



பகுதி -66

## நான்காம் பாகம்

**புத்த** சந்நியாசிகளும் சரி, சமண சந்நியாசிகளும் சரி, இந்து சந்நியாசிகளில் ஒரு பகுதியினரும் சரி தலையை மொட்டையாக வைப்பதற்குக் காரணம் இதுதான்.

அடுத்தது, புதன் கிழமையும், சனிக்கிழமையும் மறந்து விடாமல் எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவார்கள்.

செவ்வாயும்,வெள்ளியும் பெண்களுக்கு. உடம்பிலே உஷ்ணக் கோளாறு வராமல் இருக்க இதுவே ஒரே வழி.

எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் நாளில் மோர் சாதமோ, தயிர் சாதமோ சாப்பிட விடமாட்டார்கள். குளிர்ச்சியாக எண்ணெய் தேய்த்துக்கொள்ளும்போது மேலும் குளிர்ச்சி தரக்கூடிய பொருள்களைச் சாப்பிடக் கூடாது என்பார்கள்.

தாய் தந்தையின் சுவை உணர்ச்சிதான் குழந்தையைப் பற்றிக் கொள்கிறது. அதனால்தான் குழந்தை கருவில் இருக்கும்போது தாய் பத்தியமாக இருக்கிறாள். குழந்தை பிறந்த பிறகும் பெற்றோர் உணவு முறையைக் கட்டுப்பாடாகக் கடைப்பிடித்தால், குழந்தைக்கும் அதே பழக்கம் வரும்.

அதோடு உணவு நேரத்தைப் பற்றிய உணர்ச்சியையும் குழந்தைக்கு உண்டாக்க வேண்டும்.

காலையில் ஆறு மணியடித்தால்,'ஆறு மணி, ஆறு மணி-எழுந்திரு' என்று எழும்ப வேண்டும். காலைக் கடன்களை முடிக்க வைக்க வேண்டும்.

எட்டு மணியடித்ததும், 'எட்டு மணி,எட்டு மணி-பலகாரம்' என்று அவசரப்படுத்த வேண்டும்.

பள்ளிக்குச் சென்று திரும்பியதும்,'ஒரு மணி, ஒரு மணி' என்று சாப்பாட்டுக்கு அவசரப்படுத்த வேண்டும்.

இரவிலே 'எட்டு மணி, எட்டு மணி' என்று, துரித்தப்படுத்த வேண்டும்.

பல வருஷங்கள், இந்த மணியைப் பற்றிய உணர்ச்சி ஒரு குழந்தைக்குப் பிடித்துவிட்டால், உடம்புக்கே இது பழக்கமாகிவிடும்.

அகால உணவை அந்த உடம்பு ஏற்க மறுக்கும். காலம், ஆரோக்கியமான உணவு, அதன் அளவு- இந்த மூன்றையும் குழந்தையின் உடற் பழக்கமாக ஆக்கிவிட வேண்டும்.

படிப்பு என்பது, இயற்கையாகவே சில குழந்தைகளுக்கு வரும்; சில குழந்தைகளுக்கு வராது. வராத குழந்தையை உதைத்துப் படிக்க வைப்பது பயன் தராது.

'படிக்காவிடில் வாழ்க்கை இருண்டு போகும்' என்று அடிக்கடி சொல்வதன் மூலம், கல்வியைப் பற்றி ஒரு உணர்ச்சியை உண்டாக்கலாம்.

ஒழுங்கான பழக்க வழக்கங்களை மட்டும் ஒரு குழந்தைக்கு உண்டாக்கிவிட்டால், பிறகு அது எந்தத் துறையில் ஈடுபடுவதையும் அனுமதித்துவிடலாம். ஏதாவது ஒரு துறையில் அது முன்னேறிவிடும்.

பின்னாளில் அதற்கு வரக்கூடிய உடல் துன்பம் மனத்துன்பம் இரண்டில் இருந்தும், பெற்றோர் அந்தக் குழந்தை ஓரளவு காப்பாற்றிவிட முடியும்.

'வறுமை நிறைந்த வீட்டில் பெரும்பாலும் அகால நேரத்தில்தானே உணவு கிடைக்கும்' என்ற கேள்வி எழும்.

அகாலத்தில் கிடைக்கும் உணவைக் கூடச் சூடாக்கிக் காலத்தில் சாப்பிடப் பழக்க வேண்டும்.

'கல்வி கற்க முடியாதே' என்பீர்கள். வறுமையைவிடச் சிறந்த பள்ளிக்கூடம் வேறெதுவும் கிடையாது. நான் சொல்வது நம்மால் ஆகக்கூடிய காரியங்களை மட்டுமே.

பன்னிரண்டு வயதுக்கு மேல் அறிவுக்கண் லேசாகத் திறக்கிறது. ஆடல் பாடல்களில் உற்சாகம் பிறக்கிறது. உயரமான இடங்களைக் கண்டால் ஏறிக்குதிக்கச் சொல்கிறது. நீரூற்றுக்களில் கரணமடிக்க அவாவுகிறது. புதிய புதிய ஆடைகளிலே கவனம் போகிறது. உடலின் வலிமை நிரந்தரமானது என்றே நிச்சயமாகத் தோன்றுகிறது.

சீக்கிரமே அது விலகியும் விடுகிறது.

எந்த இளைஞனும் நிதானிக்க வேண்டிய இடம் இதுதான்; ஆனால், நிதானிக்கவே முடியாத நேரமும் இதுதான்.

பக்குவமற்ற இரத்த அணுக்களின் பரிணாம வளர்ச்சி, உற்சாகத்தையே மூலதனமாக்கி விடுகிறது.

உணர்ச்சியே பிரதானமாக அங்கம் வகிக்கிறது. இது கர்ப்பூரப் பருவம். ஆசைத் தீ உடனுக்குடன் பற்றிக் கொள்ளும் பருவம்.

நடுத்தரக் குடும்பத்து இளைஞர்கள் மிகவும் பயத்தோடும், பொறுப்போடும் கல்வி கற்றாலும், இரத்த வேகம் அவர்களையும் விடுவதில்லை.

இந்த நாளில்,ஒரு இளைஞன் எந்தெந்த உணவுகளை விரும்புகிறானோ, அவற்றிலுள்ள தீமைகளை யார் சொன்னாலும் கேட்க மாட்டான்.

கடலைமாவில் செய்த பலகாரங்களையும், வாய்வுப் பதார்த்தங்களையும் விரும்பிச் சாப்பிடுவான். அவற்றின் எதிரொலி நாற்பது வயதுக்கு மேல்தான் அவன் காதுகளுக்குக் கேட்கும்!

இருபது வயதிலிருந்து முப்பது வயதுவரை, நான் சேலத்தில் இருந்தபோது ஒவ்வொரு இரவிலும் குறைந்தது அரைக்கிலோ உருளைக்கிழங்கு சாப்பிடுவேன். அதற்கேற்ற உழைப்பு இல்லாததால், இப்போது எனக்கிருக்கும் ஒரே துயரம்-வாய்வுத் துயரம்.

இளம்பருவத்தில் நடப்பது ஓடி ஆடுவதுமாக இருக்கின்ற இளைஞன், உட்கார்ந்து வேலை செய்யத் தொடங்கியதும் உடல் துன்பம் ஆரம்பமாகும். இளம் வயதிலிருந்து, மரண காலம் வரையிலே ஒருவன் நடந்து கொண்டே திரிந்தால், பெரும்பாலான நோய்கள் போய்விடும்.

தினசரி கால் வலிக்க மலை ஏற வேண்டும் என்றுதான், இந்துக்கள் கோயில்களை மலை மீது கட்டினார்கள்.

உடம்பு வியர்க்க மலை மீது ஏறி நூற்றியொரு பிரகாரம் சுற்றி, அதன் பிறகு குளிர்ந்திருக்கும் தண்ணீர்க் குளத்தில் விழுந்து குளித்தால் அதுபோன்ற சுகமும், ஆரோக்கியமும் வேறெதுவும் இல்லை.

பாகற்காய், நாவற்பழம் போன்றவற்றை அந்த வயதிலிருந்தே விரும்பி அதிகமாகச் சாப்பிட்டுக் கொண்டு வந்தால், தகப்பனுக்குச் சர்க்கரை வியாதி இருந்தாலும் மகனுக்கு வராது.

இந்து சந்நியாசிகளின் உணவு முறை எப்போதும் இப்படித்தான் இருக்கும். திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமி அவர்களுக்கு இப்போது எழுபது வயதாகிறது. கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளாக அவர் சமயப்பிரசாரம் செய்து வருகிறார். ஒரு நாள் கூட உடல் நலிவு என்று ஓய்வெடுத்துக் கொண்டதில்லை.

இந்த ஆரோக்கியத்திற்குத் தெய்வ பக்தியும், உணவு முறையுமே காரணமாகும்.

ஆன்மாவுக்குச் சக்தி தரத் தெய்வ பக்தியும், உடலுக்கு வலிவு தர உணவும், ஒழுங்கும்.

அகால உணவை இளைஞன் அறவே ஒழிக்க வேண்டும்.

சந்தியா காலம், உச்சி வேளை, அர்த்த சாமம் என்ற கோயில் பூஜைக்குக்கூட குறிப்பிட்ட நேரங்கள் ஒதுக்கப்படுகின்றன.

உப்பு, உறைப்பு, புளிப்பு, இனிப்பு இவை நான்கும் குறைவாகவும், கசப்பும், துவர்ப்பும் அதிகமாகவும் சேர்த்துக்கொண்டே வந்தால், பிற்காலத்தில் உடம்பிலிருந்து அடிக்கடி இரத்தம் எடுக்க வேண்டி வராது.

காப்பி, தேநீர் அருந்துகின்ற இளைஞர்கள் காப்பியை உடனே நிறுத்திவிட்டுத் தேநீரை எவ்வளவு வேண்டுமானாலும் அருந்தலாம். அதில் ஐந்து வகை விற்றமின் சத்துக்கள் இருப்பதாக ரஷ்ய விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.


உலக விஞ்ஞானிகளில், ரஷ்ய விஞ்ஞானிகள் மட்டும்தான்

(தொடர்ந்துவரும்)

# இலங்கையின் பிரதியுபகாரம்




**மூன்று** போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கு பற்றுவதற்காக இலங்கை அணி பாகிஸ்தான் சென்றுள்ளது. மும்பையில் நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதல்களினால் இந்தியாவிற்கும் - பாகிஸ்தானுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து, இந்தியக் கிரிக்கெட் அணியினர் பாகிஸ்தான் செல்ல இந்திய அணி மறுப்புத் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக பாகிஸ்தான் அணியின் வேண்டுகோளை ஏற்று இலங்கை அணியினர் பாகிஸ்தான் சென்றுள்ளனர். 1996 ஆம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டிகளின்போது இலங்கையின் பாதுகாப்பு நிலைவரத்தைக் காரணம் காட்டிய அவுஸ்திரேலிய மற்றும் மேற்கிந்தியத்



தீவுகள் அணியினர் இலங்கை வர மறுப்புத் தெரிவித்த வேளையில் இந்தியா, பாகிஸ்தான் அணிகளின் வீரர்கள் இணைந்த அணியாக இலங்கைக்கு விஜயம் செய்து இலங்கைக் கிரிக்கெட் வீரர்களுக்கு ஆதரவு அளித்தனர். அந்த அணியில் முகமட் அசாருதீன், வசிம் அக்ரம் உட்பட இரு நாடுகளின் முக்கிய வீரர்கள் பங்குபெற்றிருந்தனர். இத் தொடரிலேயே இலங்கை அணியினர் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி உலகப் கோப்பையைப் பெற்றுக்கொண்டனர்.

அதைப்போன்ற ஒரு சூழல் இப்போது இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு அணிகளுக்கும் ஏற்பட்டுள்ளதால் இரண்டு அணிகளுடனும் போட்டிகளில் பங்குபற்றி அந்தந்த நாடுகளின் கிரிக்கெட் வீரர்களுக்கும் ரசிகர்களுக்கும் ஆதரவளிக்க இலங்கை அணியினர் முன்வந்துள்ளனர். இதன் அடிப்படையில் பாகிஸ்தான் அணியினர் மூன்று ஒருநாள் போட்டிகளிலும் பங்கு பற்றிய பின்னர் நாடு திரும்பி எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்திய அணியினருடனான போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

## தடுமாறும் துடுப்பாட்டம்

சிம்பாவேக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரிலும் அதனைத் தொடர்ந்து பங்களாதேஷில் நடைபெற்ற முக்கோணத் தொடரிலும் வெற்றி பெற்றுள்ள நிலையில் இலங்கை அணி பாகிஸ்தான் சென்றுள்ளது. எனினும் தரப்படுத்தலில் இறுதி இரு இடங்களிலும் இருக்கின்ற இவ்வணிகளுக்கு எதிராக இலங்கை அணியினர் பெற்றுக்கொண்ட வெற்றியானது இலங்கை ரசிகர்கள், இலங்கை வீரர்கள் ஆகியோர் திருப்தியடையும் வகையில் அமையவில்லை. குறித்த இரண்டு தொடர்களிலுமே துடுப்பாட்ட வீரர்களின் பங்களிப்பு மோசமானதாகவே அமைந்திருக்கின்றது. எனினும் பந்து வீச்சாளர்கள் தமது கடமைகளை ஓரளவு செய்தமையினாலும் அவ்வப்போது துடுப்பாட்டத்தில் பிரகாசித்தமையினாலுமே தோல்வியைத் தவிர்க்கக் கூடியதாகவிருந்தது. முக்கோண தொடரின் இறுதிப் போட்டியில் முரளியின் துடுப்பில் பட்ட பந்துகள் எல்லைக் கோட்டைத் தாண்டியதாலேயே வெற்றி சாத்தியமானது. அண்மைக்காலமாக மிகவும் மோசமான ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்ததுடன், இரண்டு தடவைகள் பெறுபேறுகளை வெளியிட்டு வருகின்ற மஹேல 13 போட்டிகளில் நான்கு தடவைகள் மட்டுமே 56 ஓட்டங்களைத் தாண்டியுள்ளார். குறித்த போட்டிகளில் இவரின் சராசரி அண்ணளவாக 21 ஓட்டங்களாகவே காணப்படுகின்றது. இதுபோன்றே ஏனைய துடுப்பாட்ட வீரர்களின் நிலைமையும் காணப்படுகின்றது.

இதனை இலங்கை அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தனவும் ஏற்றுக்கொள்கின்றார். கடந்த தொடர்களில் துடுப்பாட்டம் சிறப்பாக அமையாததினால் அனைத்துத் துடுப்பாட்ட வீரர்களும் தமது கவனத்தை ஒருமுகப்படுத்திக் கடுமையான பயிற்சிகளில் ஈடுபட்டுவருவதாகவும் கடந்த காலத் தவறுகளைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவருவதாகவும் கூறுகின்ற மஹேல, எதிர்வரும் நாட்களில் பலம் வாய்ந்த அணிகளுடன் மோதுகின்றபோது அனைவரும் தமது முழுத் திறமையை வெளிப்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையையும் தெரிவித்துள்ளார்.

## சிந்திக்கிறது பாகிஸ்தான்

அதேவேளை இப்போட்டித் தொடருக்கு முன்னதாகக் கடந்த வருடம் நடைபெற்ற ஆசிய கோப்பைப் போட்டிகளின்போது ஒரு தடவையும், கனடாவில் நடைபெற்ற இருபது - 20 போட்டிகளின்போது ஒரு தடவையும் என இரண்டு போட்டிகளில் அஜந்த மெண்டிஸின் 14 ஓவர்களை மட்டும் சந்தித்த பாகிஸ்தான் வீரர்கள் மொத்தமாக 7 விக்கெட்டுக்களை அவரிடம் பறிகொடுத்திருந்தனர். அந்த மோசமான அனுபவமானது பாகிஸ்தான் வீரர்களை சற்றுச் சிந்திக்கவே செய்துள்ளது. எனவே அஜந்த மெண்டிஸைச் சமாளிப்பதற்கான தந்திரோபாயங்களை ஆராய்ந்து கடுமையான பயிற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் இதுபற்றிக் கூறியுள்ள மஹேல - எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளும் திறமை அஜந்தவிடம் காணப்படுவதாகவும், இதனை எதிர்கொள்வதற்கான ஆற்றலை அவர் விருத்தி செய்து கொள்ளும் பட்சத்தில் அடுத்த 16 வருடங்களுக்கு இலங்கை அணியின் முதுகெலும்பாக அவர் திகழ்வார் என்றும் கூறியுள்ளார்.

# ரஷ்ய வீராங்கனைக்கு வெற்றி; சாதிப்பாரா பெடரர்?



**சிட்னி** சர்வதேச டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பட்டத்தை நேற்று ரஷ்ய வீராங்கனை எலெனா டிமென்டீவா வென்றார். இதனால் அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட் ஸ்லாம் சாம்பியன் பட்டத்தை டிமென்டீவா வெல்வார் என்ற எதிர்பார்ப்புக் கூடியுள்ளது. அடுத்தடுத்து ஆக்லாந்து, சிட்னி டென்னிஸ் தொடர்களில் டிமென்டீவா சாம்பியன் பட்டம் வென்றுள்ளார். அத்தோடு தொடர்ந்து 10 போட்டிகளில் டிமென்டீவா வென்றுள்ளார். உலகத் தரவரிசையில் 4ஆம் இடத்தில் இவர் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் கிராண்ட் ஸ்லாம் தொடருக்கு முன்பாகக் கூயாங்கில் நடைபெற்றது. பயிற்சி ஆட்டத்தில் வார்வின்காவை வீழ்த்தி ரோஜர் பெடரர் சாம்பியன் பட்டம் வென்றார். இறுதிப் போட்டியில் முதல் 7 சர்வ்களில் வார்வின்காவை 3 முறை முறியடித்த பெடரர், அதன் பிறகு தொய்வடையாமல் 6- 1, 6- 3 என்று வெற்றி பெற்றார்.

14 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள அமெரிக்க வீரர் பீட் சாம்ப்ராஸின் சாதனையை இந்தக் கிராண்ட் ஸ்லாமை வென்றால் பெடரர் சமன் செய்வார். எனினும் அதற்கு வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதாகவே விமர்சனங்கள் கூறுகின்றன. இம்முறை பிரிட்டன் வீரர் டேவிட் முர்ரே சாம்பியன் பட்டம் வெல்வார் என்று ர.்.பேல் நடால், ஜோகோவிச் இவர்களுக்குச் சாதகமாக இல்லாமல் எப்படி முர்ரேயிற்குச் சாதகமாகப் பேச முடியும் என்று முர்ரேவிற்கு ஒரு சவாலை எழுப்பியுள்ளார் பெடரர். ஆனால் பெடரர் சாதிப்பார் என்ற எதிர்பார்ப்புடன் அவரது ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாவது

# சட்டமும் சந்தர்ப்பவாதமும்

**பெற்றோல்** விலையை லீற்றர் ஒன்றுக்கு 122 ரூபாவிலிருந்து 100 ரூபாவாகக் குறைக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் இன்றுவரை விலை குறைக்கப்படவில்லை. அமைச்சரவையும் செயலாற்று அதிகாரமிக்க ஜனாதிபதியும் இந்த விலைக் குறைப்புக்கு மாறான கருத்துகளையே கொண்டுள்ளனர். லங்கா இந்தியன் பெற்றோலியக் கம்பனி மட்டும் நீதிமன்றத் தீர்ப்புக்கு ஏற்ப விலையைக் குறைத்தது. ஆனால் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விலைக் குறைப்புச் செய்யாமையால் லங்கா இந்தியன் பெற்றோலியக் கம்பனி மீண்டும் மறுநாளே விலையை உயர்த்திக் கொண்டது.

பெற்றோல் விலை விவகாரம் தொடர்பான மற்றொரு மனு கடந்த 13ஆம் திகதி உயர்நீதிமன்ற நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான நீதியரசர்கள் குழு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. "நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் தீர்ப்பினை மாற்றும் அதிகாரம் செயலாற்று அதிகாரத் தரப்புக்கு இல்லை" என்று நீதியரசர் சரத் என் சில்வா அப்போது குறிப்பிட்டார். பெற்றோல் விலையைக் குறைப்பது தொடர்பான நீதிமன்ற உத்தரவை அமுல்படுத்துவதில் இருக்கக்கூடிய கஷ்டங்களை எதிர்வரும் 27ஆம் திகதி மன்றுக்கு அறிவிக்குமாறு திறைசேரிச் செயலாளருக்கு நீதியரசர் அறிவுறுத்தியுள்ளார். செயலாற்று அதிகாரத் தரப்புக்கும் நீதித்துறைக்குமிடையிலான ஒரு பிரச்சினையாகவும் இது பார்க்கப்படுகின்றது.

தாய்லாந்து, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் நீதித்துறைக்கும் ஜனாதிபதிக்குமிடையில் பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன. தாய்லாந்துப் பிரதமரையே பதவி நீக்கும்படி தாய்லாந்தின் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பெர்வேஸ் முஷாரப் பிரதம நீதியரசர் உட்படப் பல நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்தார். இந்தியாவில் ஜனாதிபதியைவிடப் பாராளுமன்றத்துக்கே அதிகாரம் அதிகம். நீதிபதிகள் இலஞ்சம் வாங்குகிறார்களெனத் தனக்குப் புகார்கள் கிடைத்துள்ளன என்று இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதி ஜி.கே.பாலகிருஸ்ணன் சொல்கிறார்

அரசியல் யாப்பின் ஷரத்து 30(1), ஜனாதிபதியே நாட்டினதும் செயலாற்று அமைப்பினதும், அரசாங்கத்தினதும் தலைவர் என்றும் ஆயுதப் படைகளின் பிரதம தளகர்த்தர் என்றும் வரைவிலக்கணம் செய்துள்ளது.

ஷரத்து 76: சட்டமியற்றும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கே உண்டு என்கிறது. அரசியல் யாப்பின் எந்தவொரு விதியையும் நீக்கவோ வேறு ஏதாவது விதிகளைச் சேர்க்கின்ற அதிகாரமும் பாராளுமன்றத்துக்கே உண்டு. அரசியல் யாப்புக்கு வேறு விதிகளையும் சேர்த்துக்கொள்ளும் அதிகாரமும் உண்டு.

ஷரத்து 105(1) அரசியல் யாப்பு விதிகளுக்கேற்ப நீதி நிர்வாகத்தைப் பாதுகாத்தல், நியாயப்படுத்துதல், மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரம் ஆகியன நீதித்துறைக்கே உண்டு என்கிறது.

செயலாற்று அதிகாரமிகு ஜனாதிபதியும் பாராளுமன்றமும் மக்களாலேயே தெரிவு செய்யப்படுகின்றன. நாட்டின் இறையாண்மை மக்களிடமும் பாராளுமன்றத்திடமுமே உள்ளன.

1978ஆம் ஆண்டின் அரசியல் யாப்புக்கு இணங்க செயலாற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி, சட்டவாக்கத் துறையான பாராளுமன்றம், நீதித்துறை மூன்றும் நாட்டின் சட்டதிட்டங்களுக்குப் புறம்பாகச் செயற்பட முடியாது.

பிரதம நீதியரசரை ஜனாதிபதியே நியமிக்கிறார். நீதிமன்றுக்குத் தண்டிக்கும் அதிகாரம் உண்டு. ஜனாதிபதிக்குத் தண்டிக்கும் அதிகாரம் கிடையாது. மன்னிக்கும் அதிகாரம் உண்டு. உயர்நீதிமன்றின் உரிமைகளையும் தீர்மானங்களையும் கேள்விக்குள்ளாக்குபவர்களைத் தண்டிக்கும் அதிகாரம் மன்றுக்கு உள்ளது.

இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வாக்களிக்கலாம். ஆனால் 21 வயதுக்கு உட்பட்டவர்கள் மதுபானம், சிகரட் வாங்க, விற்க மதுபானச் சாலைகள், கிளப்புகளில் அருந்துவதற்குக் கலால் சட்டத்தின் 31ஆவது பிரிவின் உபபிரிவு (1) தடை செய்கிறது. சட்டத்தை அமுலாக்கும் பொறுப்பு பொலிஸ், கலால் இலாகா, சுங்கத் திணைக்களம் போன்றவற்றுக்கு உண்டு. அவற்றுக்கென வெவ்வேறு அதிகாரங்களும் உள்ளன.

இரு வருடங்களுக்கு முன்னர் கொழும்பு ராஜகிரியவிலுள்ள சொகுசுத் தொடர்மாடிக் குடியிருப்பில் 19 வயதான ய்வான் ஜோன்சன் என்ற சுவீடிஷ் யுவதி அவளது 20 வயதான இலங்கைக் காதலனால் நள்ளிரவு வேளையில் கொல்லப்பட்டாள். கொழும்பிலுள்ள இரவு விடுதியொன்றில் இந்த யுவதியும் அவளது 16 வயதுச் சகோதரியும் 20 வயதுக் காதலனும் மதுபானம் அருந்திவிட்டுத் திரும்பிய நிலையிலேயே கொலை நிகழ்ந்தது. நீதிமன்ற விசாரணையில் இத்தகவல்கள் வெளியாகின.

மேல் மாகாணத்திலுள்ள தனியார் போக்குவரத்து பஸ்களில் நடத்துநர்களாகப் பணிபுரிபவர்கள் சீருடை அணிய வேண்டுமென்ற நீதிமன்றத் தீர்ப்பு உண்டு. ஆனால் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. பிரபல கசினோ தொழிலதிபர் ஒருவரை (திலங்க சுமதிபாலாவை) போயா தினத்தன்று பிணையில் விடுவித்தமைக்காக நீதிபதியொருவரை நீதிச்சேவை ஆணைக்குழு பதவி நீக்கம் செய்தது. துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் வேறு சில நீதிபதிகளும் பதவி நீக்கப்பட்டனர்.

அரசியல் சாசனத்தின் 13ஆவது திருத்தச் சட்டம் மாகாண சபைகளுக்கெனவும் ஒத்தியங்கு பட்டியல் மூலமும் அதிகாரங்களை வழங்கியுள்ளது. ஆனால் நடைமுறையில் இல்லை.



வடக்குக் கிழக்குக்குத் தமிழ்மொழி மூலம் சுற்றுநிருபங்கள் அனுப்பப்பட வேண்டும் எனச் சட்டம் உள்ளது. ஆனால் நடைமுறையில் இல்லை. 16 வயதிற்குட்பட்டவர்கள் கட்டாயம் பாடசாலைக்குச் செல்ல வேண்டும் என்பதும், இவர்களைத் தொழில்களில் ஈடுபடுத்தக்கூடாது என்றும் சட்டம் உள்ளது. ஆனால் நகரங்களிலுள்ள கடைகளில் எடுபிடிகளாகச் சிறுவர்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

'சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம்' என்ற சொல்லின் மூலம் நாட்டிலுள்ள அனைவரும் ஒரே சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்று நீதிமன்றம் உறுதிப்படுத்துகிறது. அனைத்து மக்களின் உரிமைகளும் பேணப்பட வேண்டும் என்பதும் நாட்டின் இறைமை காப்பாற்றப்பட வேண்டும் என்பதும், சட்டத்தினால் வரையறை செய்யப்படுகிறது. இருந்தபோதிலும், மனித உரிமை மீறல் நடைபெறுகிறது என மனித உரிமை அமைப்புகள் எமது நாட்டின் மீது குற்றம் சாட்டுகின்றன. நாட்டின் இறைமை பறிபோகிறது என்று தேசப்பற்றாளர்கள் எச்சரித்துக்கொண்டிருக்கிறார்கள். எங்கே தவறு நேர்கிறது? உண்மையில் சட்டம் தன் கடமையினைச் செய்யாமல் தடுமாறுகிறதா? சந்தர்ப்பவாதமாகச் செயற்படுகிறதா? என்ற கேள்விகளே எழுகின்றன.

# மேய்ச்சல் வெளி

**வரலாறு** என்பது, வென்றவர்களின் வரலாறே. அதாவது, வெற்றி பெற்று இருக்கும் வரையே வரலாறு என்பது அவர்களைப் பற்றியதாக இருக்கிறது. தோல்வி காணும்போது, சமூகம் அவர்களது குற்றங்களைப் பட்டியலிட ஆரம்பிக்கிறது. ஹிட்லரிலிருந்து சதாம் வரைக்கும், அதிகாரத்தால் மக்களை அடக்கி வைத்திருந்த எவராக இருந்தாலும், அவர்கள் தோல்வியுற்ற பிறகே, சமூகத்தை அவர்கள் என்ன செய்தார்கள் என்ற மதிப்பீடு வெளியாகிறது. வெற்றியோடிருக்கும்வரை அவர்களைப் புத்திஜீவிகள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், அறிவாளர்கள் என்று பலருமே போற்றிக் கொண்டாடிக் கொண்டிருந்ததைத்தான் அறிய முடிகிறது.

நம் நாட்டிலும் தோல்வியடைந்தவர்களைப் பற்றி இனிக் கருத்துதிர்க்கப் போகும் சமூகப் பெரியவர்களைப் பற்றி நினைக்கும்போதே மிகுந்த ஆயாசமாக இருக்கிறது. இதுவரைகாலமும் ஒளிமயமாக அவர்கள் வர்ணித்திருந்த பலவற்றை இனிமேல் இருண்டகாலமாக அவர்கள் கண்டுபிடித்து எழுதக்கூடும். அதுபற்றி நாம் வியப்படைந்து, வியாகுலமடைந்துகொண்டிருப்பதுகூட வியர்த்தம்தான்.

ஆனால், வரலாற்றில் பிற்போக்குச் சர்வாதிகார சக்திகள் என்று பின்னர் நிறுவப்படும் குழுவோ அல்லது தனிமனிதர்களோ மக்கள் அபிமானத்தையும் ஆதரவையும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கேனும் பெற்றிருந்ததற்கு என்ன காரணம்? யோசித்தால் பல்வேறு காரணங்களைப் பட்டியலிட முடியும்.

முற்போக்குவாதிகள் - அல்லது தங்களைப் பிறர் அப்படிப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுவோர் - அரசிடம் அதிகாரம் குவிந்திருப்பதால் அதனை எதிர்த்துப் போராடுகிறவர்களையே முற்போக்கானவர்கள் என்று கண்ணை மூடிக்கொண்டு பார்க்கும் வாய்பாட்டை வைத்திருக்கின்றனர். போராட்டக்காரர்களிடம் வளரும் குரூரங்களையும், ஆபத்தான பாசிஸத்தையும் கண்டுகொள்வது தங்களை முற்போக்காளர்களாகக் காட்டிக்கொள்ள உதவாது என்பது அவர்கள் கணக்கு.

தவிரவும், அரச எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுப்பது போல அவ்வளவு இலகுவானதல்ல பயங்கரவாதத்தைக் கேள்விமுறையின்றிக் கையிலெடுத்துவிடக் கூடிய போராளிகள் என்போரை எதிர்ப்பது! எனவே தங்களது 'முற்போக்கு முக' வேட்கைக்காக அரசைக் கண்டித்தபடியே, போராட்டக்குழுவிடம் வளரும் பாசிஸத்தை மௌனத்தால் அங்கீகரித்து வருகிறார்கள்.

இதற்கப்பால், வேறுபலர் தங்கள் தங்கள் சுயலாபக் கனவுகளைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்தலாம் என்று நம்பும் பாசிஸக் குழுவினரை, அவர்களது கொடூரங்களைத் தெரிந்தும் அவற்றை மறைத்து, அவர்கள் வளர்வதை ஆதரிக்கிறார்கள்.

இன்னும் சிலர் இன, மொழி ரீதியான உணர்ச்சியாவேசத்தில் அவர்களிடமுள்ள பாசிஸப் பயங்கரத்தைக் காண மறுத்து, விரும்பும் வெற்றிக்காக கொள்ளி எடுத்துக் கொடுக்கிறார்கள் - அது பின்னர் தங்களையும் சுற்றத்தையும் எரிக்கப்போகிறது என்பதறியாமல்!

பாசிஸத்தின் குறிப்பிட்ட கால வெற்றிக்கும், அதற்குக் கிடைக்கும் ஆதரவுக்கும் காரணங்கள் இன்னுமின்னும் பல உண்டு. எல்லோருமே புலியை எதிர்ப்பதைவிட புலியை தாஜா பண்ணி அதன் மீது சவாரி செய்வது பாதுகாப்பானதும், விரும்பும் இடம் போய்ச்சேர ஒருவேளை உதவக்கூடும் என்ற நப்பாசையிலுமே அந்தச் சவாரியை ஏற்கின்றனர்.

தோற்று வீழ்ந்துவிட்டால், அந்தக் குழுவை அண்டித் துதிபாடியிருந்தவர்களும் கூடப் பிறகு குற்றப்பட்டியல்களை வாசிக்க வரிந்துகட்டி நிற்கக்கூடும். எல்லாக் குற்றங்களையும் அவர்கள் தலையிலே பொறித்துவிட்டு, 'நாம் அப்போதே சொன்னோமே' என்று தப்பித்துக்கொள்ளவே முனைவர்.

ஆனால், நடைபெற்ற குரூரங்கள், எதேச்சாதிகாரக் கொலைகள் யாவற்றுக்கும் பொறுப்புச் சொல்லவேண்டியது முழுச்சமூகமும்தான்! கொலைகள் பயமூட்டல்களை ஆதரித்தது மட்டுமல்ல கண்டிக்காதிருந்தது, வெறுக்காதிருந்தது கூட அனைவரினதும் குற்றமே! ஹிட்லரின் வதைமுகாம் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக்கொள்ளாத அவனது அமைச்சர்களிலொருவர், ஹிட்லரின் வீழ்ச்சிக்குப் பிறகு நீதிமன்ற விசாரணையில் தன் குற்றத்தை ஒப்புக்கொண்ட விதத்தை இங்கே சுட்டிக்காட்டலாம். "வதைமுகாம்கள் இருப்பது தெரியாமல் இருந்ததே நான் செய்த குற்றம்தான்" என்றார் அவர்.

குற்றம் யாருடையது என்ற விசாரணையை நடத்தும் எஸ். வைத்தீஸ்வரன் கவிதை ஒன்றையும் இங்கே ஞாபகப்படுத்தலாம். குத்திக்காட்டுவதற்கு அல்ல, இச்சந்தர்ப்பத்திலேனும் சிந்திப்பதற்கு இந்தக் கவிதையும் உதவக்கூடும் என்பதனால்!

### ஒவ்வாத நிஜங்கள்

அவன் சிரித்துக் கொண்டே
நடந்து வந்தான்
மனைவிக்கு இரண்டு முழம்
மல்லிகைப் பூ வாங்க
வந்தவன் போல்
முகம் ஆசையை
அமைதியாய் தெரிவித்தது.

நாற்சந்தி வந்து நின்றவன்
நான்கு புறமும் பார்த்து
மேலும் சிரித்தான்
ஊர் பூரா உறவாக
எண்ணுபவனாகத் தெரிந்தான்.

யாரையோ வாழ்த்துவது போல்
வலது கையைத் திடீரென்று
மேலே உயர்த்தினான்.

அடுத்த கணம் நாலைந்து பிணங்கள்
கத்தாமல் சிதறி விழ
சுற்று முற்றும் அலறலுடன்
"ஓ" வென்று ஊர் ஓடிற்று.

அவனுக்கு சிரிப்பு அடங்கவில்லை
கை முனையில் ஆயுதப் புகையூதி
கள்ளமற்ற களிப்புடன்
காட்சியை ரசித்து நின்றான்.

காவல்காரர்கள் அடித்து
இழுத்துப் போனபோது
அவனுக்கு அது விளங்காத
அர்த்தமற்ற கொடூரமாகத் தோன்றியது.

விசாரித்த போது
"இதெல்லாம்... இப்படித்தான்..."
என்று சிரித்தான்.

சற்றும் விரோதமற்ற மனத்துடன்
விபரீதமாகச் செயல்படும் ஒருவன்
எப்படிப் பொதுவாக ஒரு மனிதனாக
இருக்கமுடியும்,
என்று குழம்பிப் போனது
நீதித் துறை.

அவன் மூளையைத் தோண்டிப்
பார்க்க வேண்டுமென்று
அவசரமாக ஆணையிட்டது.

தோண்டிப் பார்த்ததில்
அவனுக்கு மூளை என்று ஒன்று
இருப்பதாகத் தெரியவில்லை
பதிலாகச் சமூகத்தின்
அடி மன வக்கிரங்களத்தனையும்
சாக்கடையாக மிதந்து கிடந்தது
தெரிந்தது.

நீதிமன்றம் மேலும் குழம்பியது
குற்றத்துக்கு யார் காரணம்
எது காரணம் என்று தீர்வுக்கு
வர முடியாமல்.

**— சுல்தான் —**

குற்றத்தை அவனா செய்தான்? அல்லது
குற்றம் அவனால் செய்யப்பட்டதா?
அப்படியானால்
சமூகமா குற்றத்திற்குச்
சரியான காரணம்!

அப்படியானால் அவனையும் சேர்த்து
நாமத்தனை பேருமல்லவா
மொத்தக் குற்றவாளிகள் -
அப்படியானால்
நீதிமன்றமும் சேர்ந்து
தூக்கில் தொங்க வேண்டுமா,
ஒரு தனி மனிதனின் துர்ச்செயலுக்காக?
நீதியரசர் விழித்துக் கொண்டார் -
கையிலிருந்த தடியை இரண்டு முறை
தட்டிக் கவனத்தை நெறிப்படுத்தினார்.

"இத்தகைய மனசாட்சி பூர்வமான
ஆராய்ச்சிகளையெல்லாம்
மன்றம் அனுமதிக்காது.
குறிப்பாக, குற்றவாளியென்ற
சட்டபூர்வமான அடையாளங்கள்
சரியாக இருக்கிறதா, அவனிடம்
உற்றுப்பார்த்து 'ஆம்' என்று சொல்லுங்கள்
'ஆமாம்' என்றால்
அவனை அழித்து விடுங்கள்" என்றார்.
"ஆம், ஆம்" என்றார்கள் சத்தமுடன்
சட்டபூர்வமாக எல்லோரும்.
சமூகமும் "ஆம், ஆம்" என்று
தலையாட்டியது விடுதலையாகி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதுக்கு நிம்மதி

# சுய முன்னேற்றத்தை உறுதிப்படுத்துங்கள்!

தன்னைத்தானே உருவாக்கிக் கொண்ட முதல் அமெரிக்க மேதை பெஞ்சமின் பிராங்க்ளின்.

அமெரிக்காவில் முதலில் வந்து குடியேறியவர்கள் சுதந்திர தாகத்தினால் உந்தப்பட்டு வந்தார்கள். ஆனாலும் இங்கிலாந்துக்கே உரிய சமூக அமைப்பை- வகுப்பு வித்தியாசங்களை- அமெரிக்காவிலும் பின்பற்றத்தான் செய்தார்கள். அந்த முறையை மாற்றியவர் பெஞ்சமின் பிராங்க்ளின். மேலும் பல மாறுதல்களுக்கும் அவர் காரணமாக இருந்தார்.

அவர் எதையேனும் கற்க விரும்பினால் கற்றுக்கொடுக்க ஆள் கிடையாது. தனக்குத் தானே சொல்லிக் கொடுத்துக்கொண்டால்தான் உண்டு.

அவர் எதையும் சாதிக்க விரும்பினால் அவர் தனி மனிதனாகச் சாதித்தால்தான் உண்டு. தன்னால் முடியும் என்று அவர் நம்பினார். ஆகவே செய்து காட்டினார்.

1706 ஆம் ஆண்டு பாஸ்டன் நகரில் பிறந்த பெஞ்சமின் பிராங்க்ளின் மெழுகுவர்த்தி செய்யும் ஓர் ஏழைக் குடும்பஸ்தரின் பதினைந்தாவது குழந்தை. (மொத்தம் பதினேழு). பள்ளிக்கூடம் சென்று படித்ததெல்லாம் ஒரே ஒரு வருட காலம்தான்! தன் வாழ்நாளில் அவர் சுயமாகக் கற்றுக்கொண்டவை: தத்துவம், நான்கு மொழிகள், அறிவியல், நிதி, நிர்வாகம், அரசியல், ராஜதந்திரம்! உலகத்துச் சிறந்த இலக்கியங்களை எல்லாம் படித்ததுடன் பல நூல்களை அவர் இயற்றவும் செய்தார்.

தான் சம்பாதித்தால்தான் உண்டு என்ற நிலையில் பெஞ்சமின் பிராங்க்ளின் பல மணி நேரம் உழைக்க வேண்டியிருந்தது. பன்னிரண்டாவது வயதிலேயே வேலையில் அமரவேண்டிய கட்டாயம் இருந்தது. பதினேழாவது வயதில் பாஸ்டனை விட்டு நீங்கி நியூயோர்க் சென்றார். அங்கேயும் வேலை கிடைக்காததால் பிலடெல்பியா நகர் அடைந்தார். பெரும்பாலும் கால்நடையாகவே.

கையில் சில்லரைக் காசுதான் இருக்கும். ஓர் அச்சகத்தில் வேலை கிடைத்தது. பிரசுரகர்த்தர் ஆனார். ஒரு செய்தித்தாள் துவங்கினார். பிறகு ஒரு சஞ்சிகை ஆரம்பித்தார். நாற்பத்திரண்டாவது வயதில் வேண்டிய அளவு பணம் சம்பாதித்த பின் வியாபாரத்திலிருந்து ஓய்வு பெற்று முழுக்க முழுக்கப் பிற துறைகளில் ஈடுபடலானார்.

நம்மால் முடியும் என்ற தீவிர நம்பிக்கை இருக்குமேயானால் சுயமாகப் படித்து, சொந்தக் கால்களில் நின்று என்னவெல்லாம் சாதிக்க முடியும் என்பதற்கு அவர் வாழ்க்கை ஓர் உதாரணம்.

வெற்றிகரமாகத் தொழில் நடத்தியது அவரது பல சாதனைகளில் ஒன்று. நாற்பத்திரண்டாவது வயதில் வியாபாரத்தினின்று விலகிய பிறகு நாற்பதாண்டு காலம் அரசாங்க ஊழியராகப் பணியாற்றினார். அவற்றுள் இருபத்தைந்து ஆண்டு காலம் இங்கிலாந்துக்கும், பிரெஞ்சு நாட்டுக்கும் இடையில் பல முக்கியமான உடன்படிக்கைகளுக்கு ஏற்பாடு செய்தார்.

அமெரிக்காவுக்கும் - பிரிட்டனுக்கும் போர் மூண்டபோது பெஞ்சமின் பிராங்க்ளின் பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றார். அமெரிக்காவின் சுதந்திரப் போராட்டத்துக்கு, பிரெஞ்சு நாட்டின் ஆதரவைக் கோரினார். அதன் விளைவாக அமெரிக்காவுக்குக் கைகொடுக்க முன்வந்த பிரான்ஸ், பிரிட்டன் மீது பகிரங்கமாகவே போர் தொடுத்தது.


பக்குவமான பேச்சுத் திறன் மூலம் பிறரைத் தம்பக்கம் எப்படி இழுத்துக் கொள்வது என்பதைத் தெரிந்து கொள்வது நமக்கு இலாபகரமாக இருக்கும். சிறுவனாக இருந்தபொழுது மூர்க்கத்தனமாக வாதாடுவது அவரது பழக்கம். இந்தக் கட்டுரையில் அடிக்கடி அழுத்தமாகக் கூறியிருப்பதை- வாதப் பிரதிவாதமும் கட்டாயப்படுத்தலும் எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதை- அவர் உணர்ந்துகொண்டார். வாதாட வாதாட, கட்டாயப்படுத்தப் படுத்தத் தனது கருத்துக்களை ஏற்றுக் கொள்பவர்களுடைய எண்ணிக்கை குறைவதைக் கண்டார்!

இந்தக் கட்டுரையில் நூலில் விளக்கப்பட்டிருக்கும் அதே முறைப்படி கேள்விகளைக் கேட்கலானார். தன் காரியம் நிறைவேறும் வகையில் அடுத்தடுத்துச் சாதகமான பதில்களை வரவழைக்கக்கூடிய கேள்விகள் கேட்கலானார். வாதாடுவதை நிறுத்திவிட்டு, எப்போது கேள்விகள் கேட்கத் தொடங்கினாரோ அப்போதே அவர் உலகின் மிகச் சிறந்த ராஜதந்திரிகளில் ஒருவர் ஆகிவிட்டார்.

தன் கையே தனக்குதவி என்பதை எவன் கடைப்பிடிக்கிறானோ, அவனுக்குக் கடவுள் உதவி செய்கிறார் என்று அவர் தீவிரமாக நம்பினார். இளைஞனாக இருந்தபோது ஒரு நோட்டுப் புத்தகம் தயாரித்தார். தன்னுடைய வளர்ச்சிக்குத் தேவையான நற்குணங்களைப் பட்டியல் போட்டு,அந்த நோட்டின் ஒவ்வொரு பக்கத்தின் தலைப்பிலும் ஒரு குறிப்பிட்ட குணத்தைப் பொறித்து, ஒரு வாரத்துக்கு ஒரு குணம் வீதம் கவனம் செலுத்தினார். அந்தக் குணம் சம்பந்தப்பட்டவைகளில் எத்தனை முறை தவறு செய்தோம் என்பதை முதலில் குறித்துக்கொண்டார். அந்தக் குறிப்பிட்ட குணத்தை மேலும் மேலும் வளர்த்துக்கொள்ள என்னென்ன செய்ய வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டார். வாழ்க்கையில் தான் அடைந்த மகத்தான வெற்றிக்கெல்லாம் இந்தக் குணநல மேம்பாட்டுத் திட்டமே காரணம் என்று அவர் சொல்லியிருக்கிறார். வாரத்துக்கு ஒரு குணம் திட்டமுறையை நான் உங்களுக்குச் சிபாரிசு செய்கிறேன்.

பதினாலாவது வயதிலேயே பெரிய எழுத்தாளர் ஆக முடியும் என்று பெஞ்சமின் பிராங்க்ளின் தீவிரமாக நம்பினார். தான் ஒரு பெரிய எழுத்தாளர் ஆவதற்கான முயற்சியில் அவர் உடனடியாக இறங்கியதில் ஆச்சரியமில்லை. தனது எழுத்து நடைக்கு வளம் சேர்க்கும் பொருட்டுப் புகழ் பெற்ற எழுத்தாளர்களின் சிறந்த கட்டுரைகளை நகலெடுத்து மனப்பாடம் செய்யலானார். தான் பயன்படுத்தும் சொற்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதில் அவர் சளைக்காமல் ஈடுபட்டார். ஆக, உரிய காலத்தில் ஆங்கிலம் பேசும் உலகத்தில் அவர் மிகவும் புகழ்வாய்ந்த எழுத்தாளர் ஆனார். இருபத்தாறாவது வயதில் அவர் தயாரித்து வெளியிட்ட 'புவர் ரிச்சர்ட்ஸ் ஆல்மனக்' என்ற புத்தகம் ஒவ்வோர் அமெரிக்கர் வீட்டிலும் இடம் பெறும் அளவுக்கு வெற்றி பெறலாயிற்று.

அவரது சுயசரிதம் இன்றைக்கும் உலகத்தின் பல்வேறு நாடுகளில் விரும்பிப் படிக்கப்படுகின்றது. பெஞ்சமின் பிராங்க்ளின் ஒரு குறிப்பிடத்தக்க விஞ்ஞானியாகவும் புதிய புதிய பொருள்களைக் கண்டுபிடிப்பவராகவும் திகழ்ந்தார். மின்சார பாட்டாரி, கண்டக்டர் இவை பற்றி முதலில் சிந்தித்தவர் அவரே. பை:. போக்கல் மூக்குக் கண்ணாடிக்கு வழிகாட்டியவர் அவரே. தீயணைக்கும் படை, தீ விபத்து இன்ஷ்யூரன்ஸ் கம்பனி ஆகியவற்றின் தந்தை அவர்.



இவை போன்ற இன்னும் எத்தனையோ சாதனைகளை அவர் செய்வதற்கு அஸ்திவாரமாக இருந்த தன்னால் முடியும் என்ற அவரது தீவிரமான நம்பிக்கைதான். இந்தக் கட்டுரையில் தரப்பட்டுள்ள வெற்றிக்கான யோசனைகளைப் பின்பற்றி, தமது கருத்துக்களை பிறர் ஏற்றுக்கொள்ளச் செய்யும் கலையில் தேர்ச்சி பெற்றதால் எண்ணற்ற சாதனைகளை அவரால் செய்ய முடிந்தது.

வாதாடுவதாலும் கட்டாயப் படுத்துவதாலும் எதிர்ப்பே உண்டாகிறது என்பதை அவர் ஆரம்பத்திலேயே உணர்ந்திருந்ததால், தகுந்த முறையில் கேள்விகள் கேட்டு, சாதகமான பதில்களை வரவழைப்பதன் மூலம், மற்றவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று நாம் விரும்புகின்றோமோ அதை அவர்கள் செய்யும்படி தூண்ட முடியும் என்பதை அவர் உணர்ந்தார். இந்த முறையைப் பயன்படுத்தி வல்லரசுகளின் ஆதரவை அவர் தேடித் தந்திராவிட்டால் சுதந்திரத்திற்கும் சமூக நீதிக்கும் உத்தரவாதமளிக்கும் அமெரிக்க அரசியல் சட்டமும் -ஏன், அமெரிக்க நாடே-உருவாகியிருக்குமா என்பது சந்தேகம்.

கேட்பதன் மூலம் காரியங்களைச் சாதித்துக்கொள்ளலாம் என்பதைப் பெஞ்சமின் பிராங்க்ளின் நிரூபித்தார். தீவிர நம்பிக்கையின் மூலம் எல்லாத் தடைகளையும் வென்றுவிட இயலும் என்பதை அவர் நிரூபித்தார்.

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.303 க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

S.V.M.பர்வீஸ், பேப்பர் ஹவுஸ், கொழும்பு ரோட், புத்தளம்.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. பாத்திமா சில்மா, 145, குன்னேப்பான மடிகே, மடவள பஸார், 20260.
02. B.முருகானந்த, 8/3,2/1, ராமநாதன் அவனியூ, தெஹிவளை.
03. யோசப் டொரிங்டன், ஸ்பெக், 59/1, லேடி மெனிக் டிறைவ், மட்டக்களப்பு.
04. திருமதி விஜயகுமாரி அமரசிங்கம், 89, பயனியார் வீதி, மட்டக்களப்பு.
05. செல்வன் ஜெ.அபிஜித்தன், 93.2/5, பீட்டர்சன் வீதி, கொழும்பு -06.
06. S. பத்மநாதன், இல.17/A, தவசிகுளம், வவுனியா.
07. திருமதி ஜெயசோதி முகுந்தாதேவி, 93.2/5, பீட்டர்சன் வீதி, கொழும்பு -06.
08. திருமதி ம.கனகசேகரம், 22, பிரதிபிம்பராம வீதி, களுபோவில. தெஹிவளை.
09. கம்ஷனா, அராலி மத்தி, வட்டுக்கோட்டை.
10. யே.அனுஷன், கரம்பொன் மேற்கு, ஊர்காவற்துறை.

### குறுக்கெழத்துப் போட்டி 305

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | | 11 | |
| 13 | 14 | | 16 | 17 | 18 |
| | 20 | 21 | | | 24 |
| 25 | | 27 | 28 | | 30 |
| 31 | 32 | | 34 | 35 | |

**இடமிருந்து வலம்**

01. இலங்கையில் தற்போது கடுமையான யுத்தம் நடைபெறும் மாவட்டம்.
07. கொடை என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
14. உடன்பாட்டுச் சொல்லொன்று. (திரும்பியுள்ளது).
16. இரத்தம் என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)
20. சேனை என்றும் பொருள்படும்.
27. வனம் என்றும் கூறலாம்.
31. கேட்கும் ஆற்றலைத் தருவது.
34. காற்று என்றும் பொருள்படும்.

**மேலிருந்து கீழ்**

01. சுளகு என்று பொருள்படும்.
02. ஒரு மலரைக் குறிக்கும். (குழம்பியுள்ளது)
03. இதன் சக்தியிலிருந்து மின்சாரம் தயாரிக்க முடியும். (தலைகீழ்)
05. தீமை என்றும் கூறலாம்.
18. விஷால் நடித்த திரைப்படமொன்று.
21. பறவையொன்று. (தலைகீழ்)
25. இஸ்ரேலினால் அண்மையில் மோசமாகப் பாதிக்கப்பட்ட இடம். (தலைகீழ்)
28. குற்றம் என்றும் பொருள்படும். (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப் போட்டி 303- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க 1 | ள 2 | டா 3 | | தோ 5 | டி 6 |
| பு 7 | ம 8 | க 9 | | | ஓ 12 |
| ம 13 | த 14 | ர 15 | | நி 17 | |
| ஒ 19 | | ம 21 | ச 22 | ல 23 | |
| | சி 26 | | கு 28 | ம 29 | ள 30 |
| | கை 32 | லே 33 | ய் 34 | | |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 27.01.2009 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-305
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரச் சிறுகதை

# தேடும் கண் பார்வை...

திருமதி நவதர்சினி வயாவிளான்.

**நரக** வேதனை என்பதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.ஆனால் அதனை நரகத்துக்குச் சென்று யாரும் அனுபவித்ததில்லை. இப்பிறப்பிலேயே நரக வேதனையைத் தன்னோடு போர்த்திக்கொண்டு வாழ்க்கையோடு போராடுகிறாள் மதுமிதா. மௌனங்கள் மட்டும் இவளுக்குத் துணையாய் இருப்பதால்தான் இவள் உயிர் இன்னமும் இந்தப் பூமியில் இருக்கிறது. மரணத்தின் அந்தத்தில் சென்ற இவளை வாழ்க்கையின் ஆரம்பத்தில் மறுபடியும் கூட்டிவந்து புதுவாழ்வைத் தொடங்க வைத்தவள் நிஷா. பிறப்பிலேயே துன்பத்தோடு பிறந்த மதுவை இன்று ஓரளவு நிம்மதியோடு வாழ வைத்துக் கொண்டிருக்கிறாள் நிஷா. ஏன் மது வாழ்வதே நிஷாவின் வாழ்க்கைக்காக மட்டுமே என்று கூடச் சொல்லாம். இன்று நிஷாவை உயிரோடேயே இழக்கப் போகிறாள் என்பதை நினைக்கும்போது மதுவால் மனத்தைரியத்தை எட்டிக் கூடப்பிடிக்க முடியவில்லை."எனக்கே இப்படியென்றால் நிஷாவால் இது முடியுமா?" மறுபடி மறுபடி தன்னைத்தானே வினவி வினவியே மனம் இறுகிப்போய்விட்டது. "அக்கா வீட்டிலை சொல்லிப்போட்டே வந்தனி?" எதிரில் மோட்டார் சைக்கிள் உரிமையாளனின் உறுக்கலில் தன் நினைவுக்கு வந்தவள்,எட்டி எட்டிக் காலை வைத்தாள். அவள் கால்கள் முன்னோக்கிச் செல்ல மறுக்கிறது. மனம் பின்னோக்கிச் செல்லத்துடிக்கிறது. இறுக்கி இழுத்துப் பிடிக்க முயன்றும் மனக்கயிறு அறுத்துக்கொண்டு ஓடுகிறது. அதற்கு மேல் அவளால் முடியவில்லை.

இருபத்தைந்து வருடங்களுக்குமுன் சந்நிதி கோயிலின் தீர்த்தப் பௌர்ணமியில் பிறந்தவள் மது. பிறந்தது பௌர்ணமி என்பதால்தான் அவள் வாழ்க்கை அமாவாசையோடுதான் என்பது இறைவன் முடிவுபோலும். மது பூமியில் புரண்ட எட்டாவது நாள் அன்னையில்லாப் பிள்ளையானாள். அதைவிடக் கொடியது தாய்ப்பாலில் துளிகூட வாயில்பட்டதில்லை. தாயின் நோய் அவ்வளவு கொடியதாய் இருந்ததால் தாய்ப்பால் இவளுக்கு நஞ்சானது. மூன்று மாதக் குழந்தையான மதுவோடு அவள் தந்தை அநாதை இல்லம் நோக்கிச் செல்ல முற்பட்டவேளை, மனிதமே இல்லாப் பூமியில் மனிதராய் வந்து இவளுக்கு ஒரு அன்பான அன்னையும் தந்தையும் கிடைத்தனர். அவர்களின் அன்போடு வளர்ந்தவள் இன்று பதினெட்டு வயதை நெருங்குகிறவேளை, தன் பிறப்புக்கள், வளர்ப்புக்கள் பற்றி அயலவர் மூலம் அறிய முடிந்தது. தான் தாயில்லாப் பிள்ளை என்பதை நினைத்துத் துடித்தவள்,தனக்கும் ஓர் தாயாய் மாறிய பெண்ணை நினைத்துப் பெருமைப்பட்டாள். தன் தந்தை இருக்கும் போதே வேறொருவர் தந்தையாய் மாறித் தாலாட்டியதை நினைத்தவள் தன் மனதார அவர்களுக்கு நன்றி கூறினாள். சிட்டாய்ப் பறந்து திரிந்தவள் இடத்தில் சிறு காதலும் அரும்பியது.

"ஸ்ரீபன் இது எங்களுக்குச் சரிவராது. கடைசிவரைக்கும் எங்கடை கலியாணம் நடக்காது. என்ன மது கொஞ்சமும் தைரியமில்லாமல் கதைக்கிறாய். நம்பிக்கையிலைதானடி வாழ்க்கையே இருக்குது. நாங்க மட்டும் நம்பிக்கையை வைச்சுக் கொண்டிருந்தாச் சரியே? ஊருலகம் எங்கடை காதலை ஏற்க வேண்டாமே. நான் சுத்த சைவம். நீங்க கிறிஸ்தவம். இது ஒத்துவருமே?" "மது உனக்கொண்டு சொல்லிப்போட்டன், இனிமேல் எனக்கு முன்னாலை வருமோ? வராதோ? எண்டு கேள்விக் குறியோடை கதையாதை. எதுவும் முடியுமென்று நினைத்தால் நாம் முடித்துக் காட்டலாம்." "சரிங்கோ ஐயா, என்னை மன்னிச்சிடுங்கோ ஐயா. நான் நம்பிக்கையோட இருக்கிறேன்." என்று ஏளனமாய்க் கூறிய மதுவைச் செல்லமாய் எட்டி அடிக்க, சின்னச் சிணுங்கலுடன் விலகியவள் குரலைத் திடமாக்கி"ஒண்டு மட்டும் சொல்லிட்டன் ஸ்ரீபன் நீங்கள் என்னைக் கலியாணம் கட்டேலையெண்டால் நான்...." அவள் முடிக்கவில்லை. எதிரே பார்த்து முழித்தாள். உடம்பெல்லாம் வியர்த்து வடிந்தது. "என்னடி முழிக்கிறாய்?" செல்லமாய் வினவியவன் முன்னால் ஒரு நிழலாடத் திரும்பினான். அவனால் பேச முடியவில்லை. ஸ்ரீபன் கையைப் பற்றிய அவன் தந்தை எதுவுமே பேசாது. "கொற கொறவென" இழுத்துச் சென்றார். ஸ்ரீபனின் தந்தை இரக்கமுள்ளவர்தான். ஆனால் தன் மதத்தின் கொள்கைகளை இழக்கமாட்டாதவர். அழுதழுது வீடு சென்ற மதுவை, அன்பாய் வினவிய அவள் வளர்ப்புத் தந்தை,"சரி மது நீ கவலைப்படாதை, கொஞ்சம் நிதானமாய் முடிவெடுக்க வேண்டிய விசயம். அவசரப்படாதை எல்லாத்தையும் நான் பார்க்கிறேன்.ஆறுதலாய்த் தோள் சாய்த்தாள். இரண்டு கிழமைகளில் ஸ்ரீபன் வெளிநாடு சென்ற செய்தி இடியாய் வந்தது. அவள் கண்கள் கண்ணீர் மழை பெய்தது.

"அன்புள்ள அம்மா,அப்பா என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ. நான் வீட்டைவிட்டுப் போறன். எங்கை போறனெண்டு எனக்கே தெரியாது. கால்களின் பின்னால் செல்கிறேன். ஆனா ஒன்று நான் சாகமாட்டன். உயிரோடைதான் இருப்பன். எங்கிருந்தாலும் உங்களுக்காய் இறைவனை வேண்டுகிறேன். இவ்வளவு காலமும் என்னை உங்கள் பிள்ளையாய் வளர்த்ததற்கு நன்றி. காதல் தந்த ஏமாற்றம் என்னை உங்களிடமிருந்து பிரிக்கிறது. மறுபடியும் இறைவன் நினைத்தால் சந்திப்போம். இப்படிக்கு, உங்கள் அன்பு மகள் மது.

கடிதத்தை மடித்து மேசையின் மேல் வைத்தவள் கால் போன போக்கிலே சென்றாள். அவள் சென்றது ஒரு கடற்கரைக் கிராமம். கடற்கரையில் கண்ணீரோடு நின்றவளுக்குக் கைகொடுத்ததும் ஒரு கிறிஸ்தவக் குடும்பம்தான். அன்பான கணவன்- மனைவிக்கு அழகாய் ஒரு குழந்தை. சின்னச் சின்ன வீட்டு வேலைகள் செய்து கொடுத்து அந்த வீட்டில் வேலைக்காரியாய் அல்லாமல் தானும் ஒரு அங்கத்துவம் பெற்றாள். மது அங்கு வந்து இரண்டு வருடங்களாகிவிட்டது. அன்று நத்தார். அந்தக் கிராமமே சந்தோஷ ஊஞ்சலாடியது. கிறிஸ்தவர்களிடம் நிறைய அன்பும் நற்பண்புகளும் இருக்கிறது. இதனை மது ஸ்ரீபனிடமும் கண்டுகொண்டிருந்தாள். அவளது காதல் காலங்களில் ஸ்ரீபனும் மதுவும் யாருக்கும் தெரியாமல் பல இடங்களுக்கும் சந்தோஷமாய்ச் சுற்றி வந்தது அவளின் நினைவோரம் வந்துபோனது. "என்ன மது கனக்க யோசிக்கிறாய். கவலைப்படாதை நிச்சயம் உனக்கு நல்ல வாழ்வு இருக்கு. கடைசிவரைக்கும் ஸ்ரீபன் உன்னைக் கைவிடமாட்டார். உன்னைத்தேடி ஓர் நாள் வந்துதான் ஆகுவார்." அந்த வீட்டுக்காரர்களின் ஆதரவு வார்த்தைகள்."ஓமக்கா நானும் அந்த நம்பிக்கையிலைதான் இவ்வளவு நாளும் உயிரோடை இருக்கிறன்" மது பதிலளித்தாள். இப்பொழுதெல்லாம் ஸ்ரீபனின் "நம்பிக்கைகள்"தான் இவளுக்கும் துணையாகிறது.

இரவிரவாய் யோசித்து யோசித்து அதிகாலை ஒரு தெளிந்த மனதோடு எழும்பினாள் மது. "அக்கா நான் இண்டைக்கு என்னுடைய ஊருக்குப் போகலாம் என்று நினைக்கிறேன். நீங்கள் என்ன சொல்லுகிறீயள்" இது சந்தோஷமான விசயம்தானே. உடனே வெளிக்கிடு. நானும் அவரும் உன்னைக் கூட்டிவந்து விட்டிட்டு வாறம். ஆனந்தமும் அவசரமும் போட்டியிட அவள் வெளிக்கிட்டாள்.

"ஐயோ கடல் வருகுது கடல் வருகுது" திடீரென அந்தக் கிராமமே "அல்லோல கல்லோலப்" பட்டது. மது குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடினாள். சிறிது தூரம் சென்று திரும்பிப் பார்த்தாள். அவள் இருந்த வீடும் அந்த அன்புள்ளங்கள் இரண்டும் கடலோடு அள்ளுண்டு சென்றுவிட்டன. "ஓ" வென்று கதற முற்பட்டவள் கரங்களில் இருந்த குழந்தையும் காணாமல் போய் அவளும் தொலைந்துவிட்டாள். அங்கு அடித்த சுனாமியோடு முடிய வேண்டிய அவள் உயிர் மீண்டும் யாரோ ஒருவரின் உதவியோடு தப்பியது. "இன்னும் ஏன் உயிர் வாழ வேண்டும்? அன்புகள் எல்லாம் அள்ளுண்டு செல்லும் போது நான் மட்டும் ஏன் இந்தப் பூமியில்...."

"அம்மா... அம்மா....."

சின்னக்குழந்தையின் கதறல். திரும்பினாள் மது. எதிரில் நிஷா. அந்தக் கிறிஸ்தவக் குடும்பத்தின் நன்றிக்கடன் அவர்கள் குழந்தை நிஷா மட்டும் உயிரோடு. ஓடிச் சென்று அன்போடு தூக்கிக் குழந்தைகளின் கண்ணீரைத் துடைத்தவள் சுமக்காமலே ஒரு குழந்தையின் அன்னையானாள்.


நிஷாவோடு தன்னுடைய ஊருக்குள் வந்தாள் மது. ஊரைக்கண்ட சந்தோஷத்தில் அவள் மனம் "சரிகமபதநி" பாடினாலும் சில மனச்-சஞ்சலங்களோடும் உழன்றாள். மெல்ல மெல்ல அடியெடுத்து நடந்தவளின் முன்னாலும் சில உறவுகளின் ஏளனமும் கிசுகிசுப்பும் இருக்கத்தான் செய்தது. எல்லாவற்றையும் எதிர்கொண்டு தன்வீட்டு முற்றத்தில் நின்றாள்.

"அம்மா...அம்மா..." குரலைக் கேட்டதும் அப்பாவும் அம்மாவும் ஓடோடி வந்தார்கள். கட்டியணைத்தார்கள். கதறியழுதார்கள். கையிலேயே குழந்தையைக் கண்டவர்களின் கேள்விக்குறிப் பார்வைக்குப் பதிலளித்து முற்றுப்புள்ளி வைத்தாள். மதுவின் பதிலைக் கேட்ட தந்தை சொன்ன கதையில் மது உறைந்துவிட்டாள். ஊரிலுள்ளவர்களின் பார்வைகளினதும், கிசுகிசுப்புக்களினதும் அர்த்தம் அப்போதுதான் அவளுக்குப் புரிந்தது. மது யாரோடையோ ஓடிப் போய்விட்டாள் என்ற கதையை உருவாக்கியவர்களுக்கு ஏற்றதாய் இன்று அவளைக் குழந்தையோடு காணும்போது அதனை நிரூபிக்கக் கூடியதாகவும் இருந்தது. ஸ்ரீபனுக்கும் பலபல கடிதங்கள் போட்டார்கள்.

தன்னுடைய சிநேகிதியின் உதவியுடன் ஸ்ரீபனின் முகவரியை அறிந்தவள் தன் கதையைக் கூறாமல் தான் ஊரைவிட்டுச் சென்றவரைக் கூறி மன்னிப்புக் கேட்டுக் கடிதம் போட்டாள்.தான் மறுபடியும் ஊருக்கு வந்ததையும் எழுதியிருந்தாள். "டிரிங்...டிரிங்..." வாசலில் தபால்காரனைக் கண்டவள், ஓடோடிச் சென்று கவரை வாங்கி அவசரமாய்ப் பிரித்தாள். முகவரியில் ஸ்ரீபனின் கையெழுத்து அவளைப் பார்த்து "ஹாய்..."சொல்லியது. சிரித்தபடி கடிதத்தைப் பிரித்தாள். தாள்கள் வெறுமையாய் இருந்தது. ஒரு எழுத்துக் கூட இல்லை. வெறுமையின் விளக்கம் புரியாமல் விழித்தாள். வாழும்வரை ஒற்றை மரமாய் இருந்து நிஷாவுக்கு நிழல் கொடுப்பதுதான் முடிவு என நினைத்தாளே தவிர ஸ்ரீபன் மீது சிறிதும் கோபப்படவில்லை. அவள் அவனைப் பற்றி என்ன நினைக்கிறாள். அவன் முடிவு என்ன என்பது யாருக்கும் தெரியவில்லை. அந்த நேரத்தில் நிஷாவின் அம்மம்மாவும் உறவினர்களும் அவளைக் கூட்டிச் செல்ல வந்திருக்கிறார்கள். மதுவால் எந்த முடிவும் எடுக்க முடியவில்லை.

அவளிடமிருந்து அறுத்துக்கொண்டோடிய மனக் கயிறை இழுத்து இறுக்கிக் கட்டினாள். நிஷாவைப் பாடசாலையால் அழைத்துச் சென்றவள் வழியிலேயே நிஷாவிடம் அவள் உறவுகள் வந்தவிடயத்தையும் கூறிவிட்டாள். இனி எது நடந்தாலும் நடக்கட்டும் நாம் என்னதான் அழுதுபுரண்டாலும் இறைவன் நினைப்பதுதானே இறுதியில் நடக்கிறது என்னும் மனநிலைக்கு வந்துவிட்டாள். நிஷாவை அழைத்து அவள் உறவுகளிடம் ஒப்படைத்தாள். அவர்களின் கைகளை உதறிய நிஷா, தாய் மதுவிடம் ஒட்டிக் கொண்டாள். மது நிஷாவின் தலையைத் தடவி நெற்றியில் மெல்ல ஒரு முத்தம் கொடுத்தாள். கண்களில் இருந்து ஒரு சொட்டு நீர்த்துளி இதுதான். அவளின் கடைசிக் கண்ணீர். இனி அவள் அழவேமாட்டாள். கண்களில் நீர் வற்றி வரண்டுவிட்டது. இனி அழுதால் இரத்தம்தான் வடியும். இவளின் நிலையை உணர்ந்த நிஷாவின் உறவுகள் அவளை மதுவிடமே ஒப்படைத்து விடைபெற்றார்கள்.

வழியனுப்பிய மது வாசலில் ஒரு புது உறவு வருவதைக் கண்டு அதிர்ச்சியுற்றாள். தன் மன உணர்வுகளனைத்தையும் மிகவும் கஷ்ரப்பட்டு அடக்கினாள். எதிரே வந்த உருவம் அவளின் கைகளை மெதுவாய் பற்றியது. தன்னை மறந்தவள் தோள் மீது சாய்ந்தாள். ஆதரவாய் அவள் முதுகு தடவப்பட்டது. திடுக்கிட்டு விழித்தாள்."இது கனவா?" அவள் நினைப்பதை உணர்ந்த அவன் கைகள் மெல்ல எட்டி அவள் கைகளைக் கிள்ளியது. "மது நான் உன்னிடம் வந்திட்டேனடி." "ஸ்ரீபன்... நீங்...நீங்கள்..." "என்ன நம்பேலாமல் கிடக்குதே?" ஆச்சரியமாய்ப் பார்த்தாள். "என்ரை குடும்பத்தை நான் உழைச்சுக் காப்பாற்றிவிட்டேன். இனி என் உறவுகள் தடையில்லை. உன்ரை கடிதத்துக்கு என்ர பதில் வெற்றுப் பேப்பராய் இருக்கும் போதே நீ என்னைப் பற்றித் தெரிஞ்சிருக்கவேணும். என்ர மனம் உன்னைப் பற்றிய நினைவை இன்றும் வெண்மையாய்த்தான் நினைக்குது எண்டதைத் தெரியப்படுத்தினேன். சாதியும் மதமும் மனிதனை முழுமையாக்காது. எமக்கெல்லாம் ஒரு கடவுள்தான். அவரைத்தான் நானும், நீயும் எல்லோரும் கும்பிடுறம். வா நாங்கள் புது உலகுக்குப் போவோம். ஸ்ரீபனின் கைகளோடு தன் கைகளையும் இணைத்து நிஷாவோடு நடக்கிறாள் மது. இனி அவள் அழமாட்டாள். ஆனந்தம் அவளோடு விளையாடும். இனி அமாவாசை இல்லை. ஏனெனில் அவள் நிலவல்ல நிலவைத் தாங்கும் வானத்தின் ஜோடி... **(யாவும் கற்பனை)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அனுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்!

**பேசும்**போது தேன் சொட்டப் பேசுவார்கள், முன்னிலையில் இருக்கும்போது புகழ்ந்து தள்ளுவார்கள், உயிரைக் கூடக் கொடுப்பேன் என்பது போலிருக்கும் சிலருடைய பேச்சு. ஆனால் உள்ளத்திலிருப்பது அந்த இடத்தைவிட்டு அகன்ற மறுகணமே வெளிப்பட்டுவிடும்; இவை அனைத்தும் இன்றைய அறிவுக் கூர்மையின் வெளிப்பாடுகள் என்று கூடச் சிலர் கூறுவதுண்டு. ஆயினும், அவர்களின் மனங்களில் இருக்கின்ற குற்ற உணர்வு தினந்தினம் அவர்களை அரித்துக்கொண்டிருக்கும் என்பது தெளிவு. அவர்தம் கீழ்மையைக் கூறவந்த வள்ளுவப் பெருந்தகை.

''எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு''

(820)

தனியே வீட்டிலுள்ளபோது நட்புப் பாராட்டுவதுபோல் நடித்து,பலர் கூடியிருக்கும் மன்றில் பழித்துப் பேசுபவர்களின் நட்பைச் சிறிதளவேனும் அணுகாமலிருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதாம்.

## இலக்கிய நயம்

# நானும் துயிலறியேன்!

**கயற்கண்ணி** திடீரென்று அவனை விட்டு விலகிச் சென்றது அவன் எண்ணங்களில் ஓர் பேரிடியாக விழுந்துவிட்டதனால் செய்வதறியாது திகைத்து நின்றுவிட்டான் மாருதன். அவள் சென்று மறைந்த பின்னும் அவள் சென்ற திசையையே வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தவனின் முகத்தில் அதுவரை படர்ந்திருந்த கதிரவனின் செந்நிறக் கதிர்கள் மறைந்து இருள் பரவத் தொடங்கிய போது ஏற்பட்ட மாறுதல்கள் அவனைச் சுய நிலைக்கு இழுத்தது போலும். ஆழ்கடலில் சங்கமித்துக்கொண்டிருந்த கதிரவன் சரியாக மறைய முன்னமே அவன் மனதில் சூழ்ந்துவிட்ட இருளின் சுமையோடு தலை குனிந்தவாறே சென்று புரவியின் மேல் ஏறி அமர்ந்ததும் புரவி நடக்கத் தொடங்கியது.

கடலோரத்து மணற் திட்டுகளில் கால் பதுங்கிய போதும் கயற் கண்ணியின் மனதிலெழுந்த வேகம் நடையிலும் தெரிந்தது. அவள் பாதங்களில் ஏற்பட்ட வலி கூடக் பெரிதாகத் தெரியவில்லை. விரைவாகச் சென்று படுக்கையில் சார்ந்தாள். ''எத்தனை துணிவு அவனுக்கு?'' இதுவரையில் நடந்திராத ஒரு நிகழ்வால் அவள் துடித்துப் போனாள். வீட்டிலுள்ளவர்களின் பேச்சுக் குரல் ஏனோ அவளுக்குத் தொல்லையாக இருந்தது? உணவு கூடப் பிடிக்கவில்லை. ஏன் என்ற கேள்விக்கு அவளால் விடை காண முடியவில்லை. சற்று நேரம் கண்களை மூடலாம் என்றால் கடற்கரை நினைவுகள் கண்களை மூடவிடுவதாக இல்லை.

### தருவது கற்பகன்

அவன் அரும்பு மீசையும் குறும்புப் பார்வையும் ''எவ்வித அனுமதியும் இன்றி அவன் என் தோள்களைத் தொட்டானே!'' என்று நினைக்கும்போது அவமானம் வேறு மனதை உறுத்துகிறதே அவன் என்னைத் தொட அனுமதித்திருக்கக் கூடாது. அவன் என்னைத் தொடும்வரை என்ன செய்து கொண்டிருந்தேன்?'' அவளால் விடை காண முடியவில்லை. சேச்சே! இவ்வளவு அஜாக்கிரதையாக நான் இருந்திருக்கவே கூடாது. என்னை அவன் நெருங்கிவருவது தெரிந்தும் அவன் குறுகுறுத்த கண்களையே பார்த்துக்கொண்டு நின்றது எத்தனை தவறாகிவிட்டது. ஒருவேளை அவன் அழகில் நான்..... நான்? அவளை அறியாமலேயே மனதிலொரு வெட்கம் குடிகொள்வது போலொரு உணர்வு தலைகாட்டுகிறது. மீண்டும் அவன் முகத்தைத் தன் மனக்கண் முன் கொண்டுவந்து பார்க்கிறாள். காந்தம் பொருந்திய கண்கள், துடிக்கின்ற இதழ்கள், கடைந்தெடுத்த மூக்கு, அரும்புகின்ற மீசை, மலைக்கு ஒப்பான தோள்கள், அவன் அணிந்திருந்த மேலங்கியை முன்னே தள்ளிக் கொண்டிருக்கும் அகன்ற மார்பு இத்தனையும் ஒருங்கே அமைந்திருந்த ஒரு கம்பீரத் தோற்றம் எந்தக் கல் நெஞ்சக்காரியின் மனதிலும் லேசாக இடம்பிடித்துவிடக் கூடிய அவன் தோற்றம் ஒரு சில நொடிக்குள் அவள் மனதில் நிலைத்து நின்றுவிட்டது அவளுக்கே வியப்பைக் கொடுத்தது. அவனை மீண்டும் பார்க்க வேண்டும்போல் ஒரு திடீர் ஆசை தோன்றுகின்றதே!

மனம் ஒரு நிலையிலில்லை நாழிகை கடந்தவண்ணம் இருந்தது. உறக்கம் அது கண்ணுக்கெட்டாத தொலைவுக்குச் சென்றுவிட்டது. இப்போதெல்லாம் அன்று கடற்கரையில் நடந்த நிகழ்வுகள் ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தன. அவன் தன்னை நெருங்கும் பொழுது ஏதோ கேட்டானே என்ன? 'ஆமாம், தனியாக என்ன செய்கிறாய் என்று கேட்டானே! அவளை அறியாமலேயே ஒரு புன்னகை தவழ்ந்து செல்கிறது மனதுக்குள் ஏதோ ஒரு குதூகலம்.''நேற்று வரை தனியாக இருந்தது ஏதோ உண்மைதான் இப்போது நான் தனியாக இல்லை. என் மனதுக்குள் நீங்கள் புகுந்துவிட்டீர்களே இனிமேல் அப்படிக் கேட்கக் கூடாது தன் மார்பில் செல்லமாகத் தட்டிக் கொள்கிறாள் கயற்கண்ணி. அந்த இரவு மட்டும் அவளுக்கு வழக்கத்தைவிடப் பல மடங்கு நேரமெடுப்பதுபோல் தோன்றியது. விடிந்ததும் விடியாததுமாகத் தன்னை அலங்கரித்துக் கொள்கிறாள். ''பாழாய்ப் போன வெய்யில் வேறு கொதிக்கிறதே! மாலையாகும் வரை காத்திருக்க வேண்டி இருக்கிறதே கதிரவனைச் சபித்துக்கொண்டாள். இன்றுமவர் வருவாரா மனதிலொரு இனந்தெரியாத ஏக்கம். எப்படியோ அந்திவேளை ஆனது கடற்கரை நோக்கி அவள் கால்கள் நடக்கின்றன. கண்களோ நாலாபுறமும் பம்பரமாகச் சுழல்கின்றன. அவன் எங்காவது தென்படுகின்றானா? மனதில் வர்ணிக்க முடியாததொரு தாகம் கால்கள் பின்னுகின்றன. ''ஒருவேளை அவர் நேற்று நான் சந்தித்த இடத்துக்கு



வந்திருப்பாரோ?'' மனதில் சிறியதோர் நம்பிக்கை நட்சத்திரம் ஒளிவிடத் தொடங்கிக் கால்களில் வேகம் தென்படுகிறது. என்ன ஆச்சரியம் நேற்று மாலை அவள் அமர்ந்திருந்த அதே தாழை மரநிழல் மலர்க்குவியலில் யாரோ படுத்திருப்பது போல் தெரிகிறதே! யாராக இருக்கும்? ஒருவேளை அவராக இருக்குமோ? உள்ளம் அங்கலாக்கிறது அதோடு ஒரு தயக்கமும் சூழந்து கொள்ள, அடி மேல் அடி வைத்து அருகில் சென்றவள் அப்படியே மெய்மறந்து நின்றுவிட்டாள்.

**ஒண்தொடி அரிவை கொண்டனள்,நெஞ்சே!**
**வண்டிமிர் பனித்துறைத் தொண்டி ஆங்கண்**
**உரவுக்கடல் ஒலித்திரை போல,**
**இரவி னானும் துயிலறி யேனே!**

***ஐங்குறு நூறு(172)***

## சிந்தியா பதில்கள்

✉ **சிந்தியா, யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டால் புலம்பெயர் நாடுகளில் வாழும் நம்மவர்களைத் திருப்பி அனுப்பிவிடுவார்களா?**

*-திருமதி. எஸ்.சிவபிரகாசம், வெள்ளவத்தை.*

குடியுரிமை பெறாமல் இருப்பவர்களை ஒருவேளை திருப்பியனுப்பலாம். இலங்கைப் பிரச்சினை, யுத்தத்தின் முடிவோடு முடிவுக்கு வரப்போவதில்லையே. ஒருவேளை நம் நாட்டுப் பிரச்சினை விரைவில் முடிவுக்கு வந்துவிடக்கூடாது என்பதுதான் புலம்பெயர்ந்திருக்கும் நம்மவர்களின் பிரார்த்தனையாக இருக்குமோ?

✉ **ஹாய் சிந்து! திலீபனின் விரதத்தில் காசியானந்தன் கவிதை பாடியதுபோன்று திருமாவின் உண்ணாவிரதத்திற்குக் கவிபாடும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்தால்...?**

*-கே.சிவமயூரன், வவுனியா.*

அப்படி வாய்ப்புக் கிடைத்திருந்தால் இவ்வார நகைச்சுவைக்கான பதிலாகவும் பயன்படுத்தியிருப்பேனே திருமா உங்களையும் என்னையும் மட்டுமல்ல தமிழ்ப் பற்றாளர்களையும் சேர்த்தல்லவா ஏமாற்றிவிட்டார். பசி தாங்கமாட்டாராம் திருமா இந்த உண்ணாவிரத விடயத்தில் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டு அவசரப் பட்டும் விட்டேன் என்று பயந்துவிட்டாராம்.

✉ **சிந்தியா! வன்னி பற்றி கிடைக்கும் செய்திகள் நடப்பது கனவா அல்லது நினைவா எனச் சிந்திக்க வைக்கின்றது! உங்களுக்கு...?**

*-என்.சணா, சுவிஸ்.*

எனக்கும் நம்பமுடியாமல்தான் இருக்கின்றது என்ன செய்வது நம்பித்தானே ஆகவேண்டியிருக்கிறது. பெடியளின் ஆதாரமற்ற பிரசாரங்களை யெல்லாம் ஆஹா ஓஹோ என்று உப்புப் பார்க்காமலே விழுங்கிய நமக்கு தற்போதைய செய்திகள் கசப்பாகத்தான் இருக்கும்.

✉ **சிந்தியா, தமிழ் கூட்டமைப்பின் எதிர்காலம் பற்றி ஆருடம் கூறமுடியுமா? (நீர் சிறந்த ஜோசியர் என்பது எனக்குத் தெரியும்)**

*-ஆர்.கமலேஸ்வரன், திருமலை.*

கமலேஸ் நீங்கள் உண்மையில் எந்தக் கட்சி? கூட்டமைப்பின் எதிர்காலம் பற்றி இப்போது கேள்வி கேட்டால் நான் எப்படியும் போட்டுத் தாக்குவேன் என்பது உங்களுக்குத் தெரியும். கேள்வியோடு விடாமல் எனக்கு ஜோசியர் பட்டம் கொடுத்து வெறுப்பேற்றியிருக்கிறீரே உமக்கு குறும்பு அதிகம்தான். பூதவுடலாகிக் கிடக்கும் கூட்டமைப்பைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கின்றது.

✉ **சிந்தியா! பராக் ஒபாமாவின் பதவியேற்பிற்கு நீர் செல்லவிருப்பதாக எனது நண்பி கூறியது உண்மையா?**

*என்.கயல்விழி, சொய்சாபுரம்.*

ஓரளவுக்கு ஊகித்திருக்கின்றார். ஆனால் இதை அவர் ஏப்ரல் முதலாம் திகதிதானே உங்களிடம் சொல்லப் போவதாக என்னிடம் சொன்னார்.

✉ **இலங்கையின் தாய் சேய் இறப்பு வீதம் குறைவாக இருப்பது பற்றி சிந்தியாவின் கருத்தென்ன?**


*-ராஜகோபால், வவுனியா.*

இது ஒன்றும் சுகாதார மேம்பாட்டின் திறமைச் சித்தியோ, விஞ்ஞானத்தின் விந்தையோ கிடையாது. இனந்தெரியாத கொலையாளிகள் எனப்படுவோரின் கை வரிசை. ஏனென்றால் இலங்கையில் போட்டுத்தள்ளப்படுபவர்களில் 99 வீதமானவர்கள் ஆண்கள்தானே.

✉ **என்ன சிந்தியா, யார்தான் ஆரியக் கூத்தாடினாலும் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியாக இருப்பது போன்றல்லவா தெரிகிறது?**

*-என் கனகசபை, மட்டக்களப்பு.*

அப்படியும் சொல்லலாம். குறிப்பாகக் காங்கிரஸ் கட்சி புலிகள் விடயத்தில் இரண்டில் ஒரு முடிவைக் காண வேண்டுமென்பதில் இலங்கை அரசைப் போல் உறுதியாக இருப்பதுதான் உண்மை.



விஜய் - நயன்தாரா
வில்லு

✉ **சிந்தியா, புலிகள் அழிக்கப்பட்ட பின் இலங்கைத் தீவு எவ்வாறு இருக்குமென நினைக்கின்றீர்?**

*-எம்.எச்.இம்ரான், மருதானை.*

கடந்த முப்பது வருடங்களாக அனுபவித்த வலியை ஒரே வரியில் மறந்து விட்டு பதிலளிக்கக் கொஞ்சம் சிரமமாக இருக்கின்றது. நீங்கள் கற்பனை செய்யும் காலம் விரைவில் மலருமா என்பது ஒரு புறமிருக்க .... மலர்ந்தால் ஹிட்லருக்குப் பின்னான ஜெர்மனியைப்போல் இருக்குமென்று நண்பர் ஒருவர் சொன்னது ஞாபகம் வருகிறது.

✉ **சிந்தியா, விஜய்யின் வில்லு என்ன சொல்கிறது?**

*-என்.பிரனமன், வத்தளை.*

முதல் பாதி நகைச்சுவை, விறுவிறுப்போடும் கலகலப்புச் சேர்க்கிறது. பின்பாதி முன்பாதிக்கு எதிர்மாறாக ஏமாற்றமாக உள்ளது. இயக்குநர் பிரபுதேவா விஜயை வைத்து இயக்கிய போக்கிரி வெற்றியைத் தக்கவைத்துக் கொள்ளப் பெரும் பிரயத்தனம், செய்திருக்கின்றார். விஜய் பிளஸ் வடிவேல்தான் படத்தின் பலம். பாடல்கள் ரசிக்கும்படியான காட்சியமைப்புகள். வில்லு ரசிகர்களுக்கு வெற்றியென்று சொல்லு.

✉ **சிந்தியா, தானாடாவிட்டாலும் தசையாடும் என்கிறார்களே, உண்மையா?**

*-ஆர்.சுஜிகலா, சிலாபம்.*

நெருங்கிய நண்பர்களுக்காகவும், இரத்த உறவுகளுக்காகவும் சில சமயங்களில் ஆடத்தான் செய்கின்றது. ஒவ்வொரு பொழுதும் மரணங்களைப் பார்த்து மனது மரத்துப் போய்விட்ட ஒரு காலகட்டத்தில் உங்களது கேள்வியும் எழத்தான் செய்கிறது.

✉ **சிந்தியா, மத்திய மாகாண சபைத் தேர்தல் மலையகக் கட்சிகளுக்குக் கைகொடுக்குமா?**

*-எம்.பெரியசாமி, மஸ்கெலியா.*

கடந்த காலத்தைப் போலல்லாமல் இம்முறை துணிச்சலோடு நீலக் கட்சியோடு கூட்டுச் சேர்ந்தது சாதகமானதாகத்தான் தெரிகிறது.

✉ **சிந்தியா, பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் உங்கள் பெயரைப் பதிவு செய்துவிட்டீர்களா?**

*-ஆர்.ரஜீவன், தெஹிவளை.*

இன்னுமில்லை... பதிவு செய்ய வேண்டும். நீங்கள்?

✉ **டியர் சிந்து, எமது இளம் புயல் அஜந்த மெண்டிஸ் தூள் கிளப்புறாரே, தொடர்ந்து தாக்குப் பிடிப்பாரா?**

*-ராகவன், இரத்தினபுரி.*

தாக்குப் பிடிப்பார். இதுவரை 4 டெஸ்ட் போட்டிகளில் 33 விக்கெட்டுக்களையும் 21 ஒருநாள் போட்டிகளில் 55 விக்கெட்டுக்களையும் பதம் பார்த்திருக்கும் மெண்டிஸின் சாதனைப் பட்டியல் தொடரும் என்று எதிர்பார்க்கலாம். இறுதிப்போட்டியில் நமது நம்பிக்கை நட்சத்திரம் முரளிதரன் 16 பந்துகளில் 34 ஓட்டங்களை அபாரமாகப் பெற்று நிகழ்த்திய மெஜிக் வியப்புக்குரியது. தனது முத்திரையை முரளி மீண்டும் பதித்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை இலக்கு வைத்து 346 தாக்குதல்கள்;
# 3262 பேர் பலி; 3494 பேர் படுகாயம்


கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் கடந்த வருடம் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டபோது...

''1984 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலான 22 வருட காலப் பகுதிக்குள் பொதுமக்களை இலக்கு வைத்து 346 தாக்குதல்களைப் புலிகள் இயக்கம் நடத்தியுள்ளது. இதனால் 3262 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 3494 பேர் பாரதுாரமான காயங்களுக்கு இலக்காகியுள்ளனர்" என்று சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போஷாக்குத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார். இவர்களில் 2252 பேர் சிங்களவர்கள், 309 பேர் தமிழர்கள், 701 பேர் முஸ்லிம்கள் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். இதே காலப் பகுதிக்குள் முக்கிய அரசியல்வாதிகள் சுமார் ஐம்பது பேரைப் புலிகள் கொன்றுள்ளனர். இவர்களில் 33 பேர் தமிழ் அரசியல்வாதிகளாவர். இந்த 22 வருடங்களுக்குள் 168 தற்கொலைத் தாக்குதல்களை அந்த இயக்கம் நடத்தியிருக்கிறது. இதனால் உலகில் தற்கொலைத் தாக்குதல்களை நடத்திவரும் பயங்கரவாத அமைப்புக்களில் ஆகக்கூடிய தாக்குதல்களை நடத்திய அமைப்பாகவும் அது திகழ்கிறது என்றும் அமைச்சர் சொன்னார். இந்தக் கால இடைவெளிக்குள் ஹிஸ்புல்லா அமைப்பு லெபனான், குவைத் ஆகிய நாடுகளில் 52 தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியிருக்கிறது. இஸ்ரேலில் ஹமாஸ் அமைப்பு 22 தற்கொலைத் தாக்குதல்களையும், துருக்கியின் குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி 15 தற்கொலைத் தாக்குதல்களையும் நடத்தியிருக்கிறது. இஸ்ரேலில் பாலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு இக்காலப் பகுதிக்குள் எட்டே எட்டுத் தற்கொலைத் தாக்குதல்களை மட்டுமே நடத்தியிருக்கிறது என்றும் அமைச்சர் சொன்னார்.

## பராக் ஒபாமாவும் அமெரிக்காவின் பழைய கொள்கைகளையே முன்னெடுப்பாராம்

அமெரிக்க ஜனாதிபதியாக பராக் ஒபாமா பதவியேற்றுக் கொண்டதால் அமெரிக்காவின் நிலையான கொள்கைகளில் பாரிய மாற்றம் ஏற்படும் என எதிர்பார்ப்பது தவறானதென அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர். பதவியேற்றுப் பதினாறு மாதங்களுக்குள் ஈராக்கிலிருந்து அமெரிக்கத் துருப்புக்களை வாபஸ் பெறுவேன் என்றும், குவாண்டனாமோ சிறைச்சாலையை மூடிவிடுவேன் என்றும் பராக் ஒபாமா தேர்தலுக்கு முன்னர் வாக்குறுதி அளித்திருந்தார். ஈராக்கில் அமெரிக்கா மேற்கொண்ட ஆக்கிரமிப்பு மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஸின் ஆட்சிக்கால நெருக்கடிகள், பொருளாதார நெருக்கடிகள் போன்றவையே பராக் ஒபாமாவின் வெற்றிக்குச் சாதகமாக அமைந்திருந்தன.

மற்ற நாடுகளின் மனித உரிமைகள் பற்றி வாய் கிழியப் பேசும் அமெரிக்கா, குவாண்டனாமோ சிறையில் கைதிகளைச் சித்திரவதை செய்தமை பற்றிய விபரங்கள் அதிர்ச்சியானவை என்கிறார் சுசான் குரோப்போர்ட் என்ற அமெரிக்கப் பெண்மணி. அந்தச் சிறையில் உள்ள பயங்கரவாதச் சந்தேக நபர்களின் விசாரணைகளை மேற்பார்வை செய்யும் அதிகாரியாகப் பணியாற்றியவர் திருமதி சுசான். குவாண்டானாமோ சிறையின் நடைமுறைகளைப் பார்க்கும்போது அதனை ஜனாதிபதி பராக் ஒபாமாவினால் மூடிவிட முடியாது என்கிறார் சுசான்.

ஆப்கானிஸ்தானில் கைது செய்யப்பட்ட சவூதி அரேபியப் பிரஜை மொஹமட் ஹௌராணி குவாண்டனாமோ சிறையில் மிகக் கேவலமான முறையில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார் என்று வாஷிங்டன் போஸ்ற் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் சுசான் தெரிவித்துள்ளார். மொஹமட் ஹௌராணி கைது செய்யப்பட்ட பின்னர் 2002 நவம்பர் முதல் 2003 ஜனவரி முதல் 48 நாட்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார் என்கிறார் சுசான். வழமையாகப் பதினெட்டு மணித்தியாலங்கள், இருபது மணித்தியாலங்கள் என அவர் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டாராம். பெண் விசாரணை அதிகாரிகளுக்கு முன்பாக அவர் நிர்வாணமாக்கப்பட்டு மிக மோசமாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டாராம். ஐந்து மாதங்களாக அவர் தனிமையாகச் சிறை வைக்கப்பட்டிருந்தார். சீயஸ் என்ற இராணுவ நாய் அவர் மீது பாய்ந்து மிரட்டியதாம்.

## திருமலையில் வறிய மாணவர்களுக்கு உதவிகள்

திருகோணமலை மாவட்ட ஸ்ரீ தமிழ் ஈழ விடுதலை இயக்க காரியாலயத்தில் வறிய மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த் இரண்டாம் திகதி இடம்பெற்றது. மக்கள் தொடர்பாளர் சுரேஸின் வரவேற்புரையினைத் தொடர்ந்து வைபவம் ஆரம்பமானது.ஸ்ரீ தமிழ் ஈழ விடுதலை இயக்க தலைவரான த.உதயராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். சர்வதேச இணைப்பாளர் ச.சயந்தன், திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் கே.பரமேஸ்வரன், வவுனியா மாவட்ட அமைப்பாளர் கே.அகிலன், மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் எஸ். வின்சன் மற்றும் அன்புவழிபுர பிள்ளையார் ஆலய பிரதம குருக்கள், மாவட்ட கல்வி கலாசார அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பிரபாகரன் தப்பிச்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரச சார்புப் பத்திரிகை நிறுவனமான 'லேக்ஹவுஸ்' வெளியிடும் ஆங்கில ஞாயிறு வார இதழே சண்டே ஒப்சேர்வர் பத்திரிகையாகும். கடந்த 18 ஆம் திகதி வெளியான பேட்டியிலேயே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு கூறினாரென்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஷானிக சிறியானந்த என்பவர் பேட்டி கண்டுள்ளார்.

''பிரபாகரன் ஏற்கனவே வேறொரு நாட்டுக்குத் தப்பிச் சென்றுவிட்டாரென்று கூறப்படுகிறதே. அது வெறும் வதந்தியா?" என்ற கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். படையினர் இன்னுமொரு பத்து கிலோமீற்றர் நிலப் பரப்பைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவார்களேயானால், அங்கிருப்பது பிரபாகரனுக்குக் கஷ்டமாகிவிடும். ஓரளவுக்காவது அவருக்குப் பொது அறிவு இருக்குமேயானால், அவரைப் படையினர் சுற்றிவளைப்பதற்கு முன்னதாகச் சரணடைவதற்கு இதுவே தருணமென்று இராணுவத் தளபதி தெரிவித்தாராம்.

## இலங்கைத் தமிழர் பிரச்சினையை அரசியல்..

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் திருமாவளவனின் உண்ணாவிரதத்தையடுத்து தமிழகத்தில் ஏற்பட்ட வன்செயல்கள் தனக்கு அரசியல் ரீதியிலும் தனிப்பட்ட ரீதியிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் என்பதற்காகவே அவர் இடைநடுவில் உண்ணாவிரதத்தைக் கைவிட்டாரென்று தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. வன்செயல்கள் தொடர்பாகச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இலங்கைப் பிரச்சினையை மையமாக வைத்துத் தமிழகத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியமைக்காகத் திருமாவளவன் கைது செய்யப்படக்கூடிய நிலை இருப்பதாகவும் தமிழக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். கட்சிகள் ஏற்பாடு செய்யும் எதிர்ப்பு நடவடிக்கைகளின்போது அரசுச் சொத்துக்களை சேதப்படுத்தும் கட்சிகளின் தலைவர்கள் கைது செய்யப்படுவார்களென்று ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது சட்டம் கொண்டு வந்திருந்தார். இதுவே இடைநடுவில் திருமாவளவன் சாகும் வரை மேற்கொண்ட உண்ணாவிரதத்தைக் கைவிடக் காரணமென்று தமிழக காங்கிரஸ் முக்கியஸ்தரொருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினத்தன்று சென்னையில் இலங்கைத் தேசியக் கொடியை எரிக்கப் போவதாகத் திருமாவளவன் இப்போது அறிவித்துள்ளார். ''இலங்கைக் கொடியை எரிப்பதற்குத் தமிழக மாநில அரசோ, இந்திய மத்திய அரசோ அனுமதிக்கப் போவதில்லை. திருமாவளவனால் இலங்கைக் கொடியை எரிக்க முடியுமென்றால், கொழும்பில் இந்தியத் தேசியக் கொடி எரிக்கப்பட்டால் நிலைமை என்னவாகும்? இது திருமாவளவனின் வெறும் அரசியல் ஸ்டண்ட் என்கிறார் புதுடில்லிப் பத்திரிகையாளர் குல்தீப் நாயர்.

## வடக்கின் அபிவிருத்திப் பணிகளில்......

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண அபிவிருத்தி தொடர்பாகப் பல்துறை சார்ந்த அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திவருகின்றார். சுகாதாரம், கல்வி, உள்ளூராட்சி நிர்வாகம் மற்றும் மக்கள் நலன் பேணும் நடவடிக்கைகள் தொடர்பாகப் பல்வேறு ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

வடக்கு அபிவிருத்தி தொடர்பான விஷேட மாநாடொன்று கடந்த 16 ஆம், 17 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலுள்ள அமைச்சரின் பணிமனையில் நடைபெற்றது. வட மாகாணத்தின் பிரதம செயலாளர் ரங்கராஜா, கல்வியமைச்சின் செயலாளர் இளங்கோ, சுகாதார அமைச்சின் செயலாளர் ரவீந்திரன், பிரதேச செயலாளர்கள், கல்விப் பணிப்பாளர்கள் உட்படப் பலதுறை சார்ந்த உயரதிகாரிகள் இந்த விஷேட மாநாட்டில் பங்குபற்றினர்.

ஒரு காலத்தில் கல்வித்துறையில் உயர்ச்சி பெற்று விளங்கிய வடபகுதியை மீண்டும் அதே நிலைக்கு முன்னேற்றும் பல்வேறு வழிவகைகள் பற்றி ஆராயப்பட்டன. ஆசிரியர் பிரச்சினை மாணவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், தனியார்துறைக் கல்வியை விருத்தி செய்ய எடுக்கப்பட வேண்டிய முயற்சிகள் குறித்தும் ஆராயப்பட்டன. யாழ்ப்பாணத்தில் நிலவும் ஐம்பது சுகாதாரப் பரிசோதகர்களுக்கான வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதென சுகாதாரத்துறை சார்ந்த மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது. வடபகுதி சமூகப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது. அங்கு மக்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளித்தார்.

## புலிகளுக்கு எதிராகவும்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை மற்றுமொரு செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.வி.தங்கபாலு, ''இலங்கைத் தமிழர் பிரச்சினையை முன்னிறுத்தி தமிழ் நாட்டின் அமைதியைக் கெடுத்து விடக் கூடாது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நிறைவேற்றச் சிவ்சங்கர் மேனனுடனான சந்திப்பில் இலங்கை அதிபர் கூறியிருப்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்" என்றார். இவ்விடயத்தில் முதல்வர் கலைஞர் எடுத்துவரும் முயற்சிகள் பாராட்டுக்குரியன. ஈழத் தமிழர் பிரச்சினையை அரசியலாக்க யாரும் முயற்சிக்கக் கூடாது" என்றும் தெரிவித்தார்.

## கிளிநொச்சி - காஸா....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்துப் புதுடில்லியிலுள்ள பிரபல பத்தி எழுத்தாளர் ஒருவர் இரத்தினச் சுருக்கமாக கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

''இலங்கைப் பிரச்சினையில் தலையிட இந்தியப் பிரதமர் விரும்பினாலும் கூட, புதுடில்லியின் கொள்கை வகுப்போடு சம்பந்தப்பட்டவர்களுக்கு இதில் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை'' என்று குறிப்பிட்டிருந்தார். அதாவது யுத்த நிறுத்தம் செய்யுமாறு கொழும்புக்கு அழுத்தம் கொடுக்கச் சோனியா காந்தியும் ராகுல் காந்தியும் விரும்பவில்லை என்பதே இதன் மறை பொருளாகும். இதனால்தான் பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு வரவேயில்லை.

இஸ்ரேலியத் தாக்குதல்களின் விளைவாகக் காஸா இன்னமும் பற்றி எரிந்துகொண்டிருக்கிறது. அமெரிக்க, பிரிட்டிஷ் எஜமானர்களால் பாலஸ்தீன மண்ணில் உருவாக்கப்பட்டதே இஸ்ரேல். பாலஸ்தீன மக்களின் இதயங்களில் இன்னமும் நெருஞ்சி முள்ளாகக் குத்திக்கொண்டிருக்கிறது இஸ்ரேல். இலங்கையில் சில பிரதேச சபைகள் கொண்டிருக்கும் பரப்பளவு கூட காஸாவில் இல்லை. முப்பது மைல் நீளமும் இரண்டு மைல் அகலமும், 15 இலட்சம் மக்களையும் கொண்ட களபூமி அது. 1967 யுத்தத்தில் காஸா பள்ளத்தாக்கைக் கைப்பற்றிய இஸ்ரேல் அங்கு செய்த கொடூரங்கள் கொஞ்சநஞ்சமல்ல. பாலஸ்தீனத்தின் மேற்குக் கரை பதாஹ் இயக்க அரசின் கட்டுப்பாட்டிலும் காஸா, ஹமாஸ் இயக்கத்தின் கட்டுப்பாட்டிலும் இருக்கின்றன. மேற்குக் கரை ஆட்சியாளர்களுக்கும் ஹமாஸுக்கும் இடையில் முரண்பாடுகள் இருப்பது வேறு விடயம். அடுத்த மாதம் இஸ்ரேலில் தேர்தல் நடைபெற இருக்கிறது. இழந்துவிட்ட செல்வாக்கை நிலை நிறுத்துவதற்காக இஸ்ரேலிய ஆளுந்தரப்பு, காஸா மீது தாக்குதலை நடத்தி, விளையாட்டுக் காட்டுகிறது. மூன்று கிழமைத் தாக்குதல்களில் 1200 பேர் கொல்லப்பட்டுவிட்டனர். சுமார் ஆறாயிரம் பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த அக்கிரமங்கள் குறித்து அமெரிக்காவும், பிரிட்டனும் கப்சிப். ஐ.நா. வழமைபோலத் தன் கையாலாகாத் தனத்தைக் காட்டிக்கொண்டிருக்கிறது.

பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிரௌன், இலங்கையில் உடனடியாக யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும், இது குறித்து பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியத் தலைவர்களுடன் தான் பேசப் போவதாகவும் கடந்த வாரம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

கிளிநொச்சி தொடர்பாகவும் காஸா தொடர்பாகவும் பிரிட்டன் கொண்டிருக்கும் நிலைப்பாட்டினைப் பார்க்கையில் பிரிட்டிஷ் நடிகரொருவர் யுத்தம் பற்றியும், பயங்கரவாதம் பற்றியும் கூறிய வார்த்தைகள்தான் ஞாபகத்துக்கு வருகின்றன. ''பயங்கரவாதம் ஏழைகளின் யுத்தம்; யுத்தம் செல்வந்தர்களின் பயங்கரவாதம்" என்றார் அந்த நடிகர். அதற்காகப் புலிகள் இயக்கத்தை ஏழைகளின் வரிசையில் சேர்த்துவிடாதீர்கள்.

வருடாந்தம் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை போதைவஸ்துக் கடத்தல், ஆயுத மற்றும் ஆட்கடத்தல்கள் மூலம் பெறும் பயங்கரவாத அமைப்பு அது - மேற்கு நாடுகளின் செல்லப் பிள்ளைகளுக்கு ஒரு விதி, மூன்றாம் உலக நாடுகளுக்கு வேறொரு விதி என்பதைத்தான் பிரிட்டிஷ் பிரதமரின் கூற்று நிரூபிக்கிறது. இருந்தாலும் மூன்றாம் உலக நாடுகளின் தலைவிதியை பிரிட்டன் நிர்ணயித்த காலம் மலையேறிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம் உங்கள் பலன்

(22.01.2009 தொடங்கி 28.01.2009 வரை)

ஞானயோகி.
டாக்டர். ப.இசக்கி

**மேஷம்:–** மேஷராசி அன்பர்களே, சந்திரன் நன்மை தரும் கிரகமாகும். திருட்டுப்போன பொருட்கள் பிறர் உதவியால் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. உடல் நிலையில் கழுத்து,மார்பு போன்ற இடங்களில் சிற்சில உபாதைகள் வந்து போகலாம். பிள்ளை இல்லாதவர்களுக்குப் புத்திர பாக்கியம் ஏற்படக் கூடிய காலமாகும். விட்டுப்போன உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது.

**இராசியான எண்:-** 2
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** மேற்கு
**பரிகாரம்:-** வெள்ளிக் கிழமைகளில் அம்மன் ஆலய வழிபாடு செய்து வரவும்.

**ரிஷபம்:–** ரிஷபராசி அன்பர்களே, சூரியன் நன்மை தரும் கிரகமாகும். அந்நிய நாடுகள் சென்று வருவதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளில் சில பின்னடைவுகள் ஏற்பட்டுப் பின் சென்று வருவீர்கள். உத்தியோகத் துறையினர்கள் மிகுந்த கவனமுடன் பணியாற்றுதல் சிறந்ததாகும். வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். தாயின் உடல் நிலையில் இருந்து வந்துள்ள பிணிகள் குறைந்து மருத்துவச் செலவுகள் குறையும்.

**இராசியான எண்:-** 1
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** கிழக்கு
**பரிகாரம்:-** ஞாயிற்றுக் கிழமைகளில் சிவ ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்து வரவும்.

**மிதுனம்:–** மிதுனராசி அன்பர்களே, புதன் நன்மை தரும் கிரகமாகும். நீண்ட நாட்களாக வராமல் இருந்த பணம் மற்றவர்களின் உதவியால் திரும்பக் கை வந்து சேரும். குடும்பத்தில் காரணமற்ற விசயங்களுக்காக வீண் மனச் சஞ்சலங்கள் வந்து போகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதில் சில சிக்கல்கள் வந்து போகும். குடும்பச் சொத்துக்களில் இருந்து வந்த நாட்பட்ட பிரச்சினைகளுக்கு நல்ல தீர்ப்புகள் கிடைக்கும். தேவையற்ற விஷயங்களில் தலையிட்டு வீண் மனச் சஞ்சலம் அடையாதீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

**இராசியான எண்:-** 5
**இராசியான நிறம்:-** பச்சை
**இராசியான திசை:-** வடக்கு
**பரிகாரம்:-** புதன் கிழமைகளில் மஹாவிஷ்ணு வழிபாடு செய்து வரவும்.

**கடகம்:–** கடகராசி அன்பர்களே, சுக்கிரன் நன்மை தரும் கிரகமாகும். கணவன்- மனைவி உறவுகளில் இருந்து வந்துள்ள மனக் கசப்புகள் குறைந்து மன நிம்மதி உண்டாகும். அரசு சம்பந்தமான வழக்கு விசயங்களில் எதிர்பார்த்து இருந்த சாதகமான முடிவுகள் கிடைக்கும் காலமாகும். வெளிநாடு சென்று வருவதற்கான வாய்ப்பு உள்ளது. திருட்டுப் போன பொருட்கள் சம்பந்தமாகப் புதிய தகவல்கள் கிடைத்து அதன் மூலம் திரும்பிப் பொருட்கள் கைவந்து சேரும்.

இராசியான எண்:- 6
**இராசியான நிறம்:-** வெள்ளை
**இராசியான திசை:-** தென்கிழக்கு
**பரிகாரம்:-** வெள்ளிக்கிழமைகளில் மஹாலட்சுமி வழிபாடு செய்து வரவும்.

**சிம்மம்:–** சிம்மராசி அன்பர்களே, செவ்வாய் நன்மை தரும் கிரகமாகும். காணாமற் போன பொருட்கள் திரும்பக் கிடைக்கும். உற்றார் உறவினர்களின் வரவால் சில ஆதாயங்களையும் மனச் சந்தோசமும் அடைவீர்கள். உத்தியோகத் துறையினருக்கு மேலதிகாரிகளின் பகையும் மற்றும் பணி இட மாற்றமும் ஏற்பட இருப்பதால் மிகுந்த கவனமுடன் பணி ஆற்றுதல் நல்லது.

**இராசியான எண்:-** 9
**இராசியான நிறம்:-** சிவப்பு
**இராசியான திசை:-** தெற்கு
**பரிகாரம்:-** செவ்வாய்க்கிழமைகளில் முருகன் ஆலய வழிபாடு செய்து வரவும்.

**கன்னி:–** கன்னிராசி அன்பர்களே, வியாழன் நன்மை தரும் கிரகமாகும். பங்காளிகளுடன் சேர்ந்து கூட்டுத் தொழில்களை ஆரம்பம் செய்வதற்கான முயற்சிகளில் சில பின்னடைவுகள் ஏற்படும். தாயின் உடல் நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு மருத்துவச் செலவுகள் உண்டாகலாம். நாட்பட்ட தீராத நோய்களுக்கு தீர்வுகள் கிடைக்கும்.

**இராசியான எண்:-** 3
**இராசியான நிறம்:-** மஞ்சள்
**இராசியான திசை:-** வடகிழக்கு
**பரிகாரம்:-** வியாழக்கிழமைகளில் சிவ ஆலய வழிபாடு செய்து வரவும்.

**துலாம்:–** துலாராசி அன்பர்களே, சனி நன்மை தரும் கிரகமாகும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்யப் போட்டிருந்த திட்டங்களில் வெற்றி பெறுவீர்கள். தாயின் உடல் நிலையில் இருந்து வந்த பாதிப்புகள் சற்றுக் குறைந்து மன நிம்மதி அடைவீர்கள். வெகு காலமாகத் திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் நடக்க வாய்ப்பு உள்ளது. புதிய நண்பர்களின் சேர்க்கையால் வீண் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரிடும்.

**இராசியான எண்:-** 8
**இராசியான நிறம்:-** நீலம்
**இராசியான திசை:-** தென்மேற்கு
**பரிகாரம்:-** சனிக்கிழமைகளில் சனீஸ்வர வழிபாடு செய்து வரவும்.

**விருச்சிகம்:–** விருச்சிகராசி அன்பர்களே, ராகு நன்மை தரும் கிரகமாகும். பணப் புழக்கம் சற்றுச் சுமாராகவே காணப்படும். வெகு காலமாகப் பிரிந்து போன கணவன்-மனைவி உறவுகளில் இருந்து வந்த மனக் கசப்புகள் நீங்கி ஒன்று சேருவார்கள். வெளி நாடு சென்று வருதல் போன்ற முயற்சிகளில் பணம், பொருள் ஏமாற்றம் அடையாமல் இருப்பது நல்லது. குடும்பத்தில் காரணமற்ற குழப்பங்களும் மனச் சஞ்சலங்களும் வந்து விலகும்.

**இராசியான எண்:-** 4
**இராசியான நிறம்:-** கறுப்பு
**இராசியான திசை:-** வடமேற்கு
**பரிகாரம்:-** ஞாயிற்றுக் கிழமைகளில் அம்மன் மற்றும் பிதுர் வழிபாடு செய்து வரவும்.

**தனுசு:–** தனுசுராசி அன்பர்களே, வியாழன் நன்மை தரும் கிரகமாகும். தந்தை வழியிலான வரவேண்டிய சொத்துக்களில் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கிச் சொத்துக்கள் கிடைக்கும். பிள்ளைகளால் இருந்து வந்த தொல்லைகள் குறைந்து மன நிம்மதி அடைவீர்கள். வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். அடுத்தவர்களின் பிரச்சினைகளில் தலையிட்டு அவமானப்பட நேரிடும்.

**இராசியான எண்:-** 3
**இராசியான நிறம்:-** மஞ்சள்
**இராசியான திசை:-** வடகிழக்கு
**பரிகாரம்:-** வியாழக்கிழமைகளில் சிவ ஆலய வழிபாடு செய்து வரவும்.

**மகரம்:–** மகரராசி அன்பர்களே, செவ்வாய் நன்மை தரும் கிரகமாகும். ஒரு சிலருக்குப் புதிய இட மாற்றம் ஏற்படலாம். குடும்பத்தில் சில சுப காரியங்கள் நடக்கும். வங்கிகளில் இருந்து எதிர்பார்த்த கடன் தொகைகள் கிடைக்கும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் அன்பும் ஆதரவும் உண்டாகுவதோடு ஒரு சிலருக்குப் பதவி உயர்வும் ஏற்படக் கூடிய காலமாகும்.

**இராசியான எண்:-** 9
**இராசியான நிறம்:-** சிவப்பு
**இராசியான திசை:-** தெற்கு
**பரிகாரம்:-** வெள்ளிக் கிழமைகளில் துர்க்கை ஆலய வழிபாடு செய்து வரவும்.

**கும்பம்:–** கும்பராசி அன்பர்களே, கேது நன்மை தரும் கிரகமாகும். காதல் விசயங்களில் நல்ல தகவல்கள் வந்து சேரக்கூடிய காலமாகும். அண்டை அயலாருடன் கவனமாகப் பேசிப் பழகவும். கண், காதுகளில் கவனம் தேவை. பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தமாக நீண்ட காலமாக இருந்து வந்துள்ள பிரச்சினைகளுக்கு நல்லதொரு தீர்ப்புகள் கிடைக்கும். பிறரால் பாராட்டுக்களையும் பெறுவீர்கள்.

**இராசியான எண்:–** 7
**இராசியான நிறம்:-** கருஞ்சிவப்பு
**இராசியான திசை:-** வடமேற்கு
**பரிகாரம்:-** திங்கட்கிழமைகளில் கணபதி ஆலய வழிபாடு செய்து வரவும்.

**மீனம்:–** மீனராசி அன்பர்களே, புதன் நன்மை தரும் கிரகமாகும். புதிய வீடு வாகனங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் சிறிது கால தாமதம் ஏற்படும். சகோதரர்களால் ஆதாயம் அடைவீர்கள். சொத்து சம்பந்தமாகிய வழக்கு விசயங்களில் எதிர்பார்த்து வந்த சாதகமான நல்ல முடிவுகள் கிடைக்கும். கணவன்-மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும்.

**இராசியான எண்:-** 5
**இராசியான நிறம்:-** பச்சை
**இராசியான திசை:-** வடக்கு
**பரிகாரம்:-** புதன்கிழமைகளில் மஹாவிஷ்ணு ஆலய வழிபாடு செய்து வரவும்.




உ
ஓம் சக்தி சிவமயம்
ஓம் அகத்கீஸ்வராய நமஹ
ஓம் ஆதி அகஸ்திய மஹாரியின் திருவருளாலும் அநுக்கிரகத் தாலும் எமது 30 ஆண்டு கால அநுபவத்தின் மூலம் ஆன்மீகம், தியானம், மணிமந்திரம், சித்தமருத்துவம், ஜோதிடத்தின் வழி யில் அனைத்து விதமான பிரச்சினைகள் நீங்கி ஆயுள் ஆரோக்கிய ஐஸ்வர்யத்துடன் வாழ அனுகவும்.

Contact:
Jothisha Athithya, Jothisha Baruthi, Jothisha Sudar, Muligai Nambi , Mani Manthira, Vaithiya, Jothisa Galagnani
Gnanayohi Dr.p.Esakki, IBAM,RMP, D.I.S.M 18(25B\1), Pulavar Street, Krishnapuram,Kadayanallur-627759
Thirunelveli District Tamil Nadu India. Phone For ISD:0091-4633-243029, Tele Fax:04633243029
Cell:98425-29691,98425-10578, Fax:04633-240390 Email:Paramasivan_esakki@yahoo.com
Website;- www.gnanayohi.com Consultation by appointment only.


# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வதெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
-காதில பூ கந்தசாமி-

வணக்கமுங்கோ!

**இலங்கையில** போரை நிறுத்தும் வரை உண்ணாவிரதம் அதுவும் சாகும் வரையும் உண்ணாவிரதமாம் எண்டு தொள் திருமா ஒரு போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறாருங்கோ.

உந்த விஷயத்தை எங்கட டமீல் கூட்டமைப்பு எம்.பி.சம்பந்தம் ஐயாக்கிட்ட கேட்டனுங்கோ.

***கா.பூ:-*** என்ன அதாகப்பட்டவரே உங்களையும், திருமா ஓவர்டேக் பண்ணிப் போட்டார் போலை இருக்கே.

***சம்:-*** யாரும் எங்களை ஓரம்கட்ட முடியாது தெரியுமோ. நாங்கள்பின் வாங்கி இருக்கிறது தந்திரோபாயப் பின்வாங்கல், போர்க் களத்தில் பெடியளும், பொலிரிக்ஸ் களத்தில நாங்களும் இப்போதைக்குத் தந்திரோபாயப் பின்வாங்கலைச் செய்துள்ளோம்.

***கா.பூ:-*** சரி... யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்று உண்ணாவிரதப் போராட்டத்தை நீங்கள், அதுவும் இலங்கையிலேயே நடத்தி இருந்தால் இன்னும் விஷேசமாக இருந்திருக்குமோ எண்டுதான் சொல்லுறன்.

***சம்:-*** நீர் சொல்லுறது சரிதான். செய்திருக்கலாம்தான் அங்கையெண்டால் திருமா சாகும்வரை உண்ணாவிரதமெண்டு இருந்தாலும் பொலிரிக்ஸ் விளையாடிக் காப்பாத்திப் போடுவாங்கள்.

இங்க நாங்கள் இருந்தால் கேக்க நாதியில்லாமல் சாகவேண்டியதுதான். எங்களைச் சாகடிக்க எதிர்பார்கிறவைக்கு நாங்களே பொல்லைக் கொடுத்த மாதிரியாயிடுமே.

***கா.பூ:-*** அப்பிடியெண்டால் திலீபனுக்கு நடந்ததுதான் உங்களுக்கும் நடக்கும் எண்டது கன்போமாக்கும். அது சரி அதென்ன திருமாவை யாவது காப்பாத்துவினம் எண்டு சொன்னீங்கள். அப்ப எல்லாம் செட்டப்போடைதான் நடக்குதோ.

***சம்:-*** பின்ன என்ன சொல்லுறன். திருமா உண்ணாவிரதம் இருக்கப் போறதுக்கு முன்னம் எங்க மேடை அமைக்கிறது, எத்தனை நாள் உண்ணாவிரதம் இருக்கிறது. யார் யாரை மேடைக்கு அழைக்கிறது உண்ணாவிரதம் தொடர்ந்தால் என்ன செய்வது என்பதெல்லாம் ஏதோ சினிமாப் படத்துக்கு ஸ்கிரிப்ட் எழுதுமாப்போலை தயாரிச்சுப் போட்டுதான் நடக்குது. உதுகள் தெரியாமல் நீர் எங்களையும் உண்ணாவிரதம் இருக்கச் சொல்லுறீர்.

***கா.பூ:-*** அப்பிடியெண்டால் எல்லாம் ஒரு நாடகம் எண்டு சொல்லுறியள்.

***சம்:-*** அதுமட்டுமில்லையப்பா. எல்லாமே ஒரு வகையான நாடகம்தான். நாங்கள் ஆடினதும் நாடகம்தான். அதை நீர் உட்பட எல்லாரும் கூத்து எண்டியள் புரியதோ.

***கா.பூ:-*** சரி ஐயா.. முல்லைத்தீவையும் அரசு தன்ர கட்டுப்பாட்டுக்குள்ள கொண்டு வந்தாப் பிறகு தங்களுடைய நெக்ஸ்ட் ஸ்டெப் என்னவாக இருக்கும்.

***சம்:-*** அந்தக் கதை ஒருவகையில ராணிக்கு பிடித்தமான பழம் கொண்டுபோன கதை மாதிரித்தான் இருக்குது. நான் எல்லாம் சாதாரணமான பழம்தான் கொண்டுபோனனான், கூட்டமைப்பில பல பேர் நான் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் பலாப்பழம், அன்னாசிப்பழம் எண்டு பெரிய பெரிய பழமாகக் கொண்டு போனவை. ஆகவே அவைக்குத்தான் பிரச்சினை இருக்கும். எனக்கு பொலிரிக்ஸில ஒரு பாரம்பரியம் இருக்குது. நான் நீந்திப் போடுவன். குதிரையோடி வந்த மாதிரியானவைக்குத்தான் இருக்கு ஆப்பு எண்டு நினைக்கிறன்.

***கா.பூ:-*** நீந்தத் தெரியும் எண்டு சொல்லுற விஷயமானது. நாளைக்கே பல்டி அடிச்சு பழைய கூட்டணியோடையோ இல்லாட்டில் புதிய கிழக்குக் கட்சியோடையோ கூட்டாகிப் போடுவதா.

***சம்:-*** அதைச் சொல்ல முடியாது. இயக்கத்தைப் படைத்தரப்பு எந்தளவுக்கு நொறுக்கி விடுகினமோ அந்தளவிலதான் என்ர டிசிசனும் இருக்கும்.

நானே கிடுக்கலக்கத்தில பகவத் கீதையில சொன்னதைச் சொல்லிக்கொண்டு சமாதானமாக இருக்கிறன். இடையில நீர் வேறை வயித்தில புளியைக் கரைக்கிறீர். வயசாளி எண்டதுக்காகத் தன்னும் வம்பு பண்ணாமல் இருப்போமே எண்ட மெனஸ் தெரியாமல் இருக்கிறீரே எண்டு செல்லமாகக் கோவிச்சாருங்கோ. அவரைத் தொல்லைப்படுத்தாமல் நானும் கப்புசிப்புங்கோ... பாய்... பாய்...

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# ஆப்ரஹாம் லிங்கன்

உலகை வியக்க வைத்தவர்கள்

**லிங்கனை** மணக்கச் சம்மதித்தாள்.

ஆனை மணந்து கொண்ட ஆப்ரஹாம் லிங்கன் ஆனந்தக் கடலில் மூழ்கினார். புத்துணர்ச்சி பெற்றார். இந்த உற்சாகத்தின் உச்சக்கட்டமாக, சட்ட சபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். விதி இங்கு மறுபடி சதி செய்தது. லிங்கன் சந்தோஷமான குடும்ப வாழ்க்கை நடத்துவதில் அதற்கு விருப்பமில்லை. அவரது மனைவி ஆன் ருட் லெஜ் 1836-ஆம் ஆண்டு கோடையில் நோய்வாய்ப்பட்டாள். ஆகஸ்ட் 25 இல் காலமானாள். லிங்கனின் காதலும், கலியாணமும், மனைவியின் மரணமும் அவரது குணங்களையும் செயல்களையும் சிதறடித்துவிட்டன.

தம் துக்கத்தையும் வேதனையையும் மறக்க அரசியலில் தீவிர கவனம் செலுத்தினார் அபி. தமது இருபத்து எட்டாம் வயதில் லிங்கன் தம்மை ஒரு வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டார். நியூசேலம் நகரிலிருந்து ஸ்பிரிங்:. பீல்டுக்குக் குடியேறினார். அவருடைய வக்கீல் வருமானம், தனி வீட்டில் வசிப்பதற்குப் போதுமானதாக இல்லை. தம் அலுவலக அறையிலேயே ஒரு சிறு கட்டிலில் படுத்து உறங்கி வந்தார். மீண்டும் சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் லிங்கன்.

மனைவி ஆன் இறந்து நான்கு ஆண்டுகளுக்குப் பின், மேரி டோடு என்னும் பெண்ணை 1839 நவம்பர் 4-ஆம் திகதி மணந்துகொண்டார் அபி. மேரி சுமாரான அழகியானாலும் துறுதுறுப்பான செயலும் கலகலப்பான பேச்சும் கொண்டவள், நல்ல குடும்பத்துப் பெண். லிங்கனின் திறமைகளை உணர்ந்து அவரைப் போற்றி வந்தாள். மனைவி மேரியின் ஒத்துழைப்பும் அளித்த உற்சாகமும் லிங்கனை அரசியலில் துரிதமாக முன்னேற உதவின. அபி-மேரி தம்பதிகளுக்கு மூன்று பிள்ளைகள்- ராபர்ட்,வில்லி, டாட்- பிறந்தனர். ஆயுட் காலம் முழுவதும் லிங்கன் தம் மனைவியிடமும் குழந்தைகளிடமும் பாசமும் அன்பும் காட்டி மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்.

லிங்கன் தம் வக்கீல் தொழிலில் முன்னேறினார். நியாயமான வழக்குகளையே வாதாட ஏற்றுக் கொண்டார். இதனால் அபிக்கு நல்ல பெயர் ஏற்பட்டது. அமெரிக்க காங்கிரஸ் மகாசபைக்கு, மிக அதிகமான ஓட்டுக்கள் பெற்று 1846-இல் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடிமை ஒழிப்புச் சட்டத்திற்கு ஆதரவாக, அச்சமின்றித் தன் அபிப்பிராயங்களை வெளியிட்டார். அடிமை ஒழிப்புக்கு ஆதரவாகவும் எதிர்த்தும் ஒவ்வொரு மாகாணத்திலும் சொற்போர் நிகழ்ந்தன. இக்கூட்டங்களில் லிங்கன் தன் அபிப்பிராயங்களை ஆணித்தரமாக எடுத்துரைப்பார். சபையில் ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம் நிலவும். இப்படி மூன்று மணி நேரம் பேசுவார் அபி. அவர் பேசி முடிந்ததும் இடி முழக்கமென கரகோஷம் எழும். கோஷ்டி மோதல்கள் ஏற்பட்டு கலவரங்களாகி, தெருக்களில் இரத்த ஆறு ஓடியது, பத்திரிகாலயங்களும் பொது நிறுவனங்களும் தாக்கப்பட்டு சூரையாடப்பட்டன.

குடியரசுக் கட்சி 1856 இல் உருவாயிற்று. இக்கட்சியின் உப தலைவராக ஆப்ரஹாம் லிங்கன் தேர்ந்தெடுக்கப்பட்டார். தம் கட்சியின் கொள்கைகளை விபரித்து, பல நகரங்களிலும் மாபெரும் பொதுக்கூட்டங்களிலும் லிங்கன் உணர்ச்சிகரமாக உரையாற்றி, மக்களின் கவனத்தைக் கவர்ந்தார். இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு தம் அபேட்சகராக ஆப்ரஹாம் லிங்கனைக் குடியரசுக் கட்சி அறிவித்தது. கடுமையான, தேர்தல் பிரசாரம் தொடங்கியது.

வியப்புக்கள் தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணம்

## குடிசைகளற்ற நகரமாக பொலிவு பெறுகிறது...

நகர குடிசைகள் அபிவிருத்திக்காக 10 மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சனசமூக அமைப்புகள் மற்றும் குடிசைவாசிகளின் ஒத்துழைப்புடன் வீடமைப்புத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்வதற்கும் அவ்வாறான திட்டங்கள் சம்பந்தமாக எவரேனும் ஒருவர் மேற்கொள்ளும் செலவுக்காக வரிச்சலுகை வழங்குவதற்கும் சிபாரிசு செய்கிறேன்.

**- மேன்மைதங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ**



சகல ஏழைக் குடும்பங்களுக்கும் ஒவ்வொரு வீடு பெற்றுக் கொடுக்கும் மேன்மைதங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் உயர்ந்த எண்ணக் கருவின்படி மஹிந்த சிந்தனையின் கொள்கையை யதார்த்தமாக்கும் நகர அபிவிருத்தி மற்றும் புண்ணியத்தல அபிவிருத்தி அமைச்சின் நகர வீட்டு அருணோதய நிகழ்ச்சி நிரலின் மூலம் நகர மற்றும் சிறுநகரப் பிரதேசங்களின் குடிசைகளிலும் மற்றும் சீரற்ற வீடுகளிலும் வசிக்கும் மக்களுக்காக நாடு முழுவதிலும் செயற்படுத்தப்படும் புதிய வீடுகள் அமைக்கும் செயற்பாடு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

குடிசைகளற்ற நகரம் என்ற எண்ணக்கருவின் கீழ் யாழ் நகரமும் இந்த வீட்டு அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் உள்வாங்கப்பட்டுள்ளது.

கொடிய பயங்கரவாதத்தின் செயற்பாடுகளுக்கு மத்தியில் பல தசாப்தங்களாக பாதிப்புக்குள்ளான வடபகுதி மக்களுக்கு, ஜனநாயகத்தின் சுதந்திரம் உதயமாகிக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் வழிகாட்டலில், யாழ் நகரம் குடிசைகளற்ற நகரமாக மாற்றும் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். தெற்கைப் போன்று வடபகுதி மக்களும் மஹிந்த சிந்தனையின் கீழ் அபிவிருத்தியின் அனுகூலத்தைப் பெற்றுக் கொள்வதற்கு வழி சமைக்கப்பட்டுள்ளது.

யாழ். மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கக் கூடிய எல்லாவிதமான அனுகூலங்களையும் அவர்களுக்குப் பெற்றுக் கொடுத்து யாழ் மக்களுடன் மிக நெருக்கமாக வாழும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக எதிர்கொள்ளும் சிரமம் பராட்டுக்குரியதாகும்.

எமது அமைச்சின் தலைமையில் உள்ளூராட்சி நிறுவனங்கள், சமூக அமைப்புக்கள் மற்றும் மக்கள் அனைவருமாகச் சேர்ந்து நாடு முழுவதிலும் செயற்படும் இந்த நிகழ்ச்சி நிரல் யாழ். நகரத்திலும் செயற்படுவது ஒரு புதிய நடவடிக்கையாகும்.

மஹிந்த சிந்தனையின் மேன்மையான நோக்கத்தை அமுலாக்கி செயற்படுத்தப்படும் இந்த அபிவிருத்திச் செயற்பாட்டிற்கு பங்காளர்களாகும் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**தினேஸ் குணவர்தன**
நகர அபிவிருத்தி மற்றும் புண்ணியஸ்தல அபிவிருத்தி அமைச்சர்



மஹிந்த சிந்தனையின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு வீடு வழங்கும் செயற்திட்டம், நகரப்பகுதிகளில் குடிசைகள் மற்றும் சேரி வீடுகளுக்கு பதிலாக நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சின் அருணோதய வறியோர் வீட்டு வேலைத்திட்டத்தின் மூலமும், வேறு பல செயற்திட்டங்களின் மூலமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் பிரகாரம் மேன்மைதங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் 2008 வரவு - செலவுத்திட்ட உரையில் குறிப்பிட்டவாறும், ஐக்கிய நாடுகள் அமைப்பின் முக்கிய அபிவிருத்தி இலக்கைக் குறிக்கோளாகக் கொண்டும், இலங்கையிலுள்ள நகரங்களை குடிசைகளற்ற நகரங்களாகப் பரிணமிக்கச் செய்யும் வேலைத்திட்டத்திற்குள் யாழ் நகரையும் உட்படுத்தி யாழ் நகரை குடிசைகளற்ற நகரமாக மாற்றுவதற்கு நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ தினேஷ் குணவர்தனவும், நானும் கைச்சாத்திட்டுள்ள உடன்படிக்கை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்திற்கு யாழ் மாநகர சபையின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படும். இரு தசாப்த காலத்திற்கு மேலாக நடந்த யுத்தத்தினால் அழிவுற்றிருக்கும் யாழ் நகரத்தையும், குடிசைகளற்ற நகரமாக மாற்றுவது ஒரு மாபெரும் காரியமாகும். இந்தத் திட்டத்தை நிறைவு செய்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சருக்கும், அமைச்சின் செயலாளருக்கும் மற்றும் அமைச்சு அதிகாரிகளுக்கும், யாழ். மாநகர சபைக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அதன் மூலம் பயனடையப்போகும் யாழ் மாநகர மக்களுக்கு எனது வாழ்த்துக்களை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டக்ளஸ் தேவானந்தா பா.உ.**
செயலாளர் நாயகம் – ஈ.பி.டி.பி.
சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்
தலைவர் வட மாகாண விசேஷட செயலணி



நிலைத்து நிற்கும் நகர அபிவிருத்தி ஒன்றை உருவாக்கி அதன் மூலம் நகரப் பகுதிகளில் வாழும் வறிய மற்றும் வசதி குறைந்த சமூகத்திற்கும் வேண்டிய வசதிகளை வழங்குவது நமது கடப்பாடாகும். அந்தப் பொறுப்பினை முன்வைத்து மேற்கொள்ளப் படும் இவ்வாறான திட்டங்கள் மூலம் நகரில் வாழும் வறிய மக்களின் வீட்டுப்

**பேராசிரியர் வீ. ராமானுஜம்**
செயலாளர் – நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சு





மஹிந்த சிந்தனையின் கீழ் குடிசைகளற்ற நகரங்களை அமைக்கும் வேலைத்திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ள யாழ் நகரம் சம்பந்தமான ஒப்பந்தத்தை அண்மையில் நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத்திற்கான விசேட செயலணித் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களும் அலரி மாளிகையில் கைச்சாத்திடும் நிகழ்வு... மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா அவர்களும் நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி வீ. ராமானுஜம் அவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தை அமைச்சர் பரிமாறிக் கொள்ளும் போது...

வறியோர்களுக்கான நகர வீடமைப்புத் திட்டம் அருணோதய

**நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சு**

3ம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 06, வெள்ளவத்தை நெல்சன் பிளேஸ், 16A, ஆம் இலக்கத்தில் டிடி எண்டபிரைஸஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் நாவலையில் உள்ள சமனல கிராபிக்ஸ் அச்சகத்தில் ஜன. 22 திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

# இது எமது பூமி! எமது அரசாங்கம்! நாம் முன்னேறுவோம்
# என்கிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

இது எமது பூமி. எமது அரசாங்கம். நாம் ஒன்றுபட்டு உழைத்து எமது தேசத்தைக் கட்டியெழுப்புவோம். இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தென்மராட்சிப் பிரதேச மக்கள் முன்னிலையில் உரையாற்றும்போது தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் தொடர்பான விரிவான கலந்துரையாடல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களினால் பிரதேச ரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கான முதலாவது கலந்துரையாடல் கடந்த 19.01.2009 ஆம் இடம் பெற்றது.

இதில் தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள சகல பொது அமைப்புக்களான மாதர் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், விவசாயக் கடற்றொழில் தென்னை பனை வள அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் ஏனைய சங்கங்கள், சம்மேளனங்கள் என்பவற்றின் பிரதிநிதிகளுமாக நூற்றுக்கணக்கானோர் பங்குகொண்டனர்.மேலும் தென்மராட்சிப் படைகளின் கட்டளை அதிகாரி சார்பில் பிரதேச பாதுகாப்புப் படைகளின் பொதுசன தொடர்பு அதிகாரி கேணல் லியனாராட்சி, தென்மராட்சிப் பிரதேச செயலாளர் ஸ்ரீனிவாசன், தென்மராட்சிப் பிரதேச சபைச் செயலாளர், சாவகச்சேரி நகரசபைச் செயலாளர், சுகாதார மின்சார போக்குவரத்து மற்றும் ஏனைய துறைகள் திணைக்களங்களின் அதிகாரிகளுடன் தென்மராட்சி பிரதேச கிராம உத்தியோகத்தர்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்களும் பங்குகொண்டனர்.

தென்மராட்சிப் பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தமது கருத்துக்களைச் சுதந்திரமாகவும் தயக்கமின்றியும் தெரியப்படுத்தும்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கேட்டுக் கொண்டார். இதனை அடுத்து பெருமளவிலானோர் தமது கோரிக்கைகளையும் கருத்துக்களையும் முன்வைத்தனர்.

தற்போது பூநகரி விடுவிக்கப்பட்டு புலிகளின் அச்சுறுத்தல் நீங்கியுள்ள நிலையில் தென்மராட்சிப் பிரதேசத்திற்குட்பட்ட தனங்கிளப்பு, மறவன்புலோ ஆகிய பகுதிகளில் தம்மை மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும் என அப்பகுதிக் குடியிருப்பாளர்களின் சங்கப் பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டனர்.

இது தொடர்பாகப் பாதுகாப்பு அதிகாரியின் கருத்தும் பெறப்பட்ட நிலையில் அங்கு மிதிவெடிகள், கண்ணிவெடிகள் என்பன பூரணமாக அகற்றப்பட்டுள்ளதை உறுதி செய்து விரைவில் மீளக்குடியேறக் கூடிய சாதகமான சூழ்நிலை குறித்து ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதுடன் மீள் குடியேற்றம் தொடர்பான விரிவானதோர் கலந்துரையாடல் ஒன்று விரைவில் நடத்தப்படும் எனவும் அமைச்சரவர்கள் அங்கு தெரிவித்தார்.

தென்மராட்சியில் விவசாயத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ள காட்டுப் பன்றிகளின் தொல்லை குறித்து விவசாயிகளினால் விசனம் தெரிவிக்கப்பட்டது. இதற்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், ஏற்கனவே பாதுகாப்புத் தரப்பினர் பொலிஸாருடன் கலந்தாலோசிக்கப்பட்டதன் பிரகாரம் பிரதேச இளைஞர்களை உள்ளடக்கிய ஊர்காவல் படை ஒன்று அமைக்கப்படும் எனவும் அந்தப் படையானது காட்டுப் பன்றிகளை மட்டுமல்லாமல் கள்ளச் சாராய விற்பனை, கசிப்பு உற்பத்தி, கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதன் மூலம் சட்டம் நீதியை நிலைநாட்ட உதவும் எனத் தெரிவித்தார். அமைச்சரின் மேற்படி திட்டத்தைக் கூடியிருந்த அனைவரும் ஏகமனதாக வரவேற்றனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தின் பிரச்சினைகளை ஆராயும் கலந்துரையாடலின் தொடர்ச்சியாகப் பிரதேச சுகாதார மின்சாரப் போக்குவரத்து, வீதித் திருத்தம், நீர் விநியோகம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாகப் பல கருத்துக்கள் அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டு அங்கு சமுகமளித்திருந்த அந்தந்தப் பிரிவு உயரதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்தி, அதன் தேவைகள், பிரச்சினைகள் தொடர்பான மேற்படி கலந்துரையாடல் மிகவும் பிரயோசனமானதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் இடம்பெற்றதாகப் பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் திருப்தியுடன் தெரிவித்ததுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு நன்றி கூறி விடைபெற்றுச் சென்றனர்.

## யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை தொடர்பாகக் கலந்துரையாடல்

யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை சார்ந்த உயர் மட்டக் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. கடந்த திங்கட்கிழமை மாவட்டத்தின் பல்வேறு விளையாட்டுத்துறைசார் நிபுணர்களும், ஆர்வலர்களும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடியதன் தொடர்ச்சியாகவே இவ்வுயர்மட்டக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. குறிப்பாக எதிர்வரும் சித்திரைத் தமிழ் புத்தாண்டினை முன்னிட்டு பாரம்பரிய மற்றும் ஏனைய விளையாட்டுப் போட்டிகளைத் திட்டமிட்டுத் திறம்பட நடாத்துவது தொடர்பாக ஆராயப்படும் என இங்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழர் தம் பாரம்பரிய விளையாட்டுக்களான மாட்டுவண்டிச் சவாரி, தாச்சி, உள்ளிட்ட கிராமிய விளையாட்டுக்களுடன் சைக்கிளோட்டம், மரதன், நீச்சல் உள்ளிட்ட அனைத்து போட்டிகளையும் நடாத்துவது என்றும் கால்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், ஹொக்கி, கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களை மாவட்ட மட்டத்தில் மேம்படுத்தி தேசியப் போட்டிகளுக்குத் தயார்படுத்துவது தொடர்பாகவும் 26 ஆம் திகதி ஆராயப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்றைய விளையாட்டுத்துறை சார்ந்த ஆர்வலர்கள் மற்றும் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இது எமது பூமி. எமது அரசாங்கம். நாம் ஒன்றுபட்டு உழைத்து எமது தேசத்தைக் கட்டியெழுப்பும்போது விளையாட்டுத் துறையினையும் மேம்படுத்துவோம் என தெரிவித்தமை விஷேட அம்சமாகும்.

## யாழ் நகரில் சிரமதானப் பணியில் ஈ.பி.டி.பி

'அழகிய யாழ் நகரை உருவாக்குதல்' என்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் செயற்றிட்டத்தின் கீழ் பொதுமக்களின் பங்களிப்புடனான் தொடர் சிரமதானப் பணிகள் தற்சமயம் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

யாழ். நகரிலுள்ள கொட்டடி சோளபுரம், மற்றும் பொம்மைவெளிப் பகுதிகளில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முன்னாள் வேலணைப் பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பி. முக்கியஸ்தருமான கருணாகர குருமூர்த்தி மோகன் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேற்படி சிரமதானப் பணிகளில் ஈ.பி.டி.பி.யின் யாழ். நகர முக்கியஸ்தர்களும் முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினர்களுமான கனகரட்ணம் மாஸ்டர், றீகன், மங்களநேசன், ஆகியோருடன் பொதுமக்கள் தொடர்பாளர்களான கோமகன், துரைமுரளி ஆகியோரும் பெருமளவு பொதுமக்களும் ஈ.பி.டி.பி. தொண்டர்களும் ஆர்வத்துடன் முன்வந்து சிரமதானப் பணிகளில் பங்குபற்றினார்கள்.

## புலிகளிடம் இருந்து தப்பி வந்த பொதுமக்களுக்கு ஈ.பி.டி.பி. உதவிகள்

யாழ். குடாநாட்டின் தென்பகுதி புலிகளின் ஆக்கிரமிப்பிலிருந்து முற்றாக விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் புலிகளின் ஆக்கிரமிப்பில் சிக்கியிருந்த பொதுமக்கள் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குப் பாதுகாப்பாக வந்தடையத் தொடங்கியுள்ளனர்.

பளை, சோரன்பற்று, மாசார், தர்மக்கேணி, செம்பியன்பற்று போன்ற இடங்களிலிருந்து இராணுவத்தினரால் மீட்கப்பட்ட பொதுமக்கள் கொடிகாமம் திருநாவுக்கரசு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு அவர்களின் அத்தியாவசியத் தேவைகள் நிறைவேற்றப்பட்ட நிலையில் தற்போது மிருசுவில் தேவாலயம் மற்றும் மிருசுவில் அரசினர் பாடசாலை உள்ளடங்கிய வளாகத்தில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேற்படி நூற்றுக்கணக்கான பொதுமக்கள் வந்தடைந்ததிலிருந்து அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதிலும் அவர்களுக்கு வேண்டிய அவசியத் தேவைகளை வழங்குவதிலும் அங்கு ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் தொடர்ச்சியான பணிகளில் ஈடுபட்டுள்ளனர். சாவகச்சேரியில் அமைந்துள்ள தென்மராட்சி ஈ.பி.டி.பி. தலைமைப் பணிமனையில் இதற்கென விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் கூடியளவு தொண்டர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மீன்பிடி டிப்ளோமா பட்டதாரிகளுடன் அமைச்சர் டக்ளஸ் சந்திப்பு



பட்டதாரிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்தபோது...

தமது வேலைவாய்ப்பு நியமனம் தொடர்பில் யாழ். மாவட்ட மீன்பிடி விஞ்ஞான டிப்ளோமா பட்டம்பெற்றோர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்து கலந்துரையாடி உள்ளனர். மீன்பிடி டிப்ளோமா பட்டம் பெற்ற தமக்கு உரிய வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருமாறு அவர்கள் விடுத்த கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், மீன்பிடியியல் ஆசிரியர்களாக அல்லது மீன்பிடி நீரியல் வளத்துறை அலுவலர்களாக அவர்கள் பணியாற்றுவதற்கேற்ற நிலைமையினை ஆராய்ந்துள்ளதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் கலந்துரையாடி உள்ளார். இவ்விடயம் தொடர்பாக விரைவில் தான் உரிய தீர்வொன்றினைப் பெற்றுத்தருவதாகவும் மீன்பிடி விஞ்ஞான டிப்ளோமா பட்டம் பெற்றோருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் உறுதியளித்துள்ளார்.

## யாழ். கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்கு நிதியுதவி

யாழ். கல்வியியல் கல்லூரி மாணவர்களின் கோரிக்கை தொடர்பில் தாம் ஏற்கனவே உறுதியளித்திருந்ததன் பிரகாரம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நிதியுதவி வழங்கியுள்ளார்.

யாழ். தேசியக் கல்வியியல் கல்லூரி மாணவ மாணவியர்கள் அனைவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்து விரிவாகக் கலந்துரையாடியிருந்தனர். மேற்படி கலந்துரையாடலின்போது மாணவர்களினால் பல்வேறு தேவைகள், வேண்டுகோள்கள் என்பன அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் முன்வைக்கப்பட்டன. தற்போது இம்மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற உணவிற்காக நிதி ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லை என்ற விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோது இது இலங்கை முழுவதற்குமான பிரச்சினை என்றும் ஆயினும் யாழ். குடாநாட்டில் விலை அதிகரிப்பினை கருத்திற்கொண்டு ஏ 9 தரைப்பாதை திறக்கப்பட்டு சுமுகநிலை ஏற்படும் வரையிலும் அதற்கான மாற்று ஏற்பாடு செய்து தருவதாக அமைச்சர் தெரிவித்தார். இதற்காக மகேஸ்வரி அறக்கட்டளை நிதியத்தினூடாக உணவிற்கான மேலதிக நிதியை மாணவர்களுக்குப் பெற்றுத்தருவதாக அவர் தெரிவித்திருந்தார்.

மேலும் கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களுக்கும், விளையாட்டுத்துறை சார்ந்த ஏனைய ஏற்பாடுகளுக்கும் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் தற்போது உடனடியாகச் சில விளையாட்டு உபகரணங்களை மகேஸ்வரி அறக்கட்டளை நிதியத்தின் மூலம் பெற்றுத்தருவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் உறுதியளித்திருந்தார்.

தாம் உறுதியளித்திருந்ததன் பிரகாரம் யாழ். கல்வியியல் கல்லூரி மாணவர்களின் உணவுத் தேவைக்கு, மேலதிகமாகத் தேவைப்படும் நிதியினைக் கல்விக் கல்லூரிப் பதிவாளர் சிவநாதனிடமும், மாணவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விளையாட்டு உபகரணங்களின் சந்தை விலை மதிப்பீட்டுப் பெறுமதியை மாணவர் பிரதிநிதிகளிடமும் கடந்த திங்கட்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கையளித்தார். மேற்படி நிதியுதவியானது மகேஸ்வரி அறக்கட்டளை நிதியத்தினூடாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நிதியுதவியைப் பெற்றுக்கொண்ட மாணவப் பிரதிநிதிகள் யாழ். கல்விக் கல்லூரி சமூகம் சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்குத் தமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

## சதோச பணியாளர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் சந்திப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிய சதோச எனப்படும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் பணிபுரிந்த ஊழியர்கள் அமைச்சர் ட்க்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்து தமது தற்போதைய நிலைமைகளை எடுத்துக் கூறியுள்ளனர்.

முன்னர் யாழ் நகரில் இயங்கிய கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் பணிபுரிந்த மேற்படி ஊழியர்கள் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அசாதாரணமான நிலைமையின் பின்னர் தொழில் இழந்து கஷ்டப்படுவதாகத் தெரிவித்தனர். இந்நிலையில் அங்கு வைத்து யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவசுவாமியுடன் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கூட்டுறவுத்துறை அமைச்சருடனும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஊழியர்களின் நிலைமையினை தெளிவுபடுத்தினார்.

இச்சந்திப்புக்களை அடுத்து யாழ். கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினை மீள இயங்க வைப்பதற்குரிய சாதகமான நிலைமைகள் ஏற்படுத்தப்படும் எனத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஊழியர்களின் கோரிக்கைகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில்
# வடமாகாண அபிவிருத்தி தொடர்பான உயர்மட்ட மாநாடு!


வடமாகாண அபிவிருத்தி தொடர்பான மாநாட்டின் போது...

வடக்கு மாகாணக் கல்வி அபிவிருத்தி தொடர்பான முக்கிய மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகி இடம்பெற்றுள்ளது.

சமூக சேவைகள் அமைச்சரின் யாழ். பணிமனை மாநாட்டு மண்டபத்தில் அன்றையதினம் காலை ஆரம்பமான மேற்படி மாநாட்டில் வடமாகாண பிரதம செயலாளர் ரங்கராஜா, வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோ, திட்டப்பணிப்பாளர், ஆகியோருடன் சமூகசேவைகள் அமைச்சின் அதிகாரிகள், வடமாகாண உயரதிகாரிகள், யாழ். மேலதிகக் கல்விப் பணிப்பாளர் செல்வரட்ணம் மாஸ்டர் மற்றும் 5 வலயக்கல்விப் பணிப்பாளர்கள் உட்பட முன்னாள் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பொன். பாலசுந்தரம் பிள்ளை உள்ளிட்ட கல்வித்துறை சார்ந்த முக்கியஸ்தர்களும் பங்குகொண்டனர்.

மாநாட்டினை ஆரம்பித்துவைத்து தலைமையுரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், வடமாகாணத்தின் பிரச்சினைகள் குறித்து ஆராயும் முகமாக தனது அழைப்பின் பேரில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருக்கும் வடமாகாண நிர்வாக உயரதிகாரிகளைக் குடாநாட்டின் மக்கள் சார்பாக வரவேற்பதாகத் தெரிவித்ததுடன், எமது சமூகத்தின் முன்னேற்றம் கருதி வட மாகாணத்தில் நிலவும் பிரச்சினைகள் குறித்துச் சுதந்திரமாக ஆராய்ந்து நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளைக்காண வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து வடமாகாண பிரதம செயலாளர் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரும் விஷேட உரையாற்றினார்கள். தொடர்ந்து இடம்பெற்ற மாநாட்டில் புதிய ஆசிரிய நியமனங்கள், தேசியக் கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய ஆசிரியர்களது நியமனம், இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களது நியமனங்கள். வடமாகாணத்தில் காணப்படும் ஆங்கிலக்கல்வி, உடற்கல்வி போன்ற பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களிற்கு பெருமளவு வெற்றிடங்களும் அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளும், ஆசிரிய இடமாற்றம், உள்ளிட்ட ஆசிரியர்கள் தொடர்பான பிரச்சினைகள் விரிவாக ஆராயப்பட்டன.

மேலும் கல்விசாரா ஊழியர்களது பற்றாக்குறை, சிற்றூழியர்கள் தொடர்பான வெற்றிடங்கள், நீண்டகாலமாக அபிவிருத்திச் சங்க நிதியில் கடமையாற்றிவரும் சிற்றூழியர்கள், நூலக உதவியாளர், ஆய்வுகூட உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர்கள் போன்ற பதவிகளின் வெற்றிடங்கள், கல்வி நிர்வாக சேவை அதிபர்கள் தொடர்பிலான பிரச்சினைகள், மற்றும் பௌதிக வளங்கள் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டு முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்மாநாட்டின் இறுதியில் கருத்துத் தெரிவித்த வட மாகாண பிரதம செயலாளர், ரங்கராஜா அவர்கள் வடக்கின் அபிவிருத்தி குறித்து இன்றைய கால கட்டத்தில் மிகுந்த அக்கறையுடன் தீவிரமான சிந்தனையுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்ததுடன் கல்வித்துறை சார்ந்த பல்வேறு விடயங்கள் குறித்துத் தெளிவுபடுத்தினார்.

மேற்படி உயர்மாநாட்டில் கல்வித்துறை சார்ந்த விடயங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டதற்கு மேலதிகமாக ஏனைய விடயங்கள் குறித்துத் தனித்தனியாக அடுத்தடுத்த கட்டங்களில் ஆராயப்பட்டு நடைமுறைச் சாத்தியமான தீர்வுகள் எடுக்கப்படவுள்ளதாக வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோ மாநாட்டின் முடிவில் தெரிவித்துள்ளார்.

## உலக உணவுத்திட்ட அதிகாரிகளுடன் அமைச்சர் டக்ளஸ் பேச்சுவார்த்தை


உலக உணவுத்திட்ட உயரதிகாரிகள் கடந்த சனிக்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்துப் பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடி உள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பணிமனையில் அன்று மாலை (17.01.2009) இடம்பெற்ற இச்சந்திப்பில் உலக உணவுத்திட்ட இலங்கைக்கான பணிப்பாளர் அட்னன் கான் (Mr. Adnan Khan) உலக உணவுத்திட்ட யாழ்ப்பாண வதிவிட பிரதிநிதி செல்வி ஸின்மின் ஸாஓ (Ms. Xinmin Zhao) ஆகியோருடன் வடமாகாண பிரதம செயலாளர் ரங்கராஜா வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோ, யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஷ், யாழ். திட்டப் பணிப்பாளர் பிரதீபன் ஆகியோரும் பங்குகொண்டனர்.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்குக் கல்விக்காக உணவு வழங்கும் செயற்றிட்டத்தின் முன்னேற்றங்கள் அதனை மேம்படுத்தும் செயற்பாடுகள் குறித்து இச்சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது. முன்னதாக வடபகுதியில் கடந்த நவம்பர் மாத இறுதியில் ஏற்பட்ட அடைமழை காரணமாக ஏற்பட்ட பெருவெள்ளத்தினைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ள அனர்த்த நிவாரண நடவடிக்கைகளில் தேவையான நிவாரண உதவிகளை உலர் உணவாக வழங்குவதுடன் அவசர திருத்த வேலைகளிலும் நடவடிக்கைகளிலும் தமது பங்களிப்பினை வழங்கவுள்ளதாக உலக உணவுத்திட்ட பிரதிநிதிகள் கொழும்பில் வைத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு உறுதியளித்திருந்தமை தெரிந்ததே.

உலக உணவுத்திட்டமானது வடபகுதி மக்கள் மற்றும் மாணவர்கள் மீது கொண்டுள்ள அக்கறை மற்றும் மேற்கொள்ளவிருக்கும் உதவிகள் என்பவற்றுடன், கடந்த பல வருடங்களாக இலங்கையில் மேற்கொண்டுவரும் மனிதாபிமான உதவிகள் குறித்துத் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், விரைவில் தரைப் பாதை திறக்கப்பட்டு அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கும் மீள்கட்டமைப்பு மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்குச் சர்வதேசத் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து உலக உணவுத்திட்டமும் வழங்கவிருக்கும் ஒத்துழைப்பும் உதவிகளும் குடாநாட்டு நிவாரண நடவடிக்கைகளில் பெரிதும் உதவும் என்ற நம்பிக்கையினையும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர்கள் நாவற்குழி வீடமைப்புத் திட்டத்திற்கு விஜயம்


வீடமைப்புத் திட்டத்திற்கு விஜயம் செய்த ஈ.பி.டி.பி. முக்கியஸ்தருடன் மக்கள்...

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தொடர் நடவடிக்கையினால் மீள் உருவாக்கப்பட்டுள்ள நாவற்குழி 300 வீட்டுக் குடியேற்றத்திட்டப் பகுதிக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர்கள் நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டுள்ளனர்.

அக்குடியேற்றத்திட்ட மக்களின் அழைப்பின் பேரிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பணிப்பின்பேரிலும் ஈ.பி.டி.பி. தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரட்ணம் 'கிபி' ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளர் சார்ள்ஸ், ஈ.பி.டி.பி.யின் சாவகச்சேரிப் பொறுப்பாளர் விக்னேஷ் ஆகியோரே மேற்படி விஜயத்தை மேற்கொண்டவர்களாவர்.

மேற்படி குடியேற்றத் திட்டத்திலுள்ள சான்றோர் சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் அப்பகுதி வாழ் மக்களுடன் சந்திப்பினை நடாத்திய ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர்கள் அவர்களது தேவைகள் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடி உள்ளனர். இச்சந்திப்பின் போது குடியேற்றத்திட்ட வாசிகள் பலரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தமது நலனில் காட்டிவரும் கரிசனைக்குத் தமது மனமார்ந்த நன்றிகளை ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர்களுடாகத் தெரியப்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறும் காலம் தொலைவில் இல்லை

### - ஈ.பி.டி.பி. யாழ். இணைப்பதிகாரி -

வடமராட்சியில் யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கென அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்ட அங்குரார்ப்பண வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (18.01.2009) குடத்தனையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் சார்பில் அவரது யாழ். இணைப்பதிகாரி உதயன் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் சிவசுவாமி முன்னாள் வடமராட்சி கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் ஐயாத்துரை சிறி ரங்கேஸ்வரன் ஈ.பி.டி.பி. வடமராட்சி அமைப்பாளர் பிரகாஷ் ஆகியோருடன் அரச, அரச சார்பற்ற நிறுவன முக்கியஸ்தர்களும் பெருந்திரளான மக்களும் இந்நிகழ்வில் பங்குகொண்டனர்.

யுத்தத்தால் இடம்பெயர்ந்து அல்லல்பட்ட மக்களுக்குத் தொண்டு நிறுவனங்கள் அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளன. அதன் தொடர்ச்சியே நாகர்கேயில் தெற்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான வீடுகள் கையளிக்கும் வைபவமாகும் என எஸ்.எ.உதயன் அவர்கள் வடமராட்சி கிழக்குக் குடத்தனைப் பொலிகண்டிப் பிரதேசத்தில் ஐ.நா.வின் தொண்டு நிறுவனமொன்றினால் அமைக்கப்பட்ட மேற்படி வீடுகளை கையளிக்கும் வைபவத்தில் தெரிவித்தார்.

மேலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், கொடிய யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வை ஏற்படுத்த அயராது உழைத்து வருகின்றார். எமக்கு மக்கள் பிரதிநிதித்துவம் அதிகமாக இருப்பின் நாம் இன்னும் விரைவாகவும் விவேகமாகவும் எமது மக்களுக்கான பணியை முன்னெடுக்க முடியும். எனவே மக்களாகிய நீங்கள் மக்கள் தேவைகளை அடையாளம் கண்டு அவர்களைப் பலப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்த உதயன் அவர்கள் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறும் காலம் தொலைவில் இல்லை அந்தப் பொன்னான காலத்தை விரைவில் வரவழைப்போம். தேர்தல் காலங்களில் இக்கிராமங்களில் நுழைந்தவர்கள் இன்று இப்பிரதேசம் எங்கிருக்கிறது என மறந்து விட்டார்கள் அடுத்த தேர்தல்களின் போது இனவாதக் கருத்துக்களை ஆவேசப் பேச்சுக்களுடன் இங்கு வருவார்கள். இதனை மக்கள் நன்கு அறிய வேண்டும் எனத் தெரிவித்தார்.

அமைக்கப்பட்ட வீடுகளையும் அவற்றின் குடியிருப்பாளர்களின் அழைப்பின் பேரில் முக்கியஸ்தர்கள் நாடா வெட்டி நீங்கியது போல் திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## ஏ-9 ஊடாகப் பிரயாணிகள் பஸ் சேவை

புலிகளிடம் இருந்து விடுவிக்கப்பட்ட ஏ-9 வீதியின் ஊடாகக் கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான பிரயாணிகள் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சேவையினை நடாத்துவதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதாக இலங்கைப் போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளதுடன் இதற்கென முதற்கட்டமாக 5 பஸ்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. மக்களின் போக்குவரத்திற்காக ஏ-9 பாதை திறக்கப்பட்டதும் உடனடியாகவே இச்சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## லங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரியினர் வடமாகாணசபை உயரதிகாரிகளுடன் சந்திப்பு

லங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரிச் சமூகத்தினர் கடந்த சனிக்கிழமை வடமாகாணசபை உயரதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர். ஏற்கனவே சித்த மருத்துவக் கல்லூரிப் புனரமைப்பு மற்றும் வடபிராந்திய சித்த மருத்துவத்துறை மேம்பாடு தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுடன் தொடர் பேச்சுவார்த்தைகளை நடாத்தியிருந்த யாழ். சித்த மருத்துவ சமூகத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வேண்டுகோளின் பேரில் தமக்கென ஒரு பொதுச்சபையினையும் நிர்வாக சபையினையும் தெரிவுசெய்திருந்தனர்.

இந்நிலையில் வடமாகாண பிரதம செயலாளர் உள்ளிட்ட உயரதிகாரிகளுடன் தமது தேவைகள் வேண்டுகோள்கள் அடங்கிய மகஜரினைச் சமர்ப்பித்துக் கலந்துரையாடினார்கள். அவர்களது கோரிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உயரதிகாரிகள் தெரிவித்ததுடன் சித்த ஆயுர்வேத வைத்திய முறைமையினைப் பாதுகாப்பதிலும் வளர்த்தெடுப்பதிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் காட்டிவரும் அக்கறையினையும் பெரிதும் பாராட்டியுள்ளனர். லங்கா சித்த ஆயுர்வேத மேம்பாட்டிற்காகப் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மகேஸ்வரி அறக்கட்டளை நிதியத்தினூடாக ஒரு லட்ச ரூபா நிதியுதவி வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## பல்வேறு தரப்பினரும் வடமாகாணசபை உயரதிகாரிகளுடன் சந்திப்பு

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள வடமாகாண சபை உயரதிகாரிகளைக் கடந்த சனிக்கிழமை யாழ். மாவட்டத்தில் வடமாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் பணிபுரியும் கலாசார உத்தியோகத்தர்கள், உடற்கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றோர், மீன்பிடி விஞ்ஞான டிப்ளோமா பட்டம் பெற்றோர், நியமனம் பெற்றுக்கொள்ளாத பட்டதாரிகள், ஆகியோர் சந்தித்துத் தமது நிரந்தர நியமனம் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர். அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் விரைவில் சாதகமான முடிவு பெற்றுத்தரப்படும் என வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் உறுதியளித்துள்ளார்.

## பன்றித்தொல்லையும் விரைவில் நீங்கிவிடும்

எமது மண்ணில் புலித்தொல்லை நீங்கிவிட்டது. பன்றித்தொல்லையும் விரைவில் நீங்கிவிடும். எமது செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதற்குரிய நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார். இவ்வாறு ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் உதயன் அவர்கள் தெரிவித்தார்.யாழ். குடாநாட்டின் குறிப்பட்ட சில பிரதேசங்களில் பன்றிகளின் பெருக்கமும் அதனால் ஏற்படுகின்ற பயிர் அழிவுகள் தொடர்பாகப் பல முறைப்பாடுகள் தெரியப்படுத்தப்பட்ட நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

குறிப்பாகத் தென்மராட்சி மற்றும் வலிகாமம் கிழக்குப் பிரதேசங்களில் தற்போது பல்கிப் பெருகியுள்ள பன்றிகள், பயிர்ச்செய்கை நிலங்களுக்குள் பிரவேசித்து தொடர்ச்சியாக பலத்த நாசங்களை ஏற்படுத்தி வருகின்றன. முன்னைய காலங்களில் தாம் கட்டுத்துவக்குகளின் உதவியுடன் பன்றிகளைக் கட்டுப்படுத்தி வந்ததாகத் தெரிவித்துள்ள விவசாயிகள் தற்போதைய சூழ்நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்த மாற்று வழிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என முறையிட்டுள்ளனர்.

இந்நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முயற்சியால் விரைவில் அமைக்கப்படவிருக்கும் ஊர்காவல் படைமூலம் பன்றிகளின் தொல்லை முடிவிற்குக் கொண்டுவரப்படும் என யாழ். மாவட்ட அமைப்பாளர் உதயன் அவர்கள் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org